பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-9-5





தேசியக் கவிஞர்

பாரதியார்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/51.%20%E0%AE%AE%E0%AE%95%E0%AE%BE%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%20%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%20%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

மகாகவி சுப்ரமணிய பாரதியார் (1882 - 1921)



கவிஞர், நவ கவிதை உரைநடை முன்னோடி,
விடுதலைப் போராட்ட வீரர், பத்திரிகையாளர்

பிறப்பு : 11.12.1882 (எட்டயபுரம்- தூத்துக்குடி மாவட்டம்)
மறைவு : 12.09.1921 (சென்னை)

பதினோராம் வயதில் எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் சபையில் பாரதி பட்டம். திருநெல்வேலியில் பள்ளிப்படிப்பு. அலகபாத் பல்கலைக் கழகத்தில் பட்ட நுழைவுப் படிப்பில் தேர்ச்சி. 1904இல் மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதர். பின்னர் சுதேசமித்திரன் பத்திரிகையில் உதவியாசிரியர். சக்கரவர்த்தினி மாதப்பத்திரிகையில் ஆசிரியர். 1906 இந்தியா வாரப்பத்திரிகை யின் பொறுப்பாசிரியர். பால பாரதா ஆங்கிலப் பத்திரிகைத் தொடக்கம். முதல் கவிதை நூல் ஸ்வதேச கீதங்கள் 1908இல் வெளியாகிறது. 1908 இந்தியா பத்திரிகையின் அதிகாரபூர்வ ஆசிரியர் என்ற நிலையில் பாரதிமீது ஆங்கில அரசாங்கம் கைது வாரண்டு பிறப்பிக்கிறது. புதுவைக்குத் தப்பிச் சென்று 1918வரை அங்கேயே இருந்தார். அரவிந்த கோஷ், வ.வே.சு. அய்யர் இவர்களோடு தொடர்ப்பு ஏற்படுகிறது. 1918 முதல் 1920 வரை கடையம் வாசம். நூற்றுக்கணக்கான சிறு கவிதைகளோடு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலியின் சபதம் ஆகிய தொடர்கவிதைகளையும் எழுதியுள்ளார். சின்னச் சங்கரன் கதை, ஞான ரதம், சந்திரிகையின் கதை போன்ற குறுங்கதைகளையும் பல குட்டிக்கதைகளும் எழுதியுள்ளார். தாகூரின் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

மகாகவி சுப்ரமணிய பாரதியார்
(1882 - 1921)

சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி (Subramania Bharati, திசம்பர் 11, 1882 – செப்டம்பர் 11, 1921) கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவரைப் பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைக்கின்றனர். பாரதி, தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு, நவீனத் தமிழ்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். எட்டப்ப நாயக்கர் மன்னர் இவருடைய

கவித்திறனை மெச்சி, கலைமகள் எனப் பாெருள்படும் பாரதி என்ற பட்டம் வழங்கினார். பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949-ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும். இவரை சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞர், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார். இவர் இந்தியா, விஜயா முதலான இதழ்களை நடத்தி, விடுதலைப் போருக்கு வித்திட்டவர்.

பாரதி, இந்திய வரலாற்றின் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர். பால கங்காதர திலகர், உ. வே. சாமிநாதையர், வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகான் அரவிந்தர் முதலியோர் இவரின் சமகாலத்தைய மனிதர்கள் ஆவர். இவர் விவேகானந்தரின் சீடரான, சகோதரி நிவேதிதையைத் தமது குருவாகக் கருதினார்.

வாழ்க்கைக் குறிப்பு

சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு திசம்பர் 11, 1882-இல் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள (அன்றைய திருநெல்வேலி மாவட்டம்) எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்றாலும், சுப்பையா என்று அழைக்கப்பட்டார். 1887-ஆம் ஆண்டு இலக்குமி அம்மாள் மறைந்தார். அதனால், பாரதியார் அவரின் பாட்டியான பாகீரதி அம்மாளிடம் வளர்ந்தார்.

தனது பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1897-ஆம் ஆண்டு செல்லம்மாளை மணந்தார். 1898-ஆம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையினை அடைந்தார். இதனை

எட்டயபுரம் மன்னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டார். பின்னர் எட்டையபுரம் அரண்மனையில் பணி கிடைத்தது. சில காலத்திலேயே, அப்பணியை விடுத்து காசிக்குச் சென்றார்.

1898 முதல் 1902 வரை அங்கு தங்கி இருந்தார். பின்னர் எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்து வரப்பட்டு அரண்மனை ஒன்றில் பாரதி வாழ்ந்தார். ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல் இருந்தபின்னர், 1904-ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் 'விவேகபானு' இதழில் வெளியானது. வாழ்நாள் முழுதும் பல்வேறு காலகட்டங்களில் இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். பாரதி தமிழ், ஆங்கிலம், இந்தி, சமசுகிருதம், வங்காள மொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்தார்.

இலக்கியப் பணி

தம் தாய்மொழி தமிழின்மீது அளவுகடந்த அன்புகொண்டவர். பன்மொழிப் புலமைபெற்ற பாவலரான இவர் "*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்*" எனக் கவிபுனைந்தார். சமற்கிருதம், வங்காளம், இந்தி, பிரான்சியம், ஆங்கிலத்தில் தனிப்புலமை பெற்றவர். அம்மொழிகளின் தனிச்சிறப்புமிக்க படைப்புகளைத் தமிழ் மொழியாக்கம் செய்தவர். பழந்தமிழ்க் காவியங்களின் மீது தனி ஈடுபாடு கொண்டவர். அழகியல் உணர்வும் தத்துவ சிந்தனைகளும் ஒருங்கே கொண்டவர் என்று அறியப் படுகின்றார். தேசியக் கவி என்ற முறையிலும் உலகு தழுவிய சிந்தனைகளை அழகியலுடனும் உண்மையுடனும் கவி இயற்றியதினாலும், இவர் உலகின் சிறந்த கவிஞர்களுடன் ஒப்பிடப்படும் சிறப்பு பெற்றவர் என்றும், அண்மைக்காலத் தமிழின் தன்னிகரற்ற கவியேறு என்றும் பலர் கருதுகின்றனர்.

பாஞ்சாலி சபதம்

இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப் போராகவும், பாஞ்சாலியைப் பாரத மாதாவாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்புதான் பாஞ்சாலி சபதம். அழகிய இலக்கிய நயத்தையும் மிக அழகான கவிநயத்தையும் கொண்ட தமிழின் அழியாக் காவியமாகப் பாரதியின் பாஞ்சாலி சபதம் விளங்குகிறது. பாஞ்சாலி சபதம் வியாசரின் பாரதத்தைத் தழுவி எழுதப் பெற்றது. பாஞ்சாலி சபதம் இரு பாகங்கள் உடையது. இது சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என ஐந்து சருக்கங்களையும், 412 பாடல்களையும் கொண்டது.

இதழியல் பணியும் விடுதலைப் போராட்டமும்

பாரதியார், முதலில் நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியதோடு தம் வாழ்நாளின் இறுதியிலும் ஆகத்து 1920 முதல் செப்டம்பர் 1920 வரை அவ்விதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றி மறைந்தார். சக்கரவர்த்தினி என்ற மகளிர் மாத இதழிலும் (ஆக. 1905 - ஆக. 1906), இந்தியா என்ற வார இதழில் (மே 1905 - மார்.1906 / செப். 1906, புதுச்சேரி: 10.19.1908 – 17. மே 1910), சூரியோதயம் (1910), கர்மயோகி (திசம்பர் 1909–1910), தர்மம் (பிப்.1910) என்ற இதழ்களிலும் பாலபாரத யங் இண்டியா என்ற ஆங்கில இதழிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆங்கில அரசால் தடை செய்யப்பட்ட பாரதியின் "இந்தியா" பத்திரிகை புதுவையில் வெளியானது.

தடை செய்யப்பட்ட புத்தகங்கள்

பாரதியாரின் பாடல்களைப் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டு இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த பர்மா மாகாண அரசு தடைசெய்தது. இதனைப் பின்பற்றிச் சென்னை மாகாணத்தின் காவல்துறை உத்தரவுமூலம்

பாரதியார் பாடல்கள் தடைசெய்யப்பட்டு புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை மாகாணச் சட்ட அவையில் விரிவான விவாதம் 1928-ஆம் ஆண்டு அக்டோபர் 8, 9 தேதிகளில் நடந்தது . தீரர் சத்திய மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த விவாதத்தில் இலக்கியம் சார்ந்த பல கருத்துகள் பதிவாகின.

தேசியக் கவி

எட்டயபுரத்தில் பாரதி பிறந்த வீடு தற்போது தமிழக அரசால் சீர்செய்யப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசியக் கவியாகப் போற்றப்படுகிறார். மண்ணும் இமயமலை எங்கள் மலையே... மாநிலமீதிதுபோல் பிறிதிலையே... இன்னறு நீர்க்கங்கை ஆறெங்கள் ஆறே... இங்கிதன் மாண்பிற்கெதிர் எது வேறே என்று எழுதி யவர்.தன்னுடைய தாய்நாட்டை நினைத்துப்
பெருமைகொண்டதோடு மட்டுமன்றி அதன் எதிர்காலம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற பார்வையும் பெற்றவர்.
"*வந்தேமாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்*" என்றவர், பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்றார். வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர்செய்யும் நதிநீர் இணைப்புத் திட்டத்தை விடுதலைக்கு முன்பே கனவுகண்டவர்.

புதுக்கவிதைப் புலவன்

பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடல்களின் இலக்கணக் கட்டுகளைத் தகர்த்தெறிந்தவன். இவருக்கு முன்பாகக் கவிபுனைந்த கவிஞர்கள் தொல்காப்பிய இலக்கணம் சிறிதும் வழுவாமல், பொருள்கொள், யாப்பு, அணி என இலக்கணத்தில் கட்டுண்டு கற்றோர் மட்டும் கற்றறியும் கவிதைகளையே புனைந்தனர். இலக்கணச் சட்டங்களைத் தகர்த்தெறிந்த

பாரதி, புதுக்கவிதை எனப் புகழப்படும், பாமரரும் கேட்டுணரும் வசனக் கவிதையைத் தமிழுக்குத் தந்தவர். சிறு பிள்ளைகள் முதல் முதியவர் வரை அனைவருக்கும் உதவும் ஒரு அறிவு சார்ந்த புதுக்கவிதை இவர் தொகுப்பில் இருக்கும். அதற்கு ஒரு மிக சிறந்த உதாரணம் தான் பாப்பா பாட்டு என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதை.

பெண்ணுரிமைப் போராளி

பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இத்திருநாட்டில் மண்ணடிமைதீருதல் முயற்கொம்பே எனப் பெண்ணுரிமையை ஏத்தினார். "போற்றி போற்றியோராயிரம் போற்றி நின் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி கான்" என்ற பாரதி பெண்மை வாழ்கவெனக் கூத்திடுவோமடா என்றார். பெண்களின் கல்வியறிவுக்காகச் சட்டங்களைச் செய்திடவும் கனவு கண்ட பாரதி, சாதம் படைக்க மட்டுமல்லாது தெய்வச் சாதிபடைக்கவும் பெண்கள் தகுதிபடைத்தவர்கள் என்று கண்டார்.

பாரதியார் நினைவுச் சின்னங்கள்

புதுவையில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசு மகாகவி பாரதியார் நினைவினைப் போற்றும் வகையில் பாரதியார் நினைவுச் சின்னங்களாக எட்டயபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம், சென்னை திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த இல்லம், புதுச்சேரியில் அவர் வாழ்ந்த இல்லம் ஆகியவற்றை நினைவு இல்லங்களாகப் போற்றி வருகிறது. இவர் பிறந்த எட்டயபுரத்தில் மகளிர்க்கான பல்தொழில்நுட்பக் கல்லூரியும், பாரதி மணிமண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மைய மண்டபத்தில் பாரதியின் ஏழு அடி உயரச் சிலை அமைக்கப்பட்டு 13-02-2000 அன்று பஞ்சாப் மாநில முதல்வர் தர்பாராசிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இங்குப் பாரதியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படக் கண்காட்சியும் வைக்கப்பட்டுள்ளது.

படைப்புகள்

குயில் பாட்டு

கண்ணன் பாட்டு

பாப்பா பாட்டு

சுயசரிதை (பாரதியார்)

தேசிய கீதங்கள்

பாரதி அறுபத்தாறு

ஞானப் பாடல்கள்

தோத்திரப் பாடல்கள்

விடுதலைப் பாடல்கள்

விநாயகர் நான்மணிமாலை

பாரதியார் பகவத் கீதை (பேருரை)

பதஞ்சலியோக சூத்திரம்
நவதந்திரக்கதைகள்இந்தியா

உத்தம வாழ்க்கை சுதந்திரச்சங்கு

ஹிந்து தர்மம் (காந்தி உபதேசங்கள்)

சின்னஞ்சிறு கிளியே

ஞான ரதம்

பகவத் கீதை

சந்திரிகையின் கதை

பாஞ்சாலி சபதம்

புதிய ஆத்திசூடி

பொன் வால் நரி

ஆறில் ஒரு பங்கு

இந்தியாவிலேயே தமிழ் நூல்களை நாட்டுடைமையாக்கல் திட்டத்தின் கீழ் முதன்முதலாக நாட்டுடைமையாக்கட்டப் படைப்புகள் பாரதியின் படைப்புகளே இது குறித்து ஆ. இரா. வேங்கடாசலபதி பாரதி: கவிஞனும் காப்புரிமையும் – பாரதி படைப்புகள் நாட்டுடைமையான

வரலாறு என்ற நூலையும் [8] [9] ஆங்கிலத்தில் Who Owns That Song?: The Battle for Subramania Bharati's Copyright என்ற நூலையும் எழுதியுள்ளார்

மறைவு

1921 ஆம் ஆண்டு சூலை மாதம் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி கோவில் யானை தாக்கியதால் நோய்வாய்ப்பட்டார். கோவில் யானையால் தாக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு, கடும் வயிற்றுக்கடுப்பு நோயால் பாதிக்கப்பட்டார். பிறகு 1921 இல் செப்டம்பர் 11 அதிகாலை 01:30 மணிக்கு காலமானார். அவர் கடைசி நாட்களைக் கழித்த இல்லம் திருவல்லிகேணியில் உள்ளது.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

மகாகவி பாரதியார்

https://b-u.ac.in/164/MahakaviBharathi

தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்
இலகு பாரதி புலவன் தோன்றினான்

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து இரண்டாம் ஆண்டு டிசம்பர் மாதம் பதினொன்றாம் நாள் (11-12-1882) பிறந்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தொன்றாம் ஆண்டு செப்டம்பர் மாதம் பன்னிரெண்டாம் நாள் (12-09-1921) காலமானவர் மகாகவி பாரதியார். தம் வாழ்நாள் முழுதும் உலக நலனுக்காக எழுத்தால், பேச்சால், செயலால் வாழ்ந்தவர் பாரதியார். அதனால்தான், உலகம் அவரை உலக மகாகவியாகப் போற்றிக் கொண்டாடுகின்றது.

உலகில் எந்தப் படைப்பாளருக்கும் கிடைக்காத பெருமையும் மரியாதையும் மகாகவி பாரதியாருக்குக் கிடைத்துள்ளது. நம் முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் இந்த மண்ணில் தடம் பதித்து வாழ்ந்தவர் பாரதியார். 'கருவிலே திருவாய்க்கப் பெற்றவர்' என்று மிகச் சிறந்த ஆளுமைகளைப் பற்றிச் சொல்வார்கள். அந்தப் பட்டியலில் இடம்பெற்றவர் பாரதியார்.

இந்தப் பூவுலகில் பாரதியார் வாழ்ந்த மொத்த நாட்கள் 14,155. பாரதியார் என்னும் மனிதர் தம் வாழ்நாள் முழுதும் உலக சமுதாயத்திற்காக வாழ்ந்தவர். காலமான பின் உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறவர். பாரதியாருக்குக் கிடைத்த ஒப்பற்ற மரியாதையாக இதுவே அமைந்துள்ளது.

சுப்பிரமணியன் என்னும் பெயரில் சின்னச்சாமி, லட்சுமி அம்மையார் மகனாக அறியப்பட்ட பாரதியார் தன் பதினொன்றாம் வயதிலேயே பாரதி என்று பாராட்டப்பட்டார். அதன் பின் சிறுவனாக இருந்த பாரதி முதல் மகாகவி பாரதியாக வளர்ச்சியடைந்தது வரையிலான பாரதியாரின் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை.

கவிஞர், கதையாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், இதழியலாளர், அரசியலாளர், சொற்பொழிவாளர், சமூகச் சீர்திருத்தவாதி, பல்சமய ஒருங்கிணைப்பாளர், தன்னம்பிக்கையாளர், நேர்முக உளவியலாளர், உள்ளிட்டப் பல்வேறு திறன்களுக்குச் சொந்தக்காரர் பாரதியார். மனித உறவுகளைப் பேணுவதில் பாரதியார் தேர்ந்த விற்பன்னராக இருந்திருக்கிறார்.

பாரதியாரின் வாழ்க்கை வரலாறு அனைவரும் அறிந்து கொள்ளவேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது. 1882 டிசம்பர் 11-ஆம் நாள் அவரின் பிறப்பால் பெருமை பெற்றது. பெற்றோர் லட்சுமி அம்மையும் சின்னச்சாமியும் மகன் பாரதியால் வரலாற்றில் நீங்கா இடம்பெற்றனர்.

ஐந்து வயதில் தாயார் காலமாக, வள்ளியம்மாள் பாரதியாரின் சிற்றன்னையானார். குறையாத அன்பை பாரதியாருக்கு வழங்கிய சிறப்பு அவரின் சிற்றன்னைக்கு உண்டு. பெற்றோர், பாரதியார்,

தம்பி விசுவநாதன், தங்கை லட்சுமி என்று அழகான குடும்பம். வசதிக்குக் குறைவில்லை.

தந்தை சின்னச்சாமி எட்டயபுர ஜமீனில் மதிப்புமிக்கவராகத் திகழ்ந்தார். அவர் கல்வி, கேள்விகளில் தேர்ந்தவர். ஒரு பஞ்சாலையை நிறுவி சிறந்த தொழிலதிபராகத் திகழ வேண்டுமென்று கனவு கண்டார். தன் மகன் ஆங்கிலமும் கணிதமும் எந்திரக் கல்வியும் கற்றுப் பெரிய பதவியில் அமர வேண்டும் என்பதும் அவரது கனவு. ஆனால் பாரதியாரின் கனவு வேறாக இருந்தது. தமிழும் கவிதையும் மனிதமும் எளிமையும் ஈரமும் இணைந்தவராக பாரதியார் தம்மைக் கட்டமைத்துக் கொண்டார்.

எட்டயபுரம் ஜமீனில் எல்லோர்க்கும் செல்லப் பிள்ளையாய் இருந்த பாரதியார் தமிழை அமிழ்தாக்கி அனைவர்க்கும் கொடுத்தவர். எட்டயபுரத்தில் ஆங்கிலோ வெர்னாகுலர் பள்ளியில் படித்தார். பின்பு திருநெல்வேலியில் இந்து கலாசாலையில் மூன்றாண்டுகள் ஐந்தாம் பாரம் வரைபடித்தார். அங்கு பாடங்களைவிடப் பாடல்களில் அதிக ஈடுபாடு செலுத்தினார். அந்தப் பள்ளியின் ஆசிரியர்களும் மாணவர்களும் காளமேகமாகக் கவி பொழியும் பாரதியின் கவித்துவம் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.

அக்கால வழக்கப்படி பாரதிக்கு 14 வயது நிறைந்த போது (1897) 7 வயது நிரம்பிய செல்லம்மாவை மணம் முடித்தார்கள். கடையம் செல்லப்பா ஐயரின் மகள் செல்லம்மா அன்பும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் நற்பண்புகளும் பொருந்திய திருமகள். பாரதியார் உலக மகாகவியாகக் கொண்டாடப்படுவதற்கு திருமதி செல்லம்மா பாரதியின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

பாரதியாருடைய தந்தையின் தொழிலில் பின்னடைவு ஏற்பட்டது. அவர் தொடங்கிய பஞ்சாலைக்கான எந்திரப் பகுதிகள் அயல்நாட்டிலிருந்து மதுரை வரை வந்தன. ஆனால் அவற்றை எட்டயபுரத்திற்கு எடுத்துவர இயலாத சூழலை அன்றைய ஆங்கிலேய அரசு உருவாக்கியது. அதனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. கடன் பெருகியது. கையிலிருந்த செல்வம் யாவும் கரைந்தது. இதனால்

அவர் நிலை குலைந்தார். உள்ளம் வெதும்பினார். உடல் நலம் கெட்டார். தாங்கொணாத இழப்புகளால் வாழ இயலாமல் மனம் நொந்து குடும்பத்தைத் தவிக்கவிட்டு பாரதியாரின் தந்தை காலமானார்.

எனவே, 15-ஆம் வயதில் பாரதியாரின் கல்வி தடைப்பட்டது. சிற்றன்னையும் தம்பியும் மானாமதுரைக்குச் சென்றார்கள். சின்னச்சாமியின் தாயார் பாகீரதியம்மாள் சில முடிவுகளை எடுத்தார். செல்லம்மா கடையத்தில் அவரது தந்தை வீட்டுக்கு அனுப்பப்பட்டார். பாட்டியும் பாரதியாரும் பாரதி பிறந்து வளர்ந்து படித்துப் புழங்கிய எட்டயபுரம் மண்ணைவிட்டு காசிக்குச் சென்றார்கள். காசியில் பாரதியாரின் அத்தை (சின்னச்சாமியின் சகோதரி) குப்பம்மாள், மாமா கிருஷ்ணசிவன் ஆகியோரின் வீட்டில் தங்கி பாரதியார் தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

உறவுகளின் அன்பை உணர்ந்தவர் பாரதியார். இழப்புகளின் வலியை அறிந்தவர் பாரதியார். இந்த இழப்புகளும் காயங்களும் அவரை மானுடத்தை நோக்கிப் புடம்போடும் காரணிகள் ஆயின. காசியில் அனுமந்தகாட் பகுதியில் அத்தை வாழ்ந்த வீட்டின் பெயர் “சிவமடம்”. அத்தை கணவர் கிருஷ்ணசிவன் சிறந்த சிவ பக்தர். அத்தையின் ஒரு மகனுக்குத் தான் பாரதியின் தங்கை லட்சுமியை மணம் முடித்திருந்தார்கள்.

பழகிய மனிதர்களைவிட்டு, புழங்கிய மண்ணைவிட்டு, அழகுத்தமிழின் துணையோடு அயல்நாடு செல்வதுபோல் காசிக்குச் சென்றார் பாரதியார். நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக காசியில் வாழ்ந்தார். பன்மொழிப் புலவராய், விடுதலை வேட்கை கொண்ட வேங்கையாய், பல் சமயப் பொறையுடைய அறிஞராய், தத்துவப் பிழியலான ஞானியாய் பாரதியாரைப் பக்குவப்படுத்திக் கொடுத்த பெருமையில் அவரது காசி வாழ்க்கைக்கு முக்கியப் பங்குண்டு.

காசியில் மிஷன் காலேஜ், ஜெய நாராயண் காலேஜ் ஆகியவற்றில் கல்வி பயின்றார். அலகாபாத் சர்வ கலாசாலையில் இந்தியும் சமஸ்கிருதமும் கற்றுப் பிரவேசப் பரீட்சையில் தேறினார். உள்ளார்ந்த சிந்தனைகளில் கூடுதல் தெளிவுடன் உள்ளொளி பெருக்கிய காசி வாழ்க்கை பாரதி சகாப்தத்தில் கல்வெட்டில்

பொறிக்கத்தக்கது. அங்கேதான் பாரதி அன்னிபெசண்ட் அம்மையாரைச் சந்தித்தார். கிராப்பும் வால்விட்ட தலைப்பாகையும் முறுக்கு மீசையும் எனப் புறத்தோற்றத்தை மாற்றி அமைத்துக் கொண்டார். அங்கு வாழ்ந்தபோதே 'பெண்கல்வி' குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

காசி இந்து பனாரஸ் கல்லூரி உலக நாடுகளின் மாணவர்கள் வந்து பயிலும் சர்வ கலாசாலையாக மாறவேண்டுமென்று பாரதியார் கனவு கண்டார். அவரது கனவு நனவாகியுள்ளது. இன்று இந்து பனாரஸ் கல்லூரி 25,000 ஏக்கரில் பல்கலைக்கழகமாக உருவாகியுள்ளது.

இங்கிலாந்தில் ஏழாம் எட்வர்டு முடிசூட்டிக் கொண்டதை இந்தியாவில் கர்சன் பிரபு ஒரு விழாவாகக் கொண்டாடினார். அதில் பங்கேற்பதற்காக எட்டயபுர மன்னர் டெல்லி சென்றார். விழா முடிந்து திரும்பும்போது காசிக்கு வந்த மன்னர், பாரதியாரைத் தம்முடன் எட்டயபுரத்திற்கு அழைத்து வந்தார். எட்டயபுரத்தில் பத்திரிகைகள் படித்தல், இலக்கிய விவாதங்களில் பங்கேற்றல் என்பன மட்டுமே பாரதியாரின் பணிகளாயின. இரண்டாண்டுகள் அங்கிருந்த பாரதியார் ஜமீன் பணியில் விருப்பமில்லாமல் மனைவியுடன் மதுரைக்குச் சென்றார்.

மதுரையில் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்த பண்டிதர் அரசஞ் சண்முகனாருக்கு உடல்நலமில்லை. விடுப்பில் சென்றார். அவர் விடுப்பில் சென்ற இடைப்பட்ட காலத்தில் (1904 ஆகஸ்டு - நவம்பர் வரை) பாரதியார் சேதுபதி உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் அதே ஆண்டு நவம்பர் நிறைவில் சென்னைக்குச் சென்றார். புகழ்பெற்ற சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். சிறந்த மொழி பெயர்ப்பாளராக, இதழியல் நுட்பங்கள் அறிந்தவராக ஒளி வீசினார்.

தொடர்ந்து இந்தியா, சக்கரவர்த்தினி, பாலபாரதா, விஜயா ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1905 காசி காங்கிரஸ், 1906 கல்கத்தா காங்கிரஸ், 1907 சூரத் காங்கிரஸ்

மாநாடுகளில் பிரதிநிதியாகப் பங்கேற்றுச் சிறப்பித்தார். வங்கப் பிரிவினைக்கு எதிரான கூட்டத்தில் பங்கேற்றார். அன்னை நிவேதிதாவைத் தம் குருவாக ஏற்றார். இந்தியாவிற்கு விடுதலை வேண்டிய அரசியல் வாழ்வில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டார். தம் எழுச்சிமிகு எழுத்துகளால் சிறந்த இதழியலாளராக மிளிர்ந்தார். தம் புரட்சிமிகு கவிதைகளால் விடுதலை உணர்வை வீறுகொண்டு எழச்செய்தார்.

ஆங்கிலேயரின் அடக்குமுறை நாளுக்கு நாள் அதிகரித்தது. விடுதலை உணர்வை ஊட்டிய தலைவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். திலகர், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, மித்திரன் ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயர், இந்தியா ஆசிரியர் சீனிவாசன் எனப் பலரையும் ஆங்கிலேய அரசு சிறையிலடைத்தது. ஆங்கிலேயரை எதிர்க்கும் வலிய ஆயுதம் பாரதியாரிடம் இருப்பதைக் கண்டு கொண்ட நண்பர்கள் அவரை பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த புதுச்சேரிக்கு அனுப்பினார்கள்.

பத்தாண்டுக் கால புதுச்சேரி வாழ்க்கையில் பாரதியாரின் படைப்பிலக்கியத் திறன் மேலோங்கி நின்றது. இதழியல் துறையில் புதுமைகளைப் பூக்க வைத்தது. வையத் தலைமை கொள்ளும் கருத்தியல் வலிமையைப் பாரதியாருக்குள் புகுத்தியது. பெண் விடுதலை, மண் விடுதலை, சமூக விடுதலை என்னும் புதிய முழக்கங்களை ஒலிக்கச் செய்தது. மனிதநேயத்தையும் உயிர் நேயத்தையும் எழுத்தாலும் பேச்சாலும் மணம் கமழச் செய்தது.

1918-ஆம் ஆண்டு புதுச்சேரியிலிருந்து கடலூருக்கு வந்த பாரதியார் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டார். பின்னர் கடையத்தில் ஓராண்டு வாழ்ந்தார். மீண்டும் சென்னை திரும்பி சுதேசமித்திரனில் உதவி ஆசிரியர் பணியை ஏற்றார். அங்கு 1921 செப்டம்பர் 11 வரை வாழ்ந்த பாரதியார் செப்டம்பர் 12 அதிகாலை உடல்நலக் குறைவு காரணமாகக் காலத்தோடும் காற்றோடும் கலந்தார்.

பாரதியாரின் அனைத்துப் படைப்புகளும் காலத்தை வென்று உலக இலக்கியத் தரத்தில் மிளிர்கின்றன. பாரதியாரின் வாழ்க்கை

ஓர் ஒப்பற்ற மாமனிதரின் வாழ்வுக்கான அடையாளமாக ஒளிர்கின்றது.

- ***உயிர்களிடத்தில் அன்பு வேணும்***
- ***பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே***
- ***ஒளிபடைத்த கண்ணினாய் வாவாவா***
- ***உறுதிகொண்ட நெஞ்சினாய் வாவாவா***
- ***வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே***
- ***உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்***

என்பன போன்ற கவிதையடிகள் பாரதியாரின் கவித்துவ மேன்மைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

இந்திய விடுதலை, உலக வரலாறு, மானுடம் குறித்த பாரதியாரின் கட்டுரைகளும் கருத்துச் சித்திரங்களும் அவரைத் தொலைநோக்குப் பார்வை கொண்ட தீர்க்கதரிசியாக அடையாளம் காட்டுகின்றன.

பன்மொழிப் புலமை கொண்ட பாரதியார் எப்போதும் தாய்மொழிப் பயன்பாட்டின் தேவையை வலியுறுத்திப் பேசியவர். அதுபற்றி அவர் எழுதிய சொற்கள் தாய்மொழியை நேசிக்கும் அனைவராலும் இன்றும் உலக அரங்கில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை என்று முழங்கிய மகாகவி பாரதியார் தம் சொற்பொழிவுகளிலும் சமத்துவச் சமூகத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளைத் தொடர்ந்து எடுத்துரைத்துக் கொண்டே இருந்தார்.

- ஒரு மனிதராக பாரதியார் கடைப்பிடித்த வாழ்வியல் ஒழுகலாறுகள் மிகமிகப் போற்றுதலுக்கு உரியவை.
- எழுத்திற்கும் பேச்சுக்கும் தாம் வாழ்ந்த வாழ்க்கைக்கும் இடைவெளியில்லாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்தவர் பாரதியார்.
- அவர் வாழ்ந்த காலத்தில் அவர் பிறந்த சமூகத்திலும் அவர் வாழ்ந்த சமூகத்திலும் நிலவிய அனைத்து வகை மூட நம்பிக்கைகளை எதிர்த்து 'எல்லோரும் சமம்' என்பதை எப்போதும் கடைப்பிடித்தவர் பாரதியார்.
- எல்லா உயிரும் இன்பம் எய்துக

எல்லா உடலும் நோய் தீர்க

எல்லா உணர்வும் ஒன்றாதல் உணர்க

என்பதைத் தம் அனுபவத்தில் கண்டு தெளிந்து அனைவர்க்கும் உரைத்தவர் பாரதியார்.

- பசியெனும் பேய்தனை உலகிலிருந்து விரட்டுவதற்கான வழிமுறைகளை உரக்கப் பேசியவர் பாரதியார்.
- கல்வி, விடுதலை, உரிமை, கடமை, தன்னம்பிக்கை, உழைப்பு, நேர்மை ஆகியவற்றைச் சொந்த வாழ்வில் கடைப்பிடித்தும் பிறருக்கு வலியுறுத்தியும் வாழ்ந்தவர் பாரதியார்.
- பாரதியார் பிறப்பால் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. தந்தையும் தாய்மாமனும் பல உறவினர்களும் வசதியாக வாழ்ந்தார்கள். அரசரும் செல்வந்தர்களும் நண்பர்களும் பாரதியாருக்குத் தேவையானவற்றை வழங்க எப்போதும் தயாராக இருந்தார்கள். ஆனால் பாரதியாரின் குடும்பமோ மிகமிகப் பெரியது. அதனால் குடும்பத்தார் அனைவரின் தேவைகளையும் அவர்களால் பூர்த்தி செய்ய இயலவில்லை. ஆம்! இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களையும் பாரதியார் தமது குடும்பமாகக் கருதினார்.
- இதழ்களுக்கு எழுதிய வகையில் அவருக்குப் பெரும் நிதி கிடைத்தது. அதில் பெரும்பகுதியை ஆங்கிலேய அரசு அபகரித்துக் கொண்டது. அதுபோக எஞ்சிய பணத்தில் - பொருளில் பசியால் வாடுபவர்களுக்குத் தம்மிடம் உள்ள அனைத்தையும் கொடுக்கும் வழக்கம் பாரதியாரிடம் இருந்தது. உணவும் பணமும் மட்டுமல்ல., கிழிந்த ஆடையுடன் எளிய மனிதனைக் கண்டுவிட்டால், தாம் உடுத்தியிருக்கும் புதிய வேட்டியைக்கூட அவரிடம் கொடுத்துவிட்டு தலைப்பாகையைக் கழட்டி இடுப்பில் கட்டிக்கொண்டு வீட்டுக்கு வரும் வழக்கம் பாரதியார் வாழ்வில் பலமுறை நடந்திருக்கிறது.
- அன்பு மகள்கள் தங்கம்மா, சகுந்தலா இருவரும் பாரதியாரின் மேன்மையை உணர்ந்த அன்பின் திருவுருக்களாக வாழ்ந்து பாரதியாருக்குப் பெருமை சேர்த்தார்கள்.
- பாரதியார் பொருளியல் தேவைகளை நிறைவு செய்து கொள்வதை மட்டும் வாழ்க்கை என்று கருதவில்லை.

இயற்கையை, அதன் வளங்களை அவர் எப்போதும் கொண்டாடினார்.

- மனிதம் நிரம்பிய மனிதர்களின் செயல்களை அவர் பெரிதும் போற்றினார். **மனிதர்கள் மிகவும் இனியர்** என்று முழங்கினார்.
- சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலின் யானை சற்றே தள்ளிவிட பாரதியாரின் நண்பர் குவளைக்கண்ணன் விரைந்து வந்து பாரதியாரைக் காப்பாற்றினார். அதனால் ஏற்பட்ட காயங்களுக்குச் சிகிச்சை பெற்றுக் குணமடைந்து மீண்டுவந்து விடுதலைக் களத்தில் தொடர்ந்து பணியாற்றினார். சென்னையிலிருந்து பயணம் செய்து ஈரோட்டில் உள்ள கருங்கல் பாளையத்திற்கு வந்து அங்குள்ள நூலகத்தில் **மனிதனுக்கு மரணமில்லை** என்னும் பொருண்மையில் உரையாற்றினார்.
- 1921 செப்டம்பர் முதல் வாரத்தில் உடல்நலக் குறைவு ஏற்பட்டு பத்திரிகை அலுவலகத்திற்குச் செல்லாமல் வீட்டில் ஓய்வெடுத்தார். வயிற்றுப் போக்கு நோய் ஆட்கொண்டதால் படுத்த படுக்கையானார். மருந்து உண்ண மறுத்தார். செப்டம்பர் 12 அதிகாலை 01.30 மணியளவில் காற்றோடு கலந்து காலமானார்.
- அன்றைய அரசியல் காலச்சூழல், குடும்பத்தாரின் சடங்கு முறைகள் இவற்றின் காரணமாக பாரதியாரின் இறுதிச்சடங்கு அன்றே நடைபெற்று முடிந்தது.
- வாழ்ந்த காலத்தில் பாரதியாரை நேசித்தவர்கள் அதிகம். பாரதியாரின் தமிழை வியந்து கொண்டாடியவர்கள் பலர். சென்னை விக்டோரியா அரங்கத்தில் நடைபெற்ற **Cult of the Eternal** என்ற (நித்தியத்தின் வழிபாடு) பாரதியாரின் சொற்பொழிவைக் கேட்பதற்கு அந்தக் காலத்திலேயே (02-03-1919) நபர் ஒருவருக்கு ஒரு ரூபாய் நுழைவுக் கட்டணம் விதிக்கப்பட்டும் அந்த அரங்கம் முழுதும் நிரம்பி வழிந்தது என்பது வரலாறு.
- 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி இன்று வரை தொடர்ந்து இயங்கிவரும் தென்னகத்தின் புகழ்பெற்ற ஆங்கில நாளேடான ‘இந்து’ நாளிதழில் வெளிவந்த பாரதியாரின் கடிதங்களும் கட்டுரைகளும்

அவரின் பன்முகத் திறன்களுக்குச் சான்று பகரும் ஒப்பற்ற ஆவணங்கள்.

- பிறந்த குலத்திற்குரிய சில நெறிமுறைகள் தந்த நெருக்கடிகள், அவரது அரசியல் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள் காரணமாக இணக்கமற்றவர் என்று உறவுகளால் ஒதுக்கப்பட்ட நிலை, ஆங்கிலேயரின் அடக்குமுறை எனப் பல்முனைத் துன்பங்கள் அவருக்கு இருந்தன. ஆனால் எல்லாவற்றையும் புறந்தள்ளி மானுடத்திற்காக உழைத்த தமிழன்னையின் தவப்புதல்வராக பாரதியார் கம்பீரமாகத் தம் வாழ்வை நிறைவு செய்தார்.
- எத்தனை இடர்கள் சூழ்ந்தபோதிலும் **'எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா'** என்று பாடும் வல்லமையைப் பெற்றிருந்தார்.
- பாரதியார் உண்டாக்கிய இலக்கிய மரபு படைப்பிலக்கிய உலகில் தொடர்ந்து வந்து அவருக்குப் பெருமை சேர்க்கின்றது.
- ஆய்வுலகிலும் ஊடக உலகிலும் பொருத்தமுடைய பேசு பொருளாக பாரதியாரின் வாழ்வியலும் படைப்பியலும் இன்றும் வலம் வருகின்றன.
- உலகெங்கிலும் பாரதியாருக்குச் சிலைகள் இருக்கின்றன.
- பாரதியாரின் பெயரில் நகர்கள், வீதிகள், அடுக்ககங்கள், இலக்கிய மன்றங்கள், இல்லங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம், விருதுகள், விழாக்கள் என்றெல்லாம் பாரதியார் நினைக்கப்படுகிறார்., போற்றப்படுகிறார்.
- பாரதி என்னும் பெயரை இருபால் குழந்தைகளுக்கும் சூட்டும் பெருமை பாரதியாருக்கு உண்டு.
- பாரதியார் காலத்தை வென்று மானுடத்தின் குரலாக, குறியீடாக ஒளி வீசுகிறார்.
- **புவியனைத்தும் போற்றவான் புகழ் படைத்த கவியரசர்** என்று பிரான்ஸ் நாட்டுக் கவிஞர்களால் கொண்டாடப்பட்ட மகாகவி பாரதியாரின் முழுமையான வாழ்க்கை வரலாறு இன்னும் எழுதப்படவில்லை என்பது வியப்பான, கசப்பான உண்மை. பாரதியார் பிறந்தநாள் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட பாரதியார் பல்கலைக்கழகம் அவரின் நினைவு நூற்றாண்டில்

பாரதியாரின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை எழுதும் முயற்சியைத் தொடங்கியுள்ளது.

5. பாரதியார் பல்கலைக்கழகம்

எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்

5. **திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்அறிவு வேண்டும்** என்னும் பாரதியார் கவிதையடிகளை நாள்தோறும் பல்கலைக்கழக வாழ்த்தாக ஒலிக்கச் செய்து, **பயிற்றிப் பலகல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்** என்னும் பாரதியாரின் கல்வி மந்திரத்தைத் தன் கொள்கை மந்திரமாகக் கைக் கொண்டுள்ளது.

- பாரதியார் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் **பெ.காளிராஜ்** அவர்கள் **காணிநிலம்** என்னும் பெயரில் 2,73,000 சதுர அடி நிலப்பரப்பில் பல்கலைக்கழக வளாகத்தில் உலகத் தரத்தில் மகாகவி பாரதியார் உயராய்வு மையத்தைக் கட்டமைக்கும் பணியை முன்னெடுத்துள்ளார்கள்.
- **திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்** என்ற பாரதியாரின் கருத்தியல் மெய்ப்படும் வகையில் பாரதியார் பல்கலைக்கழகம் மகாகவி பாரதி திருப்பணியைச் செம்மையாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகின்றது.

Vikaspedia

https://education.vikaspedia.in/viewcontent/education/baaba4bc1-b85bb1bbfbb5bc1ba4bcd-ba4b95bb5bb2bcdb95bb3bcd/bb5bb0bb2bbebb1bcdbb1bc1-ba8bbebafb95bb0bcdb95bb3bcd/%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%

E0%AE%BF%E0%AE%AF-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D?lgn=ta

சுப்ரமணிய பாரதியார்

அறிமுகம்

சுப்ரமணிய பாரதியார் ஒரு தமிழ் கவிஞர். இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கனல் தெறிக்கும் விடுதலைப்போர் கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் தன்னுடைய பாட்டுகளின் மூலமாக சிந்தனைகளை மக்களிடம் தட்டியெழுப்பியவர். தம் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளவுகடந்த பற்றுக்கொண்ட இவர், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று போற்றி பாடியுள்ளார். விடுதலைப் போராட்ட காலத்தில், இவருடைய தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகள் மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் "தேசிய கவியாக" போற்றப்பட்ட மாபெரும் புரட்சி வீரனின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை விரிவாகக் காண்போம்.

பிறப்பு: டிசம்பர் 11, 1882

பிறப்பிடம்: எட்டயபுரம், தமிழ்நாடு (இந்தியா)

பணி: கவிஞர், எழுத்தாளர், விடுதலை வீரர்

இறப்பு: செப்டம்பர் 11, 1921

நாட்டுரிமை: இந்தியா

பிறப்பு

சுப்ரமணிய பாரதியார் அவர்கள், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன். அவருடைய 5 வயதில் அவருடைய தாயார் காலமானார். இவர் இளம் வயதிலேயே தமிழில் புலமைப்பெற்றுத் திகழ்ந்தார்.

இளமைப் பருவம்

சிறு வயதிலேயே பாரதியாருக்கு தமிழ் மொழி மீது சிறந்த பற்றும், புலமையும் இருந்தது. ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார். தன்னுடைய பதினொரு வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார், இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு “பாரதி” என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் “சுப்பிரமணிய பாரதியார்” என அழைக்கப்பெற்றார்.

பாரதியாரின் திருமண வாழ்க்கை

பாரதியார் அவர்கள், பள்ளியில் படித்துகொண்டிருக்கும் பொழுதே 1897 ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். தனது தந்தையின் இறப்புக்குப் பிறகு பாரதியார் வறுமை நிலையினை அடைந்தார். சிறிது காலம் காசிக்கு சென்று தங்கியிருந்தார். பிறகு எட்டையபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவை கவிஞராக பணியாற்றினார்.

பாரதியாரின் இலக்கிய பணி

‘மீசை கவிஞன்’ என்றும் ‘முண்டாசு கவிஞன்’ என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார், தாய் மொழியாம் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராக திகழ்ந்தார். இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் தனி புலமைப்பெற்று விளங்கினார். 1912 ஆம் ஆண்டு கீதையை தமிழில் மொழிப்பெயர்த்தார். ‘கண்ணன்பாட்டு’, ‘குயில்பாட்டு’, ‘பாஞ்சாலி சபதம்’,’ புதிய ஆத்திச்சூடி’ போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியரால் எழுதப் பெற்றன.

விடுதலைப் போராட்டத்தில் பாரதியின் பங்கு

சுதந்திரப் போரில், பாரதியின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய், காட்டுத்தீயாய், சுதந்திரக் கனலாய் தமிழ்நாட்டை வீருகொள்ளச் செய்தது. பாரதியார் “இந்திய பத்திரிக்கையின்” மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் பல

எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார். பாரதியின் எழுச்சிக்கு, தமிழ்நாட்டில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி “இந்தியா பத்திரிக்கைக்கு” தடை விதித்து அவரை கைது செய்து சிறையிலும் அடைத்தது. அதுமட்டுமல்லாமல், விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால், பாரதி “தேசிய கவியாக” அனைவராலும் போற்றப்பட்டார். இவர் சுதேசிமித்திரனில் உதவி ஆசிரியராக, நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை பணியாற்றினார். “ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்” என்று சுதந்திரம் அடைவதற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தை தன் பாட்டின் மூலம் வெளிபடுத்தியவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இறப்பு

1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிகேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு சென்றபோது, எதிர்பாராவிதமாக அந்த கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார். பிறகு, 1921 செப்டம்பர் 11ம் தேதி, தனது 39 ஆவது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார்.

பாரதியாரை நினைவூட்டும் சின்னங்கள்

எட்டயபுரத்திலும், சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியிலும் பாரதியார் வாழ்ந்த இடத்தை பாரதியாரின் நினைவு இல்லமாக தமிழ்நாடு அரசு மாற்றி இன்று வரை பொதுமக்களின் பார்வைக்காக பராமரித்து வருகிறது. இவர் பிறந்த எட்டயபுரத்தில், பாரதியின் நினைவாக மணிமண்டபமும் அமைக்கப்பட்டு இவருடைய திருவுருவச் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. பாரதியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படக் கண்காட்சியும், இவருடைய திருவுருவச் சிலையும், இவரின் நினைவை போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பாரதியை மக்கள், ‘கவி’, ‘மானுடம் பாடவந்த மாகவி’, ‘புது நெறி காட்டிய புலவன்’, எ’ண்ணத்தாலும் எழுத்தாலும் இந்திய

சிந்தனைக்கு வளம் சேர்த்தவர்', 'பல்துறை அறிஞர்', 'புதிய தமிழகத்தை உருவாக்க கனவு கண்ட கவிக்குயில்', 'தமிழின் கவிதை' மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர், என்றெல்லாம் புகழ்கின்றனர். உலகதமிழர் நாவில் மக்கள்கவி பாரதியாரின் பெயர் அடிக்கடி உச்சரிக்கபடுகிறது என்றால் அது மிகையாகாது.

பாஞ்சாலி பாரதியாரின் சபதம்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இந்தியக் கவிஞர்களில் ஒருவரான சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப்பட்ட காப்பியம் பாஞ்சாலி சபதம். மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ள இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தில் உள்ள நிகழ்ச்சி ஒன்றினைக் காப்பியத்தின் மையப் பொருளாகப் பாரதியார் தெரிவு செய்து படைத்துள்ளார். பாரதியாருக்கு முன்னரே கம்பரும், (இரணியன் கதை) வில்லிபுத்தூராழ்வாரும் (நளாயினி கதை) இதுபோன்ற ஒரு கிளைக்கதையைத் தமிழாக்கியுள்ளனர். ஆனால், இவ்விருவருமே சமகாலக் கண்ணோட்டத்துடன் அணுகவில்லை என்றே குறிப்பிடலாம். பாரதியார் அந்தப் பழைய நிகழ்வினை, சமகால உணர்வின் அடிப்படையிலேயே படைத்திருக்கிறார்.

பாண்டவர்களின் பெருமையைக் கண்டு பொறாமை கொண்டான் துரியோதனன். தனக்குச் சேரவேண்டிய புகழ் தருமனுக்குச் செல்வதை நினைத்துக் கோபம் கொண்டான். பாஞ்சாலி, பலர் கூடியிருக்கும் அவையில் துரியோதனனைப் பார்த்துச் சிரித்ததும் கேலிசெய்ததும் மீண்டும் துரியோதனனைக் கோபமூட்டியது. தன் மாமன் சகுனியின் மூலமாகப் பாண்டவர்களை வஞ்சனையாகச் சூதாட்டத்தில் ஈடுபடுத்தி, நாட்டையும் பொருளையும் அபகரித்து, காட்டுக்கு அனுப்பி வாழுமாறு செய்து விடுகிறான் துரியோதனன். இந்நிலையில் பணயப் பொருளாகத் தன்னை வைத்து விளையாடிய பாண்டவர்களைப் பார்த்து எதிர்ப்புக் குரல் கொடுக்கிறாள் பாஞ்சாலி. அடிமையாக்கப் பட்ட பாஞ்சாலியைத்

துகிலுரிதலிலும் கண்டனக் குரல் ஒலிக்கிறது. பின்னர் வீமன், அர்ச்சுனன், பாஞ்சாலி ஆகியோரின் சபதங்கள் பற்றி இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றது.

பாஞ்சாலி சபதம்

தமிழனுக்கு நாட்டுப்பற்று ஊட்ட வேண்டிய தேவையை அடிப்படையாக்கியும், 'பெண்ணடிமை தீர்ந்தாலே நாடு விடுதலை அடையும்' எனும் கருத்தினை வலியுறுத்தவுமே பாரதி பாஞ்சாலி சபதத்தை உருவாக்கியுள்ளார். பல நாட்டு அரசர்கள் அமர்ந்திருக்கும் அவையில் ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டி, 'இன்னது செய்யாமல், 'இன்னது நடக்காமல்' அவிழ்க்கப்பட்ட என் கூந்தலை முடிக்க மாட்டேன் என்ற சபதம் செய்கிறாள். இக்காப்பியத்தில் வீமன், அருச்சுனன் ஆகியோரின் சபதம் இடம் பெற்றிருந்தும் அதனை விடுத்து, வீழ்ந்து கிடக்கும் பெண் சமூகத்திலிருந்து சபதம் மேற்கொள்ளும் ஒரு குரலாகப் பாஞ்சாலியின் சபதத்தை அமைத்திருப்பது மிகவும் சிறப்பானதாகிறது.
பாரதப் போரின் முக்கியப் பாத்திரப் படைப்புகளான துரியோதனன், துச்சாதனன் ஆகிய இருவரின் உயிரிழப்பே பாஞ்சாலி சபதத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு பெண் மூலமாக அதனைச் சாதித்துக் காட்டுகிற புதுமரபினைக் கையாண்டுள்ளார் பாரதியார். மண்ணாசையை அடிப்படையாகக் கொண்டு கதை பின்னப் பட்டிருந்தாலும், பாஞ்சாலி துகிலுரியப்படும் காட்சியைப் பாரதியார் தேசியத்தின் கோபமாகக் காட்டிப் 'பாஞ்சாலி சபதம்' எனப் பெயர் வைத்துள்ளார்.

ஆசிரியர் – பாரதியார்

அடிமைத் தளையில் சிக்கிக் கிடந்த தமிழ்ச் சமூகத்தைத் தமது பாட்டுத் திறத்தால் எழுச்சி பெறச் செய்தவர் பாரதியார். 11.12.1882 இல் எட்டயபுரத்தில் சின்னச்சாமி அய்யருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். பெற்றோர் இட்ட பெயர் சுப்பையா என்பது. தம் பதினோராம் வயதிலேயே கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். எட்டயபுர சமஸ்தானப்

புலவர்களால் 'பாரதி' என்ற புகழைப் பெற்றவர். 1903 ஆம் ஆண்டு தொடங்கி 1914 ஆம் ஆண்டு வரை கவிதைகளை எழுதிக் குவித்தவர். இந்திய நாட்டு விடுதலைக்காகவே எழுதியதால் தேசியக்கவியாகத் திகழ்ந்தார். 1920 இல் சென்னையில் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியர் பணியில் சேர்ந்து, திருவல்லிக்கேணி பகுதியில் வாழ்ந்து வரும் போது, கோயில் யானை தாக்கியதால் நோய்வாய்ப்பட்டு 1921 செப்டம்பர் 11 இல் இறந்தார். இவ்வாறு திருவல்லிக்கேணி யானையால் மென்று தின்னப்பட்ட தமிழ்க் கரும்பான பாரதியைப் பற்றியும் அவரது படைப்புகளைப் பற்றியும் ஏராளமான ஆய்வு நூல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில் பாரதியும் பாரதியின் எழுத்துகளும் காலத்தால் அழியாப் புகழ்பெற்ற தன்மை வாய்ந்தன என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

நூலின் அமைப்பு

'பாஞ்சாலி சபதம்' இரண்டு பாகங்களையும் ஐந்து சருக்கங்களையும் கொண்டது. முதற்பாகம் - அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம் என இரண்டு சருக்கங்களைக் கொண்டது. இரண்டாம் பாகம் - அடிமைச் சருக்கம், துகில் உரியல் சருக்கம், சபதச் சருக்கம் என மூன்று சருக்கங்களைக் கொண்டது. ஒவ்வொரு பாகமும் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. பராசக்தி, வாணி ஆகிய தெய்வங்களைப் பற்றிய கவிதைகள் அவை. பாண்டவர்களின் பெருமையைக் கண்டு பொறாமை கொண்ட துரியோதனன், பாண்டவர்களை அழிக்கச் சகுனியின் சூழ்ச்சியுடன் திருதராட்டிரன் இசைவுடன் விதுரனை அனுப்பிப் பாண்டவர்களைச் சூதுக்கு அழைக்கின்றான். சூதாட்டச் சருக்கத்தில், சகுனியின் சூழ்ச்சி, சூதுத்திறமை, தருமன் நாட்டை இழந்து விடுவது பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அடிமைச் சருக்கத்தில், சூதாட்டத்தின் மதிமயக்கத்தில் தன்னை இழந்த தருமன், தன் தம்பியர் நால்வரையும் இழக்கும் நிலை சித்தரிக்கப்படுகிறது.

துகிலுரிதல் சருக்கத்தில் தருமனிடத்தில் எதுவும் இல்லாத நிலையில் திரௌபதியைப் பகடைப் பொருளாக வைத்து இழக்கிறான். திரௌபதியை அடிமைப்பட்டவளாகக் கருதி, துரியோதனன் துச்சாதனனை அழைத்துத் திரௌபதியைச்

சபையில் துகிலுரியுமாறு கட்டளையிடுவது காட்டப்படுகிறது. சபதச் சருக்கத்தில் திரௌபதி துகிலுரியப்படலும், கண்ணன் அவளைக் காத்தலும், பீமன், அர்ச்சுனன், திரௌபதி ஆகியோர் சபதம் மேற்கொள்ளுதலும் காட்டப்படுகின்றது. இவ்வாறு பாரதியார் கதையமைப்பினை வைத்து முடித்துள்ளார்.

கதைச்சுருக்கம்

பாரதி, பிரமனையும் வாணியையும் வணங்கிய பின்பு, அஸ்தினாபுரத்தின் பெருமைகளைக் குறிப்பிடுவதோடு கதை தொடங்குகிறது.

பொறாமை

பாண்டவர்களின் புகழையும் செல்வப் பெருக்கையும் கண்டு பொறாமைப் பட்ட துரியோதனன், சகுனியின் துணைகொண்டு பாண்டவர்களை அழிக்க நினைக்கிறான். துரியோதனன் தந்தை திருதராட்டிரன் இதற்கு முதலில் இணங்கவில்லையாயினும், பாண்டவர்களைச் சூதுக்கு அழைக்க இணங்குகின்றான். இதன்படி திருதராட்டிரன், பாண்டவர்களை அழைத்து வர விதுரனை அனுப்பப் பாண்டவர்கள் அஸ்தினாபுரிக்கு வருகின்றனர்.

சகுனியின் சூழ்ச்சி

அஸ்தினாபுரியில் பாண்டவர்களைச் சகுனி சூதுக்கு அழைக்கிறான். முதலில் மறுத்த தருமன், சகுனியின் சூழ்ச்சியில் விழுகிறான். இது விதியின் செயல்' என்று நினைத்துச் சம்மதிக்கிறான். அனைத்துச் செல்வங்களையும் இழந்து விடுகின்றான்; பின்னர், சகுனி தருமனைப் பார்த்து நாடுகளை இழக்கவில்லை' - தருமா, நாட்டை வைத்து ஆடினால் இழந்த செல்வங்களைப் பெற்று விடலாம் என்கிறான். சபையில் இருந்த விதுரன் இதற்கு உடன்படாமல் ஆட்டத்தை நிறுத்தச் சொல்லித் திருதராட்டிரனை வேண்டுகிறான்.

சூதாட்டமும் இழப்பும்

திருதராட்டிரனோ பதில் சொல்ல முடியாமல் வீற்றிருக்கிறான். துரியோதனன் பதில் பேசுகிறான். விதுரனைத் திட்டுகிறான்; பழிக்கிறான். இதனால் விதுரனும் வாய்மூடித் தலைகுனிந்து

அமர்கிறான். தருமன் தன் நாட்டைப் பணயமாக வைத்து இழக்கிறான். மீண்டும் சகுனி, தருமனைப் பார்த்துத், தம்பியர் நால்வரையும் பணயமாக வைத்துச் சூதாடினால், இழந்த அனைத்தையும் பெற்றுவிடலாம் என்று சொல்ல, தருமன் அவ்வாறே தம்பியரைப் பணயப் பொருளாக்கி விளையாட அதுவும் தோல்வியையே தருகிறது தருமனுக்கு. அவன் தன்னையும் இழந்த பின்னர், பாஞ்சாலியையும் பணயமாக வைத்து இழந்து விடுகிறான். தனது ஆசையை நிறைவேற்றிய மாமன் சகுனியைக் கட்டிப் பிடித்து மகிழ்ச்சியால் துரியோதனன் கூத்தாடினான்.

பாஞ்சாலியின் சபதம்

பாண்டவர்கள் கடுந்துயரத்தில் மூழ்கினர். இந்நிலையில் துரியோதனன் பாஞ்சாலியை மன்றத்துக்கு அழைத்துவரச் சொல்லித் தேர்ப்பாகனை அனுப்புகிறான். அவள் வர மறுக்கிறாள். பின்பு, துச்சாதனனை அனுப்பி இழுத்து வரும்படி சொன்னான் துரியோதனன். துச்சாதனன் சென்று பாஞ்சாலியை அழைத்தான். கடும் கோபத்துடன் பேசினாள். உடனே கூந்தலைப் பற்றி இழுத்து வந்தான். சபையில் நின்றிருந்த ஐவரையும் பார்த்துக் கடுமையாகப் பேசினாள் பாஞ்சாலி. அந்நேரத்தில், பாஞ்சாலியின் சேலையைப் பற்றி இழுக்குமாறு கர்ணன் துச்சாதனனுக்குச் சொல்ல, துச்சாதனன் பாஞ்சாலியின் ஆடையைக் களைந்தான்.

பாஞ்சாலி, கண்ணனிடம் வேண்ட, கண்ணனின் அருளால் பாஞ்சாலியின் துகில் வளர்ந்து கொண்டே போகத் துச்சாதனன் மயங்கிக் கீழே சாய்ந்தான். துரியோதனனும் தலை கவிழ்ந்தான். இதனையடுத்து, கடுங்கோபங்கொண்ட வீமன், துரியோதனனையும், துச்சாதனனையும் போர்க்களத்தில் கொல்வேன் என்று சபதம் செய்தான்.

வீமனைத் தொடர்ந்து, அருச்சுனனும், பாதகனான கர்ணனைப் போரில் வெல்வேன் என்று சபதம் மேற்கொண்டான். இறுதியில் பாஞ்சாலி, துச்சாதனனின் இரத்தத்தையும் துரியோதனனின் இரத்தத்தையும் கலந்து அவிழ்க்கப்பட்ட என் கூந்தலில் எண்ணெயாகப் பூசி முடிப்பேன். அது நிகழாத வரைக்கும் என்

கூந்தலை முடியேன் என்று சபதம் செய்தாள். இந்நேரத்தில் ஐம்பெரும் பூதங்கள், இப்புவி தருமனுக்கே எனச் சாட்சியளிக்கும்படி பேரொலி எழுந்தது. இவ்வாறு பாஞ்சாலி சபதத்தின் கதை முடிகிறது.

சகுனி

பாஞ்சாலி சபதத்தில் மையப் பாத்திரமாகத் திகழ்பவன் சகுனி. கதையின் திருப்பு முனைக்கும் கதை நிகழ்ச்சிகளின் இயக்கத்திற்கும் முக்கியமாக இருப்பவன் சகுனி. தனது புத்தி கூர்மையால் சதி திட்டம் தீட்டுவதில் வல்லவனாகக் காணப்படுகிறான். குடும்பத்திலோ, நாட்டிலோ சதித்திட்டம் என்ற உடனே நம் கண்முன் வந்து நிற்பவன் சகுனி. அந்த அளவுக்கு தன் சதித் திட்டத்தால் பிரபலம் ஆனது சகுனி எனும் பாத்திரப்படைப்பு.

சகுனியின் சதி

பாண்டவர்களின் வளர்ச்சியினைப் பொறுக்கமாட்டாதவனான துரியோதனன், தன்னுடைய மாமன் சகுனியிடம் தன் மனக்கருத்தை வெளிப்படுத்துகிறான். சகுனியும் சந்தோஷமாகச் சதித்திட்டம் ஒன்றினைச் சொல்கிறான். புதிதாக ஒரு மண்டபம் கட்டி, அது தெய்வ நலன்கள் உடையதாக எடுத்துச் சொல்லி, அதனைப் பார்வையிடப் பாண்டவரை அழைத்து வரவேண்டும். அதன்பின்பு அவர்களைச் சூதாட்டத்தில் ஈடுபடும்படி அழைத்து ஒரு நாழிகையிலேயே அவர்களது செல்வத்தை வென்றிடுவோம் என்றான். மேலும் போரினால் பாண்டவரை வெல்லமுடியாது என்றும் சூதினால் தான் வெல்லமுடியும் என்று துரியோதனனுக்கு ஆலோசனை சொன்னான் சகுனி. இதனைக் கேட்ட துரியோதனன் மகிழ்ந்து சகுனியை வணங்கினான்.
தீய சக்தியின் திரண்ட உருவமாகச் சகுனி காணப்படுகிறான். தீயனவற்றையே தொழிலாகக் கொண்டு 'கூட இருந்தே குழிபறிப்பது போலக்', கௌரவர்களான துரியோதனனையும் துச்சாதனனையும் அழிக்கும் எண்ணங்கொண்டவனாகச் சகுனியின் சதித்திட்டம் அவனைக் காட்டுகிறது. இந்தத் தீய செயல்களால் தன்னையும் இழந்து விடுகிறான் என்பது கண்கூடாகக் காணமுடிகிறது.

தருமனின் மனத்தை மாற்றியமை

தன்னுடைய நாட்டினைப் பணயப் பொருளாக வைத்திழந்த தருமனைப் பார்த்துச் சகுனி, தருமனே! செல்வத்தையும் நாட்டையும் இழந்துவிட்டாய். இனி எப்படிப் பிழைப்பாய். உனது தம்பியர் நால்வரையும் பணயம் வைத்துச் சூதாடினால் இதுவரை இழந்ததை எல்லாம் மீட்டு விடலாம் என்றான். துரியோதனனும் அவ்வாறே சொன்னான். தம்பியர் முகத்தில் கவலை படரத் தொடங்கியது. வீமன் கடுங்கோபம் கொண்டான். தருமன், தம்பியரைப் பணயப்பொருளாக வைத்து விளையாடத் தொடங்கி முதலில் நகுலன், சகாதேவனை வைத்து இழக்கிறான். அடுத்த நிலையில் தருமன் மிகுந்த மனவேதனைப்படுகிறான். சூதாட்டத்தை இத்துடன் நிறுத்திவிடலாம் என நினைக்கிறான். அந்நேரத்தில் சகுனி, தருமனைப் பார்த்து, தருமனே! "நகுலனும் சகாதேவனும் வேறொரு தாய்க்குப் பிறந்தவர்கள். அதனால் அவர்களைச் சூதாடி இழந்துவிட்டாய். வீமனும் அருச்சுனனும் உன்னைப் போன்று குந்தியின் பிள்ளைகள் என்பதால் அவர்களைப் பணயப் பொருளாக வைக்கவில்லையா? என்று கேட்கிறான். அதனைக் கேட்ட தருமனுக்குக் கோபம் வந்தது. "சூதாட்டத்தில் தான் இழந்துள்ளோம்; ஒற்றுமையை நாங்கள் இழந்துவிட வில்லை" என்று சொல்லி இருவரையும் பணயப் பொருளாக வைத்து விளையாடச் சம்மதித்து இழக்கிறான்.

பாஞ்சாலி

பாஞ்சால தேசத்தினர் பெற்ற தவப்பயன் தான் பாஞ்சாலி. பஞ்சபாண்டவரின் உயிர் போன்றவள்; அருள் தன்மையுடன் ஒளிவீசுபவள்; ஓவியம் போன்றவள்: பூமியில் உலவும் செல்வமகள்; எங்கும் தேடிக் கிடைப்பதற்கரிய திரவியம் பாஞ்சாலி.

படிமிசை இசையுறவே - நடை
பயின்றிடும் தெய்வீக மலர்க்கொடியைக்
கடிகமழ் மின்னுருவை - ஒரு
கழனியக் கனவினைக் காதலினை
வடிவுறு பேரழகை- இன்ப
வளத்தினைச் சூதினிற் பணயம் என்றே
(கமனியக் கனவு = ஆகாயக் கனவு)

என வரும் பாடலில் பாரதி குறிப்பிடுகிறார். காப்பியத்தின் தலைமை மாந்தர் பாஞ்சாலியே. அடிமைத் தளையைத் தகர்க்க எழும் பாரதச் சக்தியாகப் பாரதியால் படைக்கப்பட்டவள் பாஞ்சாலி.

பணயப் பொருள்

சகுனியின் சதியால் பணயப் பொருளாக வைக்கப்பட்டவள் பாஞ்சாலி. பாஞ்சாலியைப் பணயமாக வைத்து விளையாடிய செயலைப் பாரதி, நல்யாகத்தில் படைக்கப்படுகின்ற வேள்விப் பொருளை, எச்சில் தேடியலையும் நாய்க்குமுன் அது மென்றிட வைப்பதைப் போன்று உள்ளது என்றும், நல்ல உயரமுள்ள, அகலமுள்ள பொன் மாளிகையைக் கட்டி, அதில் பேயினைத் தேடிக் கண்டுபிடித்துக் குடியமர்த்துவது போல உள்ளது என்றும் கூறுகிறார்.

செருப்புக்குத் தோல் வேண்டியே - இங்குக்
கொல்வரோ செல்வக் குழந்தையினை
விருப்புற்ற சூதினுக்கே - ஒத்தபந்தயம்
மெய்த்தவப் பாஞ்சாலியோ?

என, செருப்புச் செய்வதற்குத் தோல் தேவையென்பதால் அன்புமிக்க குழந்தையைக் கொல்வதற்குத் துணிவது போன்று உள்ளது என்கிறார் பாரதியார்.

எதிர்ப்புக் குரல்

விதியின் வலிமையால் தருமன், சகுனியுடன் சூதாடியதால் நாடிழந்து நல்ல பொருள் இழந்து, தம்பியரை இழந்து, இறுதியில் பாஞ்சாலியை இழந்து விடுகிறான். துரியோதனன் தன் தேர்ப்பாகனை அழைத்து, பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்து, வருமாறு சொன்னான். தேர்ப்பாகனும் சென்று பாஞ்சாலியைப் பணிந்து அழைத்தான். அப்போது பாஞ்சாலி சீறிப்பாய்ந்தாள்.

யார் சொன்ன வார்த்தையடா?
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து

***மாதர் வருதல் மரபோடா? யார் பணியால்
என்னை அழைக்கிறாய்?***

*என்று தேர்ப்பாகனைப் பார்த்துக் கேட்டாள் பாஞ்சாலி.
நான் துருபத மன்னனின் மகள். சூதில் தோற்றுப் போன பின்னர் என்னைத் தாரமாக்கிக் கொள்ளும் உரிமை அவர்க்கில்லை.*

***கௌரவர் வேந்தர் சபை தன்னில் - அறம்
கண்டவர் யாவரும் இல்லையா? மன்னர்
சௌரியம் வீழ்ந்திடும் முன்னரே - அங்கு
சாத்திரம் செத்துக் கிடக்குமோ?***

எனச் சொல்லி, தேர்ப்பாகனை மீண்டும் திருப்பியனுப்புவதைக் காணலாம்.

பழம்பெரும் பாரதக் கதையில் பாஞ்சாலி எதிர்த்துப் பேசுபவளாகக் காணப்படவில்லை. ஆனால் பாரதியார், பாஞ்சாலியைக் கணவன்மார்களையும், கௌரவர்களையும் எதிர்த்துப் பேசுபவளாகப் படைத்துப் பெண்ணுரிமையை நிலைநாட்ட விரும்புகிறார்.

கண்ணனை வேண்டுதல்

அடிமையாக்கப்பட்ட பாஞ்சாலியைத் துச்சாதனன் பலர் இருக்கும் அவையில் இழுத்துவந்து ஆடையைக் களைய முற்படுகிறான். அந்நேரத்தில், அனைவராலும் கைவிடப்பட்ட, காப்பாற்றப்படாத சூழ்நிலையில் பாஞ்சாலி கண்ணனை இறைஞ்சி வேண்டுகிறாள்.

முதலையின் வாயில் அகப்பட்ட யானையின் கூக்குரலைக் கேட்டு அருள் புரிந்தவனே! சக்கரம் ஏந்தி நிற்பவனே! சாரங்கம் என்ற வில்லைக் கையில் ஏந்தி நின்று போரிடுபவனே! நீ அனைத்துத் துக்கங்களையும் அழித்திடுவாய். தொண்டர்களின் கண்ணீரைத் துடைத்திடுவாய்! வானத்துள் வானாக இருப்பவனே! தீயிலும் மண்ணிலும் காற்றிலும் எல்லாவற்றிலும் நிறைந்து இருப்பவனே! அறிவுக்கும் எட்டாத பொருளே! எந்தன் சொல்லினைக் கேட்டு எனக்கு அருள் புரிவாய், இரணியன் உடல்

பிளந்த கண்ணனே! உன்னடி தொழுது நான் அடைக்கலம் புகுந்தேன்! எனப் புலம்புகிறாள்.

வாக்கின் தலைவனை (பிரமனை) ஆட்கொண்ட வலிமை உடையவனே! எந்தையே! அருட்கடலே! இங்கு நூறு பேரான கௌரவர்களின் கொடுமையினின்று என்னை மீட்பாயாக! வையகம் காப்பவனே! மணிவண்ணனே! என் மனச்சுடரே! நின் தாமரை மலர்களைச் சரண் புகுகின்றேன் என வேண்டினாள் பாஞ்சாலி, கண்ணன் அருள் புரிந்தான்.

அந்நேரத்தில் துச்சாதனன், பாஞ்சாலியின் துகிலை உரிய உரிய அவளுக்குத் துகில் மலைபோலக் குவிந்து கொண்டே இருந்தது. அவனால் முடியாமல் மயங்கிக் கீழே விழுந்தான்.

வீடுமனின் தேற்றல்

'மன்னர் சபைதனில் என்னைப் பிடித்து இழுத்துப் பலபட இழிசொற்களால் பேசுகின்ற துரியோதனனை, நிறுத்தடா? என்று சொல்ல யாருமில்லையா?' எனக் கேட்ட பாஞ்சாலிக்கு, தகுதியால் உயர்ந்தவனான வீட்டுமன் எழுந்து, பாஞ்சாலியே! உன்னைத் தருமன் சூதாடித் தோற்றான்; நீயோ, வாதாடி அவன் செய்கை தவறு என்கிறாய். சூதிலே வல்ல சகுனி தன் திறத்தால் உன் மன்னனை வீழ்த்தி விட்டான்.

உன்னையும் பணயப் பொருளாக வைத்து இழந்தது தவறு என்று சொல்கிறாய். பண்டைய கால நெறிப்படி நீ சொல்வது சரி. அந்நாளில் ஆணும் பெண்ணும் சமமாக இருந்தனர். ஆனால் பிற்காலத்தில் அது மறைந்து போய்விட்டது. இப்போதுள்ள சாத்திரங்களின்படி ஆணும் பெண்ணும் சமமில்லை. இப்போது ஒருவன் தன் மனைவியை விற்கவும் தானமாகக் கொடுக்கவும் உரிமையுண்டு. இது முழுவதும் விலங்கு வாழ்க்கை. எனவே தருமன் உன்னை அடிமையாக்க உரிமை கொண்டவன். இங்கே நடக்கும் செய்திகளைக் கண்டால் கல்லும் நடுங்கும்; விலங்குகளும் கண்புதைக்கும். இங்கே நடைபெறும் செய்கைகள் அநீதியானவை.

சாத்திரத்தில் சொல்லிய நெறிகளையும் வழக்கத்தையும் நீ கேட்பதனால், அவை உன்சார்பாகக் கேட்க யாரும் இல்லை. நானும் தீய செயல்களைத் தடுக்கும் திறமில்லாதவனாகவே இருக்கிறேன் என்று சொல்லித் தலை கவிழ்ந்து அமர்ந்தான் வீடுமன்.

பாஞ்சாலியின் சபதம்

இறுதியில் பாஞ்சாலி சபதம் செய்தாள். ஆம் பராசக்தி மீது ஆணையிடுகின்றேன். பாவி துச்சாதனனை என் கணவன் வீமன் கொன்ற பின்னர் அவன் உடம்பிலிருந்து ஊறியெழும் ரத்தத்தையும் பாழ்பட்டுப் போன துரியோதனன் உடம்பு ரத்தத்தையும் கலந்து என் கூந்தலில் பூசுவேன்.

அதன் பின்னரே என் கூந்தலில் நறுநெய் பூசி என் கூந்தலை முடிப்பேன். அதுவரையில் என் கூந்தலை முடிக்கமாட்டேன் என்று பாஞ்சாலி சபதம் செய்தாள். இவ்வாறு இம்மூவரின் சபத உரைகளைக் கேட்டவுடன் தேவர்கள் 'ஓம்' என்று உரைத்தனர். ஐம்பெரும் பூதங்களும் இந்தப் புவி தருமனுக்கே எனச் சாட்சியுரைத்தன என்று சபத உரைகளை முடிக்கிறார் பாரதியார்.

வீமன்

பாண்டவர் ஐவருள் இரண்டாமவன். தோள்வலி மிக்கவன். சிறு வயது முதலே துரியோதனனைத் தன் எதிரியாகக் கருதி வந்தவன். தருமன், பாஞ்சாலியைப் பணயம் வைத்ததும் முதலில் சினம் கொள்பவன் இவனே. அதேபோல் சபதம் மேற்கொள்பவனும் வீமனே.

வீமனின் கோபம்

பணயப் பொருளாகத் தன்னையும் தம்பியரையும் வைத்து இழந்தது குறித்து, வீமன் மிகவும் கவலையுற்றுத் தருமனைப் பார்த்துச் சுடுசொற்களை வீசினான்.

சூதர் மனைகளிலே - அண்ணே
தொண்டு மகளிருண்டு
சூதர் பணயம் என்றே - அங்கு ஓர்

தொண்டச்சி போவதில்லை
என முழங்குகிறான் வீமன்.
தவறு செய்துவிட்டாய் - அண்ணே
தருமம் கொன்றுவிட்டாய்

என்றும் குறிப்பிடுகின்றான். 'பாஞ்சாலியை நாம் வெறும் சோரத்தினால் (கள்ளத்தால்) அடையவில்லை. சூதாட்டத்தில் வெற்றி பெறவில்லை. வீரத்தினால் வென்றோம் என்று தருமனைப் பார்த்துக் கேட்கிறான் வீமன். நீங்கள் நாட்டையெல்லாம் சூதில் பணயமாக வைத்தீர்கள். நாங்கள் பொறுத்தோம்! எங்களைப் பணயப் பொருளாக வைத்தீர்! அடிமையாக்கினீர். அதையும் பொறுத்தோம். ஆனால்,

துருபதன் மகளை - திட்டத்
துய்மன் உடன் பிறப்பை
இருபகடை என்றாய் - ஐயோ
இவர்க்கு அடிமை என்றாய்

எனத் தருமனை நோக்கிக் கடும் சொற்களை வீசினான். மேலும், சகாதேவனைப் பார்த்து,

இது பொறுப்பதில்லை - தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் அண்ணன்
கையை எரித்திடுவோம்

என்று தருமன் செயலை நினைத்துப் பொறுக்க முடியாதவனாக வீமன் சினந்து - இவ்வாறு பேசினான்.

வீமனின் சபதம்

நிலைகுலைந்து அழுது புரளும் பாஞ்சாலியைப் பார்த்துத் துஷ்டனான துச்சாதனன் தீய சொற்களைக் கூறிக்கொண்டே அவளது ஆடையைக் களைகிறான். கண்ணனது அருளால் மேகக் கூட்டம் போலத் துகில் பெருத்து வருவதைக் கண்ட துச்சாதனன் கீழே விழுந்தான். இந்நிலையில் வீமன் மிகவும் கோபங்கொண்டு சபதம் செய்கிறான்.

இங்குத் தேவர்கள் மீது ஆணை, பராசக்தி மீது ஆணை, பிரமதேவனின் மீது ஆணை, கண்ணன் மீது ஆணை என இறைப் பெருமக்கள் மீது ஆணையிட்டு, போர்க்களத்தில் துச்சாதனனையும், துரியோதனனையும் கொன்று அவர்களது இரத்தத்தைக் குடிப்பேன். இது உலகில் நடக்கும். அனைவரும் காண்பீராக! என்று சபதம் எடுத்தான்.

வீமனின் கோபம் தணிதல்

தருமன் மீது கடுங்கோபம் கொண்ட வீமனைப் பார்த்து அர்ச்சுனன் பேசுகிறான்.

வீமனே! என்ன வார்த்தை சொன்னாய்? யார் முன்னே இதைச் சொன்னாய்? சினம் பொருந்திய நீ உனது அறிவைப் புதைத்ததாலே மூன்று உலக நாயகனான தருமனைச் சினந்து இவ்வாறு பேசுகிறாய். கோபம் கொள்ளாதே.
தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம் இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுவுண்டு காண்டீபம் அதன்பேர்

என்று "தருமத்தின் வாழ்வைச் சூது விழுங்கும் ஆனால், தருமம் மறுபடியும் எப்படியாவது வெற்றி பெற்றே தீரும். இது இயற்கை உண்மை. அதுவரை நாம் பொறுமையாக இருப்பதே நல்லது. கோபம் வேண்டாம். யார் மேலும் குற்றமில்லை", என்று சொல்லி, வீமனின் கோபத்தைத் தணித்தான் அருச்சுனன்.

விதுரன்

மன்னன் திருதராட்டினனுக்குத் தம்பியாக இருந்தாலும், அமைச்சர் பொறுப்பு ஏற்றவன். நீதிநெறி கற்றவன். நீதியை நிலை நாட்டுவதில் உறவு முறைகளைப் பார்க்காதவன். அதனாலேயே துரியோதனனால் வெறுக்கப்பட்டவன்.

விதுரனின் அறிவுரை

சூதாட்ட மன்றத்தில் தருமனிடம் உள்ள செல்வம் அனைத்தையும் சகுனி வென்று விடுகிறான். அதன்பிறகு நாட்டைப் பணயமாக வைத்து விளையாடலாம் எனச் சகுனி சொல்கிறான். இதனைக் கேட்ட விதுரன் அதிர்ச்சியடைந்து, 'இதனால் கௌரவர் குலம் அழியும்' என்று குறிப்பிட்டான். சூதாட்டம் இனித் தேவையில்லை, நிறுத்த வேண்டும் என்றான். தன்னுடைய அண்ணன் திருதராட்டிரனுக்கும் தெரிவித்தான். இதனைக் கேட்ட துரியோதனன், கண்களில் தீப்பொறி பறக்க மிகவும் கோபம் கொண்டு விதுரனைத் திட்டுகிறான். 'எங்களிடத்தில் உள்ள செல்வத்தை அனுபவித்துக் கொண்டு; பாண்டவருக்காகப் பரிந்து பேசுகிறாயே? உன்னைச் சபையில் வைத்ததே பெருங்குற்றம்' என்றான். அன்பில்லாத பெண்ணுக்கு எவ்வளவுதான் நன்மை செய்தாலும் வாய்ப்பு வரும் பொழுது கணவனை விட்டு அகன்று விடுவாள். அதுபோல நீ இருக்கிறாயே என்று துரியோதனன் பழித்தான்.

அதற்கு விதுரன், 'உன்னை நல்வழிப்படுத்த முயன்றேன். உன் அவையில் என்னைப் போன்றவர்கள் இருத்தல் கூடாது. குலம் கெட்ட நீசர்கள், மூடர்கள், பித்தர் போன்றோர் மட்டுமே இருத்தல் முடியும். உன் சாவைத் தடுத்திடவே உரைத்தேன். இனி எவ்விதப் பயனும் இல்லை' எனத் தன் தலைகவிழ்ந்தபடி இருந்தான்.

காப்பியச் சிறப்பு

காப்பியங்களில் வருணனை ஓர் இன்றியமையாத கூறாகும். பாஞ்சாலி சபதத்திலும் வருணனை சிறந்த இடத்தைப் பெறுகிறது. அது காப்பியத்தின் சிறப்புக்குரிய ஒன்றாகவும் திகழ்கிறது.

வருணனை

இயல்பாகவே இயற்கையின் மீது காதல் கொண்ட கவிஞர், பாஞ்சாலி சபதத்திலும் இயற்கையின் வருணனையை அதிகமாகவே வழங்கியுள்ளார். பாண்டவர்கள் அஸ்தினாபுரத்திற்குப் போகும் வழியில் மாலை நேரத்து வருணனை அழகாகப் பேசப்பட்டுள்ளது. அந்த மாலை

நேரத்தின் அழகினைப் பாஞ்சாலியிடம் அருச்சுனன் சொல்வது போல் அமைக்கப்பட்டுள்ளது.

'பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில் எத்தனை தீப்பட் டெரிவன!
ஓகோ!
என்னடி இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! - செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! - வெம்மை தோன்றாமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்! - பாரடி!
நீலப் பொய்கைகள்! -அட்டா, நீல
வன்ன மொன்றில் எத்தனை வகையடி!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! - கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொறக்கரை யிட்ட
கருஞ் சிகரங்கள்! - காணடி, ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்! - ஆஹா! எங்குநோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!'

சூரியனைச் சூழ்ந்து நிற்கும் மேகங்கள் சிவப்பு நிறமானவையாக இருப்பதனால் அவை தீப்பட்டு எரிவன போல் தோன்றுகின்றன. நல்ல பொன்னைக் காய்ச்சி உருக்கி விட்டாற்போல், தங்கத்தீவுகள் போன்று மேகங்கள் உள்ளன என்று வருணித்துள்ளதைக் காணலாம். அதுபோலவே, நீலநிறமான பொய்கையில் மிதக்கும் தங்கத் தோணி போல, நீல நிறமான மேகத்திரளின் நடுவே தங்கமயமான சூரியன் மிதந்து கொண்டிருக்கிறது என்கிறார் கவிஞர்.

என்னைப் பாவப்படுத்துதல் தகுமோ? பெண்பாவம் பொல்லாதாதலால் உமக்கு இழிவு அன்றோ ? என்று அவையில் வீடுமனிடத்திலும் சாத்திரம் கற்றோர்களிடத்திலும் பாஞ்சாலி வேண்டுகோள் விடுக்கிறாள். அந்த வேண்டுகோளைப் பாரதி இவ்வாறு வருணிக்கிறார்:

அம்புபட்ட மான்போல் அழுது துடித்தாள்
வம்பு மலர்க் கூந்தல் மண்மேல் புரண்டுவிழத்
தேவி கரைந்திடும்

என அவலத்தோடு வருணிப்பதைக் காணலாம்.

அஸ்தினாபுரத்தின் பெருமைகள்

துரியோதனனின் நகரமான அஸ்தினாபுரத்திற்கு நிகரான ஊர் எதுவுமில்லை. உயர்ந்த, நீளமான தெருக்களும், நகரைச் சுற்றி அகழியுமாகக் கொண்டு விளங்குகிறது. நகரத்தின் மதில்கள், மாளிகைகள் நட்சத்திர மண்டலத்தில்கூட இதுபோலக் காணமுடியாது என்று நகரின் பெருமைகள் பேசுகிறார் பாரதியார்.

ஆகாயத்தில் மிக உயரத்தில் நெருங்கி அசைந்து, சூரிய கிரணங்களையும் உள்ளே புகாதபடி மறைத்து விளங்குகின்ற வெண்மையான கொடிச்சீலைகள், வெண்ணிறமான ஆகாய கங்கையின் அசைகின்ற குளிர்ந்த அலைகளைப் போலத் தோற்றம் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றன. பசுமையான பாக்கு மரங்கள் நிறைந்த சோலை, இந்திரனுக்காகப் படைக்கப்பட்ட சுவர்ணமயமான சுவர்க்கலோகமோ? குபேரனது அளகாபுரியோ என்பது போல மாடமாளிகைகள் காணப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நெடுந்தேர்களும் யானைகளும், மற்ற சேனைகளும் வீதிகளில் ஒன்றோடொன்று எதிரெதிரில் நெருங்கியிருத்தலால், இடம்பற்றாமல் இருப்பதால் 'போங்கள், போங்கள்' என்று பிறரைப் பார்த்துச் சொல்லும் ஒலிகளே கேட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். எல்லா மலைகளிலும் எல்லாக் காடுகளிலும், கடல்களிலும் உண்டாகிற பொருள்கள் குவித்து வைத்திருக்கும் கடைவீதிகளை அஸ்தினாபுரத்தில் காணலாம். பல நடனப் பெண்களின் நடனம், தொழில் உணர்ந்த கலைஞர்களின் ஓவியங்கள் என அஸ்தினாபுரத்தின் பெருமைகள் பற்றிப் பாஞ்சாலி சபதம்' குறிப்பிடுகின்றது.

தொகுப்புரை

பாண்டவர்கள் வாழ்க்கையை எந்த வழியாலும் கெடுத்திட எண்ணங் கொண்டவனாகத் துரியோதனன், சூதும் பொய்யும் உருவான சகுனி மூலம் பாண்டவர்களைச் சூதாட்டத்தில் ஈடுபடுத்தி, நாட்டையும் செல்வத்தையும் அபகரித்ததோடு மட்டுமல்லாமல், ஐவரையும் பாஞ்சாலியையும் பணயப் பொருளாக வைத்து அடிமைப்படுத்தினான்.

அடிமையாக்கப்பட்ட பாஞ்சாலியைச் சபைதனில் இழுத்துவரக் கட்டளையிடுகிறான். அப்படியே துச்சாதனன் அந்த

இழிசெயலைச் செய்கிறான். அந்நேரத்தில் பாஞ்சாலி மிகவும் கோபங் கொண்டவளாகப் பேசுகிறாள். (இந்த இடத்தில் பெண்களின் உரிமையைப் பெண் மூலமாகவே கேட்க வைத்து ஆணினத்தின் அதிகாரத்தைக் கேள்வி கேட்பதாகப் பாரதி பாஞ்சாலி வழிநின்று பேசுகிறார்.) சாத்திரங்களில், இதிகாசங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கும் பெண்ணின் அவல நிலையைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

பாஞ்சாலியைத் துச்சாதனன் முடி பற்றித் தெருவில் இழுத்து வரும்போது, வீதிமருங்கிலும் நின்று வேடிக்கை பார்த்த மக்களை நொந்து 'வீரமிலா நாய்கள்' என்றும், அவர்கள் அழுது புலம்புகின்ற அந்தச் செயலை; அந்தப் பயனில்லாத புலம்பலைப் 'பெட்டைப்புலம்பல்' என்றும் சாடுகிறார் பாரதியார்.

சபைதனில் பெண்மையை மானபங்கம் செய்யும் போது, பெண்ணின் வாயால் பெண்ணரசினைப் பற்றிக் கேட்கிறார் பாரதியார்.

தன்னுடைய கணவன்மார்களைப் பார்த்து வேதனைப்பட்டு, 'என்னைப் பணயத்தில் வைத்து விளையாட உங்களுக்கு என்ன உரிமை' என்று கேட்க வைக்கிறார் கவிஞர்.

இறுதியாக, காவியத்தில் மானிட சமுதாயத்தில் நம்பிக்கை வைத்தது போதும் என்று நினைத்து இறைவனிடம் வேண்டுகிறாள். காப்பாற்றப்படுகிறாள்.

பின்னர், தன்னை அவமானப்படுத்தியவர்களைக் கொன்று அதன் மூலமாகவே அவலத்தினுக்கு விடிவுகண்டு, தன் கூந்தலை முடிப்பதாகச் சபதம் ஏற்க வைத்துக் கதையை முடித்துள்ளார் பாரதியார்.பாரத நாட்டின் விடுதலையையும் பெண் விடுதலையையும் ஒன்றாக நினைத்துக் காப்பியத்தை நிறைவு செய்கிறார்.

8%E0%AE%B5%E0%AF%81_%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D



Mahakavi Bharathi Memorial Library



மகாகவி பாரதி நினைவு நூலகம் என்பது தமிழ்நாட்டின் ஈரோடு நகரின் கருங்கல்பாளையம் பகுதியில் அமைந்துள்ள ஒரு பொது நூலகம் ஆகும். தமிழ்நாட்டு மகாகவிஞர் பாரதியாரின் நினைவாக இந்நூலகத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது. **கருங்கல்பாளையம் நூலகம்** எனவும் இது பொதுவாக அறியப்படுகிறது.

வரலாறு

முன்னதாக, ஓர் அறையாகக் காணப்பட்ட இந்நூலகத்தை உள்ளூர் மக்கள் *கருங்கல்பாளையம் வாசிப்பு*

அறை என அழைத்தனர். பின்னர், சுப்பிரமணிய பாரதி 1921 ஆம் ஆண்டு இவ்வாசிப்பு அறைக்கு வருகை தர வே *மகாகவி பாரதி நூலகம்* என இது பெயர் மாற்றம் பெற்றது.[1] பின்னர் பாரதி இறந்ததினால் பாரதி நினைவு நூலகமாக மாற்றம் கண்டு வளர்ச்சி அடைந்து வந்தது.

பாரதியாரின் வருகை

1921 ஜூலை 31 அன்று **மனிதன் அழியான்** எனும் தலைப்பில் உரை ஒன்றை ஆற்றுவதற்காக கருங்கல்பாளையம் வாசிப்பு அறைக்கு பாரதியார் வருகை தந்தார். ஒரு சில வாரங்கள் கழித்து அவர் நோய்வாய்ப்பட்டு இறந்தார். கருங்கல்பாளையத்தில் ஆற்றிய உரையே அவரது கடைசி பொது உரையாக இருந்தது.[2]

சேமிப்புகள்

பின்னர், ஈரோடு நிர்வாகம் இந்நூலகத்தைப் புதுப்பித்து, பாரதியாரின் ஒவ்வொரு ஆக்கங்க ளையும் சேகரித்தது. பாரதியார் எழுதிய கட்டுரைகள், கவிதைகள், மற்றும் அவர் பொதுக்கூட்டங்களில் தேசிய விடுதலை, பெண் சுதந்திரம் பற்றி ஆற்றிய உரைகள், அ வரது ஓவியங்கள் போன்றவற்றை இந்நூலகம் தன்னகத்தே வை த்திருக்கின்றது. மேலும், பாரதியார் " *சுதேசமித்திரன்* " எனும் தினப்பத்திரிகைக்கு எழுதிய ஆக்கங்கள் அனைத்தையும் இந்நூலகத்தில் காணலாம்

அருங்காட்சியகம்

நுலகக் கட்டிடத்திற்கு அப்பால் பாரதியாரின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஓர் அருங்காட்சியகத்தையும் இந்நூலகம் கொண்டுள்ளது. இங்கு பாரதியார் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான அனைத்து விடயங்களையும் காணலாம்.

மகாகவி பாரதியார் தமிழகத்தின் தேசிய அடையாளம்... இந்தியாவின் உலக அடையாளம்... நூற்றாண்டு கடந்து உலகப் படைப்பாளர் வரிசையில் தனித்துவமான மணிமுடி சூடிய தமிழ்க் கவிஞர். உயிர்களிடத்து அன்பை ஊற்றெடுக்கச் செய்து ரௌத்ரம் பழகச் செய்து தேமதுரத் தமிழோசைகளை உலகமெலாம் ஒலிக்கச் செய்த தீர்க்கதரிசி. மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டில் உலகத்தர வரிசையில் இடம்பெற்ற பாரதியார் பல்கலைக்கழகம் உலக அரங்கில் பாரதியை முன்னிறுத்தும் நோக்கில் காணிநிலத்தைக் கட்டமைத்துள்ளது. மகாகவி பாரதியார் உயராய்வு மையத்தை உருவாக்கல், பாரதியின் கனவுகளை நனவாக்கல், பாரதியின் படைப்புகளையும் வாழ்வியலையும் ஆவணப்படுத்தல், எளிய மக்கள் முதல் உயராய்வு நிலை வரை பாரதியைக் கொண்டு சேர்த்தல், பாரதி சிந்தனைகள் வழி மனிதத்தையும் நேர்முக ஆளுமைத் திறனையும் மேம்படச் செய்தல் என்னும் செம்மையான திட்டங்களை காணிநிலம் மேற்கொண்டு வருகின்றது.

சுப்பிரமணிய பாரதி

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF


மகாகவி

சி. சுப்பிரமணிய பாரதி
பாரதியார்



சுப்பிரமணிய பாரதி

பிறப்பு	சுப்பிரமணியன் திசம்பர் 11, 1882 எட்டயபுரம், திருநெல்வேலி மாவட்டம், பிரித்தானிய இந்தியா (தற்போதைய தூத்துக்குடி மாவட்டம், இந்தியா)
இறப்பு	செப்டம்பர் 11, 1921 (அகவை 38) சென்னை, பிரித்தானிய இந்தியா
இருப்பிடம்	திருவல்லிக்கேணி, சென்னை
தேசியம்	இந்தியர்
மற்ற பெயர்கள்	மகாகவி, பாரதியார், வீர கவி, சுப்பையா, முண்டாசுக் கவிஞன், சக்தி தாசன்


பணி	செய்தியாளர்
அறியப்படுவது	கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி
குறிப்பிடத்தக்க படைப்புகள்	• பாஞ்சாலி சபதம் • பாப்பா பாட்டு • கண்ணன் பாட்டு • குயில் பாட்டு • புதிய ஆத்திசூடி
பின்பற்றுவோர்	பாரதிதாசன்
அரசியல் இயக்கம்	இந்திய விடுதலை இயக்கம்
சமயம்	இந்து சமயம்
பெற்றோர்	சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள்
வாழ்க்கைத் துணை	செல்லம்மாள்
பிள்ளைகள்	தங்கம்மாள் (பி: 1904) சகுந்தலா (பி: 1908)
கையொப்பம்	



எட்டயபுரத்தில் பாரதி பிறந்த வீடு



மனைவி செல்லம்மாளுடன் பாரதி



1900 களில் சுப்பிரமணிய பாரதி



1907 இல் பாரதியாரால் தொகுக்கப்பட்ட வார இதழ்



பாண்டிச்சேரியில் பாரதியார் வாழ்ந்த இல்லம்



காசியில் பாரதியாருக்கு அமைக்கபட்டுள்ள சிலை






பாரதியார் குடும்பம்:
வெளிவராத தகவல்கள்
பேரனின் முதல் பேட்டி




added on WithFriendship.com


HISTAR
HINDUSTAN INTERNATIONAL PRE-SCHOOL - KARAPAKKAM
MAHAKAVI BHARATHIYAR
Birth Anniversary
11 December
Subramania Bharathi, was a Tamil Writer, Poet, Journalist, Indian Independence Activist, Social Reformer and Polyglot.
www.hindustanschools.in


9.11.1919





சுப்பிரமணிய பாரதி (1882–1921) எட்டயபுரத்தில் சின்னசுவாமி ஐயர் மற்றும் லட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். அவர் 1897-ல் செல்லம்மாவை மணந்து , தங்கம்மாள் மற்றும் சகுந்தலா என்ற இரண்டு மகள்களைப்பெற்றார் . இளம் வயதிலேயே பெற்றோரை இழந்த அவர், ஒரு கவிஞராகவும் சமூக ஆர்வலராகவும் இருந்த தனது கொந்தளிப்பான வாழ்க்கையில், தனது குடும்பத்தினராலும் பின்னர் மனைவியாலும் ஆதரிக்கப்பட்டார்.

முக்கிய குடும்ப உறுப்பினர்:

- **பெற்றோர்:** சின்னசாமி ஐயர் மற்றும் லட்சுமி அம்மாள்.
- **மனைவி:** செல்லம்மா (15 வயதில் திருமணம்).
- **மகள்கள்:** தங்கம்மாள், சகுந்தலா.
- **சகோதரர்:** விஸ்வநாதன்.

ஐந்து வயதில் தாயையும், 16 வயதில் தந்தையையும் இழந்த பாரதி, இந்திய சுதந்திரத்திற்காகப் போராடியபடியே தனது பிற்கால வாழ்க்கையின் பெரும்பகுதியை வறுமையில் கழித்தார். அப்படியிருந்தும், அவரது மனைவி செல்லம்மா, எட்டயபுரம், பாண்டிச்சேரி மற்றும் மெட்ராஸ் ஆகிய இடங்களில் அவர்கள் ஒன்றாக வாழ்ந்த காலம் முழுவதும் அவருக்கு ஆதரவளித்தார்.

புகழ் மற்றும் நினைவு சின்னங்கள்

பாரதி தனது வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளை திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு வீட்டில் கழித்தார். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் வாங்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட இந்த வீடு "பாரதி இல்லம்" (பாரதியின் இல்லம்) எனப் பெயரிடப்பட்டது எட்டயபுரத்தில் இவர் பிறந்த இல்லம் மற்றும் புதுச்சேரியில் இவர் வாழ்ந்த இல்லம் ஆகியவை நினைவு இல்லங்களாகப் பேணப்பட்டு வருகிறது. இவர் பிறந்த எட்டயபுரத்தில் பாரதியின் ஏழு அடி உயரச் சிலை, மணிமண்டபம் மற்றும் இவரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படக் கண்காட்சியும் வைக்கப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு எழுத்தாளர்களுக்கான உயர்ந்த தேசிய விருதான *சுப்ரமணிய பாரதி விருது* நிறுவப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் இலக்கியத்தில் சிறந்த படைப்புகளை எழுதுபவர்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகின்றது. பாரதியார் பல்கலைக்கழகம் 1982 இல் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. தில்லி இந்திய நாடாளுமன்றம், சென்னை மெரினா கடற்கரை உட்பட பல இடங்களில் இவரின் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. கோயம்புத்தூரில் உள்ள "பாரதியார் சாலை" மற்றும் புது தில்லியிலுள்ள "சுப்பிரமணியம் பாரதி மார்க்" உட்பட பல சாலைகளுக்கு இவர் பெயரிடப்பட்டுள்ளது. இவரது பெயரில் பல பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன.

11 செப் 2021 அன்று, சுப்பிரமணிய பாரதியின் 100வது இறந்த தினத்தில், காசியின் பனாரசு இந்து பல்கலைக்கழகத்தில் சுப்பிரமணிய பாரதி தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோதி அறிவித்தார்.

இறுதிக் காலம்

சிறைவாசதிற்கு பிறகு மிகவும் மோசமாக உடல்நிலை பாதிக்கப்பட்ட இவருக்கு 1920 வாக்கில் ஒரு பொது மன்னிப்பு ஆணை வழங்கப்பட்டது. இறுதியாக இவர் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியபோது, பாரதி உடல்நலக்குறைவு மற்றும் ஏழ்மையுடன் போராடிக்கொண்டிருந்தார். இவர் வழக்கமாக உணவளிக்கும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலின் லாவண்யா என்ற யானை, ஒரு நாள் இவர் தேங்காய் வழங்கியபோது, இவரைத் தாக்கியது. இந்தச் சம்பவத்தில் உயிர் பிழைத்த போதிலும், இதன் விளைவாக சில மாதங்களில் இவரது உடல்நிலை மோசமடைந்தது. இவர் தனது கடைசி உரையை ஈரோடு கருங்கல்பாளையம் நூலகத்தில் *மனிதன் அழியாதவன்* என்ற தலைப்பில் நிகழ்த்தினார். 1921 செப்டம்பர் 11 அன்று அதிகாலை 1 மணியளவில், பாரதியார் இயற்கை எய்தினார். மக்கள் கவிஞராகவும், தேசியவாதியாகவும் இருந்த பாரதியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள 14 பேர் மட்டுமே இருந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாரதியாரின் இறப்புக்கு பின்னரும் இவரின் பாடல்கள் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டு இருந்த இந்தியாவில் தடைசெய்யப்பட்டு, புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை மாகாணச் சட்ட அவையில் சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்ற விரிவான விவாதம் 1928-ஆம் ஆண்டு அக்டோபர் 8, 9 தேதிகளில் நடந்தது.

இலக்கிய வாழ்க்கையும் விடுதலைப் போராட்டமும்

1901 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்குத் திரும்பிய பாரதி, எட்டயபுரம் அரண்மனையில் கவிஞராகப் பணியாற்றினார். அதே ஆண்டு இவர் எழுதிய பாடல்கள் *விவேகபானு* இதழில் வெளியானது. பிறகு *சுதேசமித்திரன்* இதழில் இணை

ஆசிரியராகச் சேர்ந்தார். 1905 திசம்பரில் காசியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய போது சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக வாரிசான சகோதரி நிவேதிதையைச் சந்தித்தார். பெண்களின் சுதந்திரம் மற்றும் பெண்களுக்கான உரிமைகளுக்காகப் போராட அவர் பாரதிக்கு ஊக்கமளித்தார். பெண்களின் விடுதலை பாரதியின் மனதை வெகுவாக பாதித்தது. நிவேதிதையை சக்தியின் வெளிப்பாடாகக் கருதிய பாரதி, அவரை தனது குருவாக ஏற்றுக்கொண்டார். இவர் பின்னர் தாதாபாய் நௌரோஜியின் கீழ் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டில் கலந்து கொண்டார், அது இந்திய விடுதலைக்காக போராட மற்றும் பிரித்தானியப் பொருட்களைப் புறக்கணிக்கக் கோரியது.

ஏப்ரல் 1907 வாக்கில், இவர் தமிழ் வார இதழான *இந்தியா* மற்றும் ஆங்கில செய்தித்தாளான *பால பாரதம்* ஆகியவற்றில் பங்களிக்கத் தொடங்கினார். இந்தக் காலக்கட்டத்தில் பாரதியின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் சாதனமாக இந்தப் பத்திரிகைகள் இருந்தன. இதன் பதிப்புகளில் பாரதி தனது கவிதைகளைத் தொடர்ந்து வெளியிடத் தொடங்கினார். இவரது பாடல்கள் தேசியவாதம் முதல் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவைப் பற்றிய சிந்தனைகள் வரை பல கருத்துக்களை உள்ளடக்கியதாக இருந்தன. இவர் உருசியப் புரட்சி மற்றும் பிரெஞ்சுப் புரட்சி பற்றியும் எழுதினார்.

1907 ஆம் ஆண்டில் சூரத் நகரில் நடந்த காங்கிரசு மாநாட்டில் வ. உ. சிதம்பரம்பிள்ளை மற்றும் மண்டயம் சீனிவாச்சாரியார் ஆகியோருடன் பாரதி பங்கேற்றார். காங்கிரசில் ஒரு பிரிவினர் ஆயுதமேந்திய எதிர்ப்பை விரும்பினர். பால கங்காதர திலகர் தலைமையில் அணிவகுத்த இந்தப் பிரிவினருக்கு ஆதரவாக சிதம்பரனார், வரதாச்சாரியார் மற்றும் பாரதியார் இருந்தனர். 1908 இல், பிரித்தானியர்கள் சிதம்பரனாரைக் கைது செய்தனர். பின்னர் பாரதி எழுதி வந்த "இந்தியா" நாளிதழின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். தானும் கைது செய்யப்படுவதற்கான

வாய்ப்புள்ளதை அறிந்த பாரதி, பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்த பாண்டிச்சேரிக்குத் தப்பிச் சென்றார்.



பாரதி வெளியிட்ட *விஜயா* இதழ்

பாண்டிச்சேரியில் வாழ்ந்த காலத்தில், அங்கிருந்து *இந்தியா* மற்றும் *விஜயா* என்ற தமிழ் நாளிதழ்கள், *பால பாரதம்* என்ற ஆங்கில மாத இதழ் மற்றும் உள்ளூர் வார இதழான *சூர்யோதயம்* ஆகியவற்றைத் தொகுத்து வெளியிட்டார். பிரித்தானியர்கள் இந்த இதழ்களின் வெளியீட்டை தடுக்க முயன்றனர். *இந்தியா* மற்றும் *விஜயா* இரண்டும் 1909 இல் பிரித்தானிய இந்தியாவில் தடை செய்யப்பட்டன. பாண்டிச்சேரியில் சுதந்திர இயக்கத்தின் புரட்சிகரப் பிரிவின் அரவிந்தர், லாலா லஜபதி ராய் போன்ற பல தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு பாரதிக்குக் கிடைத்தது. பாரதி *ஆர்யா* மற்றும் *கர்ம யோகி* போன்ற இதழ்களின் வெளியீட்டிற்கு அரவிந்தருக்கு உதவினார். இவர் வேத இலக்கியங்களைக் கற்கத் தொடங்கிய காலமும் இதுவே. 1912 ஆம் ஆண்டு இவரது பிரபலமான படைப்புகளான *குயில் பாட்டு*, *பாஞ்சாலி சபதம்* மற்றும் *கண்ணன் பாட்டு* ஆகியவை இயற்றப்பட்டன. இவர் பதஞ்சலியின் *யோக*

சூத்திரம் மற்றும் *பகவத் கீதை* ஆகியவற்றை தமிழுக்கு மொழிபெயர்த்தார்.

நவம்பர் 1918 இல் கடலூர் அருகே பிரித்தானிய இந்தியாவுக்குள் நுழைந்த உடன் பாரதி கைது செய்யப்பட்டார். நவம்பர் 20 முதல் திசம்பர் 14 வரை மூன்று வாரங்கள் கடலூரில் உள்ள மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் அன்னி பெசன்ட் மற்றும் ராமசாமி ஐயர் ஆகியோரது முயற்சியால் விடுவிக்கப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் வறுமையால் வாடிய இவர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். 1919 ஆம் ஆண்டு பாரதி முதன் முறையாக மகாத்மா காந்தியைச் சந்தித்தார். 1920 ஆம் ஆண்டு முதல் *சுதேசிமித்திரன்* இதழின் பதிப்பை மீண்டும் தொடங்கினார்.

பாரதி (திரைப்படம்)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF_(%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D)

பாரதி



இயக்கம்	ஞான ராஜசேகரன்

தயாரிப்பு	சுஜாதா ரங்கநாதன், எம். வரதராஜன், கே. மணிபிரசாத்
கதை	ஞான ராஜசேகரன்
இசை	இளையராஜா
நடிப்பு	சாயாஜி ஷிண்டே, தேவயானி, நிழல்கள் ரவி
ஒளிப்பதிவு	தங்கர் பச்சான்
படத்தொகுப்பு	பி. லெனின்,வி. டி. விஜயன்
விநியோகம்	மீடியா ட்ரீம்ஸ் தனியார் நிறுவனம்
வெளியீடு	2000
ஓட்டம்	150 நிமிடங்கள்.
மொழி	தமிழ்

பாரதி திரைப்படம் 2000 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். ஞான ராஜசேகரன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படம் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பாரதியாராக சாயாஜி ஷிண்டேயும், செல்லம்மாவாக தேவயானியும் நடித்துள்ள இத்திரைப்படம் 2000 ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத்திற்கான **தேசிய விருதைப்** பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

கதைச்சுருக்கம்

இத்திரைப்படம் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படமாகும். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பாரதியின் பங்கையும், பாரதியின் உயர்வான சிந்தனைகளும் இப்படத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம்.

நடிகர்கள்

நடிகர்	கதாப்பாத்திரம்
சாயாஜி ஷிண்டே	சுப்பிரமணிய பாரதி
தேவயானி	செல்லம்மாள்
புஷ்பாக் ரமேஷ்	சிறு வயது பாரதியாக
ரமேஷ் குமார்	பாரதியின் நண்பராக
நிழல்கள் ரவி	எஸ். பி. ஒய். சுரேந்திரநாத் ஆர்யா
டி. பி. கஜேந்திரன்	குவளை

வகை

கலைப்படம் / வரலாற்றுப்படம்

பாடல்கள்

இத்திரைப்படம் இளையராஜா இசையமைத்த திரைப்படமாகும்

எண்	பாடல்	பாடகர்கள்	பாடலாசிரியர்
1	*அக்கினி குஞ்சொன்று*	கே. ஜே. யேசுதாஸ்	சுப்பிரமணிய பாரதி

2	*பாரத சமுதாயம்*	கே. ஜே. யேசுதாஸ்	சுப்பிரமணிய பாரதி
3	*எதிலும் இங்கு*	மது பாலகிருஷ்ணன்	புலமைப்பித்தன்
4	*பிரெஞ்ச் இசை*	இளையராஜா	-
5	*கேளடா மானிடவா*	ராஜ்குமார் பாரதி	சுப்பிரமணிய பாரதி
6	*மயில்போல பொண்ணு*	பவதாரிணி	மு. மேத்தா
7	*நல்லதோர் வீணை*	மனோ, இளையராஜா	சுப்பிரமணிய பாரதி
8	*நின்னைச் சரணடைந்தேன்*	பாம்பே ஜெயஸ்ரீ	சுப்பிரமணிய பாரதி
9	*நின்னைச் சரணடைந்தேன்*	இளையராஜா	சுப்பிரமணிய பாரதி
10	*நிற்பதுவே நடப்பதுவே*	ஹரிஷ் ராகவேந்திரா	சுப்பிரமணிய பாரதி
11	*வந்தேமாதரம்*	மது பாலகிருஷ்ணன்	சுப்பிரமணிய பாரதி

Videos

01] Interview With Dr. Mira Great Granddaughter of Mahakavi Bharathiyar.

https://www.youtube.com/watch?v=gyjXyo_4L54 [36:21]
Interview with Professor (Dr.) Mira T. Sundara Rajan, DPhil (Oxon.) - Great Grand daughter of Mahakavi Bharathiyar

02] மகாகவி பாரதியாரின் கதை

https://www.youtube.com/watch?v=0ywU98OzxPk [23:49]

03] Interesting Facts About Mahakavi Bharathiyar | Chennai Lit Fest 2023

https://www.youtube.com/watch?v=7Zk8XgYaZ1A [35:25]

04] Role of Mahakavi Bharathiyar in Freedom Movement

https://www.youtube.com/watch?v=HOhC4rh7LW4 [54:20]

Guest: Prof. Dr. Ulaganayki Pazhani Tamil Scholar, Writer, Motivational Speaker

05] மகாகவி பாரதி : Mahakavi Bharathi :Documentary

https://www.youtube.com/watch?v=oac-LB2e_Tk [30:29]

06] மகாகவி சுப்ரமணிய பாரதியார் பிறந்ததின சிறப்பு நிகழ்ச்சி

https://www.youtube.com/watch?v=s6K5iBGGUXM [51:59]

07] Subramania Bharati Documentary (USA/English)

https://www.youtube.com/watch?v=osg8rnBtAFI [44:34]

08] மகாகவி சுப்ரமணிய பாரதியார் பாடல்கள்

https://www.youtube.com/watch?v=sdt53qES8gE [1:00:59]

09] TOP 50 Songs of Subramania Bharathi : பாரதியார் பாடல்கள்

https://www.youtube.com/watch?v=2CXAp09ldVU [3:10:06]

10] மகாகவி பாரதியார் :தேசியக் கவி பாரதியாரின் இன்றியமையாத குறிப்புகள்

https://www.youtube.com/watch?v=loXkWRGIm9Q [26:57]

11] Memories of Mahakavi Bharathiar - A great tamil poet | About Bharati in Tamil | Bharathiyar songs

https://www.youtube.com/watch?v=t6aClExK5A8 [35:41]

12] அட்டகாசமான தமிழில் பட்டைய கிளப்பிய ஜோ மல்லூரி பேச்சு

https://www.youtube.com/watch?v=vSwduxc1l1s [22:24]

Dharmendra Pradhan meets family of Mahakavi Subramania Bharathiyar in Varanasi

https://www.financialexpress.com/jobs-career/education-dharmendra-pradhan-meets-family-of-mahakavi-subramania-bharathiyar-in-varanasi-2843290/



Mahakavi Bharathiyar's home on the banks of Hanuman Ghat in Kashi is a pilgrimage.

Union Minister for Education and Skill Development and Entrepreneurship Dharmendra Pradhan today in Varanasi met K V Krishnan, 96-year-old nephew of Mahakavi Subramania Bharathiyar and his family.

One of the greatest Tamil literary figures of all time, Mahakavi Bharathiyar's home on the banks of Hanuman Ghat in Kashi is a pilgrimage. He said that Subramania Bharathiyar's ideals on social justice and women empowerment is more relevant now than ever. Kashi had a profound influence on

shaping Bharathiyar's personality and KashiTamilSangamam celebrates the philosophical unity and commonality between our two great cultures, he further added. He also said that Mahakavi will forever be an inspiration for next generations.

Memorial for a Tamil Poet Mahakavi Bharathi at Kasi / Varanasi UP India

https://www.tripadvisor.in/ShowUserReviews-g297685-d27531266-r945396814-House_Of_Mahakavi_Bharathiyar-Varanasi_Varanasi_District_Uttar_Pradesh.html

[Visit these Web Link for nearly 20 Photos]

https://wanderlog.com/place/details/9838180/house-of-mahakavi-bharathiyar

Memorial for a Tamil Poet Mahakavi Bharathi at Kasi / Varanasi UP India

Famous Tamil Poet Mahakavi Bharathiyar spent 4 years (1898-1902) of his life time in Kasi in a room at his aunt's house in Hanuman Ghat (opposite to Shankara Madam) and met many stalwarts like Pandit Madhan Mohan Malaviya, Bala Gangadhara Thilagar and Madam Annie Besant. He wrote his famous poems (Vellaiththaamarai Pooviliruppaal, Paarukkulle Nalla Nadu) here on the banks of River Ganga at Kasi and also a poem on river Ganga and slogans for establishing BHU. Thanks to the persistent efforts of the present Collector of Varanasi and TN State Government, a memorial stands today at Hanuman Ghat area of the place that the poet loved. The collector Mr Rajalingam, a Tamilian from Kadayanallur has promised a library with all documents connecting the life of Mahakavi Bharathiyar to the four years in Kasi. The memorial was inaugurated with a bust size bronze statue of Mahakavi

Bharathiyar on Dec 11, 2022 by TN Chief Minister Mr MK Stalin.

(😊)(😊) மகாகவி பாரதியார (😊)(😊)

<u>பேராசிரியர் முனைவர் ந சுப்புரெட்டியார் எழுதிய நூல்கள்</u>

[01] பாஞ்சாலி சபதம் ~ ஒரு நோக்கு

https://archive.org/details/paanjaalisabathamorunokku

[02] கண்ணன் பாட்டுத்திறன்

https://archive.org/details/kannanpaattuthiran

[03] குயில் பாட்டு : ஒரு மதிப்பீடு

https://archive.org/details/kuyilpaattuorumathipeedu

[04] பாரதீயம்

https://archive.org/details/bharathiyam_201908

[05] புதுமை[மை]க்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண்ணோட்டம்


https://archive.org/details/puthumaikkavignarsubbharathi

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்



பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பாரதியின் புலமையையும், காவியத்தின்
சுவையையும் தமிழக மக்களிடையே
கொண்டு செல்லும் நோக்கோடு
படைக்கப்பெற்ற ஒரு திறனாய்வு நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-7-0

eBOOK ~ மின் நூல்

பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு

பாரதி நூற்றாண்டு (1982) விழா வெளியீடு

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தேவி திரௌபதி சொல்வாள் - ஓம்
தேவி பராசக்தி ஆணைஉரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர் - அந்த
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டும் கலந்தே - குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப்பேன் - இது
செய்யுமுன்னே முடியேன் என்றுரைத்தாள்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு

முதற்பதிப்பு – 1982
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.275.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN: 978-81-938927-7-0

9 788193 892770 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

நூல்முகம்

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பல்வகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.[1]

—பாரதியார்

'பாஞ்சாலி சபதம்' என்ற இச் சிறு காவியம் பாரதியாரின் சுவை மிகுந்த அற்புதப் படைப்பு. ஓதற் கெளிதாய் இருந்தாலும் சில பகுதிகள் உணர்தற்கரியனவாயும் சிந்தைக்கு விருந்தாகவும் இருப்பதை இதனை ஆழ்ந்து கற்போர்தாம் அறியமுடியும். கல்விச் செருக்குடைய புலவர்கள் களிக்கும் கற்பனை முறைகளையும் அணிகளையும் கையாண்டு —ஆனால் எளிய சொற்களையும் சாதாரண மக்களின் பேச்சுகளில் காணப்பெறும் சொற்களையும் பயன்படுத்தி— சுவை மிகுந்த ஓர் அரிய சிறு காவியத்தைப் படைத்ததில் பாரதிக்கு நிகர் பாரதிதான் என்பதைக் காவியத்தை ஊன்றிப் படித்துத் துய்ப்போர்தாம் அறிதல் முடியும்; உணர்ந்து தெளிதலும் இயலும்.

வானொலியிலும் தொலைக் காட்சிகளிலும் இக்காவியத்தைக் கூட்டியும் குறைத்தும் ஒலி/ஒளி பரப்பப்பெற்ற போதிலும், பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் இக்காவியம்

1. புதிய ஆத்திசூடி-காப்பு (பரம்பொருள் வாழ்த்து).

இடம் பெற்ற போதிலும் பாரதியின் புலமையையோ காவியத் தின் சுவையையோ பெரும்பாலான மக்கள் உணர்ந்தவர் களாகத் தெரியவில்லை. சுமார் கால் நூற்றாண்டாக என் அரிய நண்பர் அமரர் திருலோக சீதாராம் அவர்கள் இதனை ஓரங்கநாடகத்தை ஒருவரே நடிப்பதுபோல் பாடுகின்ற வாய் தேனூறும் முறையில்-இலக்கிய ரஸம் வாயினின்றும் சொட்டும் முறையில் பல்வேறு இடங்களில் பாடிப்பாடிப் பரப்பினாலும் அதனைக் கேட்கும் கூட்டம் அவ்வப்போது மகிழ்வதுடன் சுவை முடிந்து விடும்; அதன்பிறகு தொடர்ந்து ஒருவரும் சுவைப்பதில்லை; பிறரிடமும் எடுத்துக் கூறுவது மில்லை. கல்லூரி, பல்கலைக் கழகங்களில் கற்பிப்போரும் இதனைத் தக்க முறையில் பயிற்றுவதுமில்லை; பெரும் பாலான மாணக்கர்கள் இதன் சுவையை உணர்ந்து துய்ப்ப தாகவும் தெரியவில்லை.

'பாரதியும் பட்டிக் காட்டானும்' என்ற கவிதையைப் படைத்த கவிமணியின் தொண்டு பாரதியாரைத் துய்ப்பதற்கு ஒருவழி காட்டியாக அமைந்துள்ளது என்பதற்கு இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. 'பாஞ்சாலி சபதத்தைப் பண்ணோடு பாடினால் கேட்போர் கிறுகிறுத்துப் போவர்; அந்தக் கிறுக்கில் இலக்கியச் சுவையின் போதை ஏறுவதற்கும் குறையிராது; கள்வெறி கட்குடியர்களை மேலும் மேலும் கட்குடியில் கொண்டு செலுத்துவதுபோல் இந்தப் 'போதை' இலக்கியத்தை—குறிப்பாகப் பாரதியின் கவிதைகளை—அநு பவித்துப் படிப்பதில் கொண்டு செலுத்தும் என்பதற்கு ஐய மில்லை.

அன்னை 'பாஞ்சாலி—சபதம்'
அறைதல் கேட்டேனடா!
முன்னைக் கதையெல்லாம்—கண்ணின்
முன்நடந்ததடா!

என்ற பட்டிக் காட்டானின் அநுபவம் ஏற்பட்டால்தான் படிப்போர் இக்காவியத்தைச் சுவைத்தவர்கள் ஆவார்கள். அப்படி அநுபவம் ஏற்பட்டவர்கள் எத்துணை பேர் இருக்க முடியும்?

பல ஆண்டுகளாகப் 'பாஞ்சாலி-சபதத்தை'ச் சுவைத்து மகிழ்ந்தவன் யான். நான் சுவைத்த முறைகளை யெல்லாம் —நான் பெற்ற அநுபவத்தை யெல்லாம்—பாரதியாரின் நூற்றாண்டில் எழுத்து வடிவத்தில் அமைக்க முயன்றுள்ளேன் என் முழு அநுபவமும் இந்த நூலில் வெளிவந்ததா என்பது ஐயமே ஏதோ முயன்றுள்ளேன். மாம்பழத்தின் சுவையை அதைப்பற்றிய கட்டுரையொன்றினைப் படித்து உணர முடியாது. அந்த மாம்பழத்தைச் சுவைத்து மகிழ்ந்தால் தான் சுவை முழுவதும் வெளிப்படும். அங்ஙனமே, இக்காவியத்தை விருப்புடன் படித்துத் துய்ப்பவர்களே இதன் முழு அநுபவத்தைப் பெறுதல் இயலும்.

என் எழுத்து வடிவம் 'அச்சு வடிவம்' பெறுமா என்ற ஐயம் அடிக்கடித் தோன்றிக் கொண்டே இருந்தது. ஒருவர் வெளியிட ஒப்புக் கொண்டார்; கொட்டுவாயில் கைவிரித்தார்; மற்றொருவர் என் கடிதத்திற்கு 'மௌனம்' சாதித்து விட்டார். ஏதோ ஒரு நிமித்தத்தின்பொருட்டு மதுரை செல்லும் வாய்ப்பு இருந்தது. அன்னை மீனாட்சியின் தரிசனம் வாய்த்தது. அவள் அருளால் 'சர்வோதயம்' தென்பட்டது. 'சர்வோதய இலக்கியப் பண்ணை' இந்நூலை வெளியிட உவப்புடன் ஒப்புக் கொண்டது. பண்ணையாருக்கு என் மனமுவந்த நன்றி என்றும் உரியது.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய நாவல் ஆர்ட் அச்சகத்தினருக்கு என் நன்றி கலந்த அன்பைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

இச்சமயத்தில் பாரதியாரின்,

'செய்யும் கவிதை பராசக்தி
யாலே செயப்படுங்காண்'[2]

'பாட்டினிலே சொல்லுவதும்
அவள் சொல் லாகும்'[3]

என்ற வாக்குகளைச் சிந்திக்கின்றேன். பாரதியார் கருதுவது போல் இந்நூலை யான் எழுதி வெளியிட்டதற்கு என்னுள்ளே இருக்கும்திருவேங்கட முடையானேஆவான். அவனே எனக்கு நோயற்ற நிலையையும் எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப் படுத்தி வருபவன். அவனே பாரதியார் வழிபடும் சக்தியாகவும் இருந்து வருகின்றான்; அவனை மனம், மொழி. மெய்களால் வழுத்தி இறைஞ்சி வணங்கு கின்றேன்.

நாரண னென்று பழவேதம் — சொல்லும்
நாயகன் சக்தி திருப்பாதம்;
சேரத் தவம் புரிந்து பெறுவார் — இங்கு
செல்வம் அறிவு சிவபோதம்.[4]

சென்னை-600040
அக்டோபர் 2, 1982

ந. சுப்பு ரெட்டியார்.

2. வி.நா.மா. 26
3. பேதை நெஞ்சே - 5
4. தோ.பா: 23 சக்தி விளக்கம் - 4


உள்ளுறை

பின்னிணைப்புகள்



கண்ணன் பாட்டுத்திறன்

பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publication

(பாரதி நூற்றாண்டு விழா வெளியீடு)

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

கண்ணன் பாட்டுத்திறன்

[பாரதி நூற்றாண்டு விழா வெளியீடு]

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பாட்டிலமைந்துள்ள படிமங்களையும், கலவை
உருக்காட்சிகளையும் வெளிநாட்டார் இலக்கியத்
திறனாய்வுவழி எடுத்துக் காட்டியுள்ளமை
சுவையாகவும், இலக்கிய மாணாக்கர்கட்கு
பெரிதும் பயனுடையதாக அமைந்துள்ளது

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications



ISBN: 978-81-939270-7-6

eBOOK ~ *மின் நூல்*

கண்ணன் பாட்டுத்திறன்

[பாரதி நூற்றாண்டு விழா வெளியீடு]

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

கண்ணன் பாட்டுத்திறன்

முதற்பதிப்பு – 1982
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.325.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939270-7-6

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொறுப்பு), சென்னை-600 006.)

'**பா**ட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்திடும்' மகாகவி பாரதியாரைப்பற்றிப் பட்டி தொட்டியும் இன்று அறியும். உலகப் புலவராக, இன்று, உலகம் அந்த மாமேதைக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறது. பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் தானும் தனித்து நின்று பாரதியைக் **கண்ணன் பாட்டுத்திறன்** என்ற நூல்வழி தன் பற்றையும் பாசத்தையும் காட்டிப் போற்றுகிறார்.

முல்லை, குழல், கண்ணன் இம் மூன்றும் மணம், இனிமை, அழகு ஆகியவற்றைத் தமிழகத்தில் பரப்பிக்கொண்டு ஒளி விட்டுக்கொண்டிருக்கும் சொற்களாம். முல்லை நிலத்தில் குழலிசையை மாயோன் பரப்புவதைத் தமிழ்க் கவிஞர்கள் சுவைத்துச் சுவைத்து உருகி உருகி உருக்கமாகப் பாடியுள்ளார்கள். ஆயினும், அவரவர் முத்திரையை ஆங்காங்கே பதித்துள்ளனர். அந்த வரிசையில் கண்ணனைப் பாரதியார் தம் முத்திரையுடன் பாடியுள்ள தன்மைகளைச் சுவைபட ஆய்வதே "கண்ணன் பாட்டுத்திறன்" என்ற நூலாகும்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் ஆழ்ந்த புலமையும், தெளிவுடன் கூறும் நெறியும் நூல் முழுதும் மின்னுகின்றன.

ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் நிலைத்து வாழ்ந்து வரும் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தெளிந்து அவைகளிலுள்ள கருத்துகளை, 'கண்ணன் பாட்டுத் திறனை' விளக்குவதற்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ளமை அவருடைய பரந்துபட்ட ஆய்வுநெறியைப் புலப்படுத்துகிறது.

தொல்காப்பியத்தில் பல தேவனைக் காட்ட ஆசிரியர் முயன்றிருப்பதை (பக்கம் 5) நோக்கின் அவர் வேட்கை புலனாகும்.

சம்பந்த ஞானத்தை "இறைவனுடன் நமது உறவுகள்" என்ற தலைப்பில் மிக அற்புதமாகப் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் எடுத்துவிளக்கியுள்ளார்.

கண்ணன் பாடல்களில் 'ரசங்களைக்' கூறிப் பாரதி எழுதியுள்ளதை யாவரும் அறிவர். எனவே, அச்சுவைகளைப் பற்றி ஆசிரியர் வடமொழிவழி நின்று விளக்குவது ஆய்வாளர் கவனத்தை ஈர்ப்பதாகும். "எல்லாவற்றையும் இன்பமாக உணரும் நிலை மனத்திற்குக் கிட்டிவிட்டால் அது பெறற்கரிய பேறாகும். அந்நிலை கொண்ட மனம் வாய்க்கப் பெற்றவனே கவிஞன்" (பக்கம் 17) என்ற ஆசிரியர் கூற்று ஆழ்ந்து எண்ணத்தக்கது.

"முனிவர் துக்ககரமான நிகழ்ச்சியை ஏற்றிருப்பாராயின் அவரது வாயினின்று கவிதை வெளிவராது என்பது திண்ணம். கவிதை ஆனந்தக் களிப்படைந்த உள்ளத்திலே உருவெடுக்கும் என்பதை நாம் நன்கு அறிவோம்" (பக்கம் 27) என்ற கருத்தைப் பார்க்கும்போது அவல நிலையில் ஒப்பாரி தோன்றுகிறதே என்ற எண்ணம் முகிழ்க்கலாம்.

சுவைகளை ஒவ்வொரு பாடலிலும் ஆசிரியர் பொருத்திக் காட்டியிருப்பது மிகப் பயனுடையதும் தக்கதுமாம். நூல் முழுமையும் ஆங்காங்கே அவை எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

பாரதியாரின் புது நெறியை டாக்டர் பேராசிரியர் ரெட்டியார் காட்டுவதற்கு ஒரு சான்று. "பண்டைய சங்கப் பாடல்களிலும் பிற்காலத்தில் எழுந்த பக்திப் பாசுரங்களிலும் பிரிவாற்றாமையைத் தாங்க முடியாது நாயகியே தவிப்பதாக நவிலப் பெற்றிருக்கும் இதுவே அகத்திணை நெறி. ஆனால், இங்கு நாயகன் தவிப்பதாக ஒரு புது நெறியை வகுத்து விடுகின்றார் பாரதியார்" (பக்கம் 178).

பாரதியின் கீதோபதேசம் என ஆசிரியர் எடுத்துக் காட்டுவது நினைக்கத் தக்கது. "அன்றாடம் வாழ்வே சதம் என்று கருதி மயங்கி நிற்கும் மக்களுக்குப் புதிய வாழ்வில் புகுவதற்கு மக்கள் யாவரும் சுதந்திரப் போரில் பங்கு பெற வேண்டும் என்பதே பாரதியின் கீதோபதேசம்" (பக்கம் 206) எனக் கண்ணன் பாடல்கள்வழி அதனை ஆசிரியர் காட்ட விழைகிறார்.

பாட்டிலமைந்துள்ள படிமங்களையும் கலவை உருக் காட்சிகளையும் வெளிநாட்டார் இலக்கியத் திறனாய்வுவழி எடுத்துக் காட்டியுள்ளமை, சுவையாகவும், இலக்கிய மாணவர்க்குப் பயனுடையதாகவும் அமைந்துள்ளது.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் அறிவியல் அறிவும் (பக்கம் 29, 87, 113) தம் ஆசிரிய அநுபவமும் (பக்கம் 75) ஆங்காங்கே ஒளிவிடுகின்றன. மாணவர் சமுதாயத்திலும் பொதுக்கூட்டங்களிலும் பேசப்படும் "அறுவை"யைக் கூட ஆசிரியர் விடவில்லை (பக்கம் 58, 140).

நாட்டுத் தலைவர்களையும் தன் ஆய்வுக்குக் கொண்டு வருகிறார் ஆசிரியர். "இப்பகுதியைப் படிக்கும்போது 'தந்தை பெரியாரே' கண்ணனாக நின்று பேசுவதுபோல் தோன்றுகிறது (பக்கம் 66) என்பது அவர் குறிப்பாகும்.

ஆசிரியர் ஆங்காங்குத் தந்துள்ள அடிக்குறிப்புகள் மிகப் பயனுடையன. "இதனால் சில மேதாவிகள் ஆங்கில இலக்கியங்

களை மட்டிலும் படித்துவிட்டு—இன்னும் சிலர் எதனையும் படிக்காமல்-இவர்கள் நெருப்பு என்றாலே வாய் வெந்துவிடும் என்று கருதும் அதி மேதாவிகள்—நமது இலக்கியங்களில் சிருங்காரம் ஒன்றே அதிகமாகத் தென்படுவதாயும், அவற்றி லுள்ள பச்சையான வருணனைகளைக் கண்டு அவ்விலக்கியங் களை அதிகமாக இகழ்கின்றனர்" (பக்கம் 137) என எழுதி அங்கு அடிக்குறிப்பில் யார் எனக் குறிக்காமல் திட்டவட்ட மாகக் குறிப்பிட முடியவில்லை என எழுதும் நெறியை ஆய்வு நெறியாளர் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் 'கண்ணன் பாட்டுத் திறனைப்' பலரும் படித்து நற்பயன் பெறுவர் என்பதில் ஐயமில்லை. அவருடைய நடை தெளிவாக, நேராகச் செல்கிறது. வடமொழிச் சொற்கள் இருபபினும் அவை தத்துவங்களை விளக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓட்டம் தடைபடவில்லை.

பல நூல்களைத் தமிழுலகிற்கு வழங்கிவரும் பேராசிரியர் மேலும் பல நல்ல நூல்களைப் படைத்து தமிழ்த் தொண்டாற்றி மென்மேலும் பேரும் புகழும் பெறத் தமிழன்னை தண்ணருள் சுரப்பாளாக.

சென்னை-600 006
27-9-82

கா. மீனாட்சிசுந்தரம்

நூல் முகம்

உருவாய் அறிவில் ஒளிர்வாய்—கண்ணா!
உயிரின் அமுதாய்ப் பொழிவாய்க் கண்ணா!
கருவாய் என்னுள் வளர்வாய்—கண்ணா!
கமலத் திருவோ டிணைவாய்—கண்ணா!
வருவாய், வருவாய், வருவாய், கண்ணா![1]

—பாரதியார்

பாரதியாரின் கண்ணன் பாட்டு கவிதை இன்பத்தின் —பக்தி அநுபவத்தின் கொடுமுடிக்குப் படிப்போரைப்— —பாடி அநுபவிப்போரை—இட்டுச் செல்லும் ஓர் அற்புத இலக்கியப் படைப்பு. இதனைப் படித்து அநுபவித்த பிறகு என் உள்ளத்தில் குமிழியிட்டெழுந்த சில கருத்துகளே இந் நூலாக வடிவம் பெறுகின்றன. பாரதியாரின் நூற்றாண்டில் இந்நூல் உலாவரத் தொடங்குகின்றது. தமிழன்பர்கள் இதனை ஒரு விருந்தாக ஏற்று அநுபவிப்பார்களானால் அதனை நான் பெற்ற பேறாக மகிழ்வேன்.

"இதன்(கண்ணன் பாட்டின்) ஆசிரியர் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். ஆனால் அவர் பெருமையை உள்ளபடி அறிந்தவர்கள் மிகமிகச் சிலரே யாவர். ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர்; தெய்விகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ் நாட்டின் 'ரவீந்திர நாதர்'; இவர் எனது தமிழ்நாட்டின் தவப்பயன்...இந்த ஆசிரியரின் காலத்திற்குப் பின், எத்தனையோ

1. தோ. பா. வருவாய் கண்ணா!

> நூற்றாண்டுகட்குப்பின், இவர் பாடல்களைத் தமிழ் நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன். இந்நூல் வாழ்க! என்னவர் வாழ்க!' எந்தாய் வாழ்க!!!'[2]

இது 'கண்ணன் பாட்டுக்கு' நெல்லையப்ப பிள்ளை எழுதிய முகவுரையின் பகுதி. பிள்ளையவர்களின் 'உபநிடத உண்மை' போன்ற கூற்றின் உண்மையை இன்று நாம் காண்கின்றோம்.

கண்ணன் பாட்டில் தெய்விகப் புலவர் காட்சி தருகின்றார். ஜீவன் முக்தராகத் திகழ்ந்த கவிஞர் தென்படுகின்றார். இவரைத் தமிழ் நாட்டின் தவப் பயனாகக் காண்கின்றோம்; உணர்கின்றோம். 'கண்ணன் பாட்டு' வாழ்கின்றது. 'இறவாத புகழுடைய புதுநூலாக' வாழ்கின்றது. அதனை இயற்றிய 'என்னவர்' வாழ்கின் றார். கவிஞரின் பெயரால் தமிழக அரசு எடுத்த பல்கலைக் கழகம் கவிஞரின் புகழுடம்பாகத் திகழ்கின்றது. அதில் 'எந்தாயும்' வாழ்கின்றாள்; 'புகழ் ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்' என்ற கவிஞரின் கூற்று உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

இந்நூல் வெளிவரும் "பேறு' கிட்டுமோ என்ற ஐயம் முளைவிட்டது. கண்ணன் அருளால் 'சர்வோதயம்' உதய மாயிற்று. சர்வோதய இலக்கியப் பண்ணை என் கைப்படியை அன்புடன் ஏற்று வெளியிட்டது. இந்நிறுவனத் தின் அன்பைப் போற்றுகின்றேன்; நிறுவனத்தாருக்கு என் அன்புகலந்த நன்றியைப் புலப்படுத்திக்கொள்கின்றேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டும், மேலுறையைக் கண்கவர் வனப்புடனும் பக்தியுடனும் அச்சிட்டும்

---

2. முதற் பதிப்பின் முகவுரை.

கட்டமைத்துத்தந்த மாருதி அச்சகத்தாருக்கு என் நன்றியை யும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் பல இடங்களில் பணி யாற்றியபொழுது அவர்தம் புகழால் அவரை அறிவேன்; அண்மைக் காலமாக அவர்தம் சென்னை வாழ்க்கையால் எனக்கு அவரிடம் நெருக்கம் ஏற்பட்டது; நெருங்கிய நண்பரானார். நெருங்கிப் பழகுந்தோறும் இவரிடம் இயல்பாகவே அமைந்துள்ள நேர்மை, ஒழுங்கு, பெருமித தோரணை, நெஞ்சுரம், எளிமை இத்துணைக்கும் மேலாக அடக்கம் ஆகிய நற்குணங்களும் புலமையும் மிகுதிறமும் என்னைக் கவர்ந்தன. இவர் 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்ற பொன்மொழிகட்கு இலக்கியமாகத் திகழ்வதையும் கண்டேன். பாரதியாரின் நூல்களை ஆராய்ச்சிப் பட்டத் திற்கு முதன் முதலாக 'ஆய்வுப் பொருளாக' எடுத்து ஆய்ந்த பெருமை இவரைச் சாரும். இந்தப் பெருமையையே பற்றுக்கோடாகக் கொண்டு இந் நூலுக்கு 'அணிந்துரை' வழங்குமாறு வேண்டினேன். என் வேண்டுகோளை அன்புடன் ஏற்று அழகியதோர் அணிந்துரை நல்கிய என் கெழுதகை நண்பருக்கு என் இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

இந்நூலை யான் எழுதி வெளியிட்டதற்குக் காரணம் என் இதயத்தில் 'கோயில் கொண்ட கோவலனே'—கண்ணனே—ஆவான். இவனே பாரதியார் இதயத்தில் வீற்றிருந்து அவரைக் கருவியாகக் கொண்டு தன்னைப் பாடுவித்துக் கொண்டான்; அப் பாட்டை என்னை அநுபவிக்கச் செய்து—என்னைக் கொண்டு—தன் புகழை மேலும் பரவச் செய்கின்றான்; நிலைநிறுத்திக் கொள்ளுகின்றான். எம்பெருமானின் தற்புகழ்ச்சி அவா நம்முடைய தற்புகழ்ச்சி அவாவைவிட விஞ்சி நிற்பது. சகஸ்ரநாமப் பிரியன் அல்லவா? இங்ஙனம் எனக்கு எல்லா நலன்களையும் நோயற்ற வாழ்வையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப்

படுத்திவரும் திருவேங்கடமுடையானை—வேங்கடக் கிருஷ்ணனை—மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி இறைஞ்சி வணங்குகின்றேன்.

கண்ணன் திருவடி
எண்ணுக மனமே
திண்ணம் அழியா
வண்ணம் தருமே[3]

—பாரதியார்

சென்னை - 600 040
செப்டம்பர் 25, 1982

ந. சுப்பு ரெட்டியார்

3. தோ. பா. கண்ணன் திருவடி


உள்ளுறை

குயில் பாட்டு
ஒரு மதிப்பீடு

(பாரதியார் நூற்றாண்டு வெளியீடு)



பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்



எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication

குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு

(பாரதியார் நூற்றாண்டு வெளியீடு)

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

முன்னிக்கவிதை வெறிமுண்டு மாலையழகின்
மயக்கத்தால் உள்ளத்தே தோன்றிய கற்பனைத்
திறத்தினால் பிறப்பெடுத்த குயில் பாட்டின் அழகில்
தம் நெஞ்சைப் பறிகொடுத்த பேராசிரியரின்
வியக்கத்தக்க திறனாய்வு நூல் இது

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978-81-939317-4-5



eBOOK ~ மின் நூல்

குயில் பாட்டு –ஒரு மதிப்பீடு

(பாரதியார் நூற்றாண்டு வெளியீடு)

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு

முதற்பதிப்பு – 1982
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.200.oo

Published by:
ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939317-4-5
9 788193 931745

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

ரசிகமணி டி.கே. சி. அவர்கட்கு

அன்புப் படையல்

புனிதகுற் றாலத் தருவியின் சுகத்தைப்
புதுமது வாக்கிஅம் மதுவை
இனியநல் லமுதாய் உயர்த்திநற் றமிழில்
இன்பமே மணந்திடக் கலந்து
நனியருள் கலைஞர்; ரசனையே வடிவாம்
நல்லுளம் பெற்றமெய்ஞ் ஞானி;
கனிவுறும் அன்பர் எங்கள் டி. கே. சி.
கழற்கிந்நூல் சமர்ப்பணம்: வாழி!

அணிந்துரை

(பேராசிரியர் - டாக்டர், இரா. கு. நாகு)

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகக் கொள்ளத் தக்கவர் மகாகவி பாரதியார். அன்னார் தம் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட விழைந் தார். அந்த மகாகவி நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றை யும், மானுடத்தையும், மனிதாபிமானத்தையும் அகிலத்து வத்தையும் தம்முடைய பாடல்களுக்கு உள்ளடக்கமாக்கிக் கொண்டு தமிழுக்கு உலகப் பார்வையையே வழங்கினார். அவர் பிறந்ததால் தமிழுக்கு ஏற்றம் உண்டாகியது. நவநவ மான சோதிமிக்க கவிதைகளைத் தமிழுக்குத் தந்து தமிழை வளப்படுத்தினார். அம் மகாகவியின் எழுத்துக்கள் எல்லாமே சிறந்தவைதாம்; என்றாலும், குறிப்பிட்டுக் கூறத்தக்கவை மூன்று உண்டு; மகாபாரதத்தில் 'பாரதத்தை' நினைப்பூட்டிய பாஞ்சாலி சபதம் ஒன்று; கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையோர் எண்ணித் துதிக்கும் பண்ணார்ந்த கண்ணன் பாட்டு மற்றொன்று; முன்னிக்கவிதை வெறிமூண்டு மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே தோன்றிய கற்பனைத் திறத்தினால் பிறப்பெடுத்த குயில் பாட்டு பின்னும் ஒன்று. இந்த மூன்றனுள்ளும் குயில்பாட்டிற்கு ஒரு தனி இடம் உண்டு அதன் அழகில் ஈடுபடாத தமிழறிஞர்களே இல்லை எனலாம். ''குயில் பாட்டிலே - காதல், கொப்புளிக்கு தடா, செயல்

மறந்தேனடா,—லாகிரி, சிரசில் கொண்டதடா'' என்று பாராட்டினார் கவிமணி. கவித்துவம் நிறைந்த அக்குயில் பாட்டின் அழகில் தம் நெஞ்சைப் பறிகொடுத்த அறிஞர் களில் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியாரும் ஒருவர். குயில்பாட்டின் கொள்ளை அழகில் உள்ளம் பறிகொடுத்த 'ரெட்டியார்' அவர்கள், குயில்பாட்டின் அழகுகளையெல்லாம் திரட்டி நூல் வடிவில் தமிழுக்குத் தந்துள்ளார். பொருத்த மான நேரத்தில் பொருத்தமான நூலைத் தமிழுலகுக்குத் தந்துள்ளார் அப்பேராசிரியர், மகாகவியின் பெருமையை மாநிலங்களெல்லாம் அறியும் பொருட்டு, தமிழக அரசு விழாவெடுத்து அவனியெல்லாம் அறியச் செய்து வரும் இது அற்புதத் திருநாளில் பேராசிரியர் தமிழுக்குத் தந்துள்ள இந்நூல் பாரதி அன்பர்களின் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நல்ல தொரு இலக்கியச் சுவைஞர். அறிவியல் அறிவும் கலை இயல் அறிவும் கைவரப் பெற்றவர். பல்துறைப் பயிற்சியும், பல்துறை அநுபவமும் பாங்குறப் பெற்றவர். எல்லையிலா இலக்கியப் பயிற்சியும், எழுதிக் குவிக்கும் எழுத்துத் திறனும் வாய்ந்தவர்.பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழா நினைவாகச் சில நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்றே குயில்பாட்டுபற்றிய இந்த நூல்.

இந்த நூலில் எட்டு இயல்கள் உள்ளன. வைணவர் களுக்கு உகப்பானது 'எட்டு'. ஆழ்வார் பாசுரங்களில் ஆழங் கால் பட்ட பேராசிரியர் ரெட்டியார் அவர்களுக்கு 'எட்டு உகப்பானதில் வியப்பில்லை' அல்லவா? திறனாய்வுத் துறையில் நூல் எழுதிப் பயிற்சி பெற்றவர் பேராசிரியர் அவர்கள். அதன் நெறியை இந்நூலுள் செய்முறைப்படுத்தியுள்ளார். 'பாட்டின் பின்னணி' என்று தொடங்கும் முதலி இயலின் தலைப்பே அந்

நெறியைப் பின்பற்றியதற்கான தக்க சான்றாகும். 'குயில் பாட்டு : ஒரு மதிப்பீடு' என்று முடியும் இறுதி இயலும் பேராசிரியர் திறனாய்வு நோக்கில் குயில்பாட்டை அணுகி யுள்ளார் என்பதற்கான மற்றுமொரு சான்றாகும்.

இந்த நூலுள் நயமான பகுதிகளை விளக்கிக் கூற வந்த இடங்களில் சுயமான உவமைகளைஆண்டிருப்பது பாராட்டுக் குரிய ஒன்றாகும். குயில் இசை கவிஞர் செவியில் விழ விழ, காதல் வெறி ஏறிக்கொண்டே போகிறதாம். அதைக் குறித்து எழுதுமிடத்தில் அவருக்கே யுரிய தனித் தன்மையில், 'காற்றழுத்தமானியில் பாதரசம் ஏறுவதுபோல் ஏறிக் கொண்டே போகிறது' (பக். 2) என்று எழுதியுள்ளார். மற் றோர் இடத்தில் இயற்கைக்கும் கவிஞனுக்குமுள்ள இணக்க மான உறவைக் குறிப்பிட்டு விளக்கும்போது, 'உறங்கும் நிலையில் தாய் குழந்தையை அணைவதைப் போல' (பக் 41 என்று குறிப்பிடுகின்றார்; இந்த உவமையைப் படிக்கும்போது மணிவண்ணனை உகந்த பெரியாழ்வார் நெஞ்சில் நிற்கிறார். பத்துப்பாட்டு எட்டுத் தொகைகளில் வரும் உவமைகளையும் பாரதி ஆண்டுள்ள உவமைகளையும் ஒப்பிட்டுக் கூறு மிடத்தில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பயன்படுத்தி யுள்ள உவமை, என்னைப் போன்ற சங்கப்பாக்களில் உள்ளம் பறிகொடுத்திருப்போர்களுக்கு உகப்பாக இல்லை.

குயில் பாட்டைப் படிப்போர்க்குச் சலிப்பே தோன்றாது. அதுபோலக் குயில் பாட்டைப்பற்றிப் பேராசிரியர் எழுதி யிருக்கும் இந்த நூலும் சலிப்பைத் தராது. பழந்தமிழ் இலக் கியத்திலிருந்து 'புதுத்தமிழ்' இலக்கியம்வரை பேராசிரியர் படித்தறிந்தவர் என்பதை இந்நூல் காட்டிக் கொடுக்கிறது. குயில் பாட்டில் ஆளப்பெறும் 'காதல் நெறிகள்' பெரிதும் மரபு சார்ந்தவையே என்று அவர் சாதிக்குமிடங்கள் தக்க

சான்றுகளாகும். பாரதி - யார்? என்றதைக் கூற வரும் கவிஞர் வாலியின் பாடலை எடுத்தாளுமிடத்தில் (பக் 97) புதுத்தமிழ்ப் பயிற்சியின் மணமும் கமழ்கின்றது. மற்றும், இசையின் பெருமை குறித்து எழுதுமிடங்களில் புதுமையும் பழமையும் கைகோப்பதைக் கண்டு மகிழலாம்.

'பாட்டின் உள்ளுறை' என்ற ஏழாவது இயலில் பேராசிரி யருடைய ஆய்வு நெறி தெளிவாகத் தெரிய வருகிறது; அன் னார் புலமை அங்கு ஒளி வீசுகின்றது. குயிலைச் சீவான்மா வாகவும் கவிஞரைப் பரமான்மாவாகவும் எண்ணிப்பார்க்கும் இடமும், குயில் இறுதியில் கவிஞரின் கையில் வீழ்தலைச் 'சரணா கதி' மூலம் பரம்பொருளிடம் ஐக்கியமாவது போல், என்று பொருத்திக் காட்டும் இடமும் மிக அழகாக உள்ளன. 'ஊகித்துக் கூறும் உள்ளுறை' என்ற கிளைத் தலைப்பில் அவர் கூறும் முடிவுகள் கற்றுவல்ல பெரியார்களுக்குக் கற் கண்டாய் இனிப்பனவாகும்.

இந்நூலின் எட்டாவது இயல் குயில்பாட்டின் இலக்கியத் தன்மைகளைப் பேசுகின்றது. இந்த இயலில் இடம் பெறுவன வற்றைச் சிறந்தன என்ற புகழ முடியாவிட்டாலும், வேண்டாமென்று ஒதுக்கிவிடமுடியாத 'விடுதலறியா விருப்பு'' அவற்றின்பாலுள்ளது என்றே கூறவேண்டி யுள்ளது. 'ஒருவகையான' எழுத்தாற்றலே அவ்விடுதலறியா விருப்புக்கான காரணமுமாகும்.

பாரதி என்ற மகாகவி பிறந்ததால் தமிழ்நாடு பெருமை பெற்றது. அவரால் தமிழ் ஏற்றம் பெற்றது. அந்தப் பைந் தமிழ்ச் சாரதி தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அவர் அழகு செய்யாமல் விட்டதுமில்லை. அந்த மகாகவியின் கவிதை ஆழமும் கரையும் காணமுடியாத கடலாகும். அக் கடலில் ஆர்வமுள்ள அனைவரும் ஆடித் திளைக்கலாம்.

அவரவர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு ஆடித்திளைக்கலாம்; ஆடித் திளைப்பதோடு முத்துக்களை அள்ளி அள்ளி வந்து அணிகளாகத் தொடுக்கலாம். அந்த மகாகவியின் கவிக் கடலில் ஆடித்திளைத்து முத்துக்களை அள்ளிக் கொணர்ந்து தெள்ளுதமிழ் மாலை சூடிய அறிஞர்களில் பேராசிரியர் குறிப்பிடத் தகுந்தவராவார். தமிழால் உலகளந்த பேராசிரியரின் தமிழ்ப்பணி சிறக்க மகாகவியின் அருள் மேலும் மேலும் பொழியட்டும். மோனத் தமிழையும் ஞானத் தமிழையும் கானத் தமிழாக்கிக் கட்டுரைகளாக வடித்துதவிய பேராசிரியரின் தமிழ்ப்பணி சிறக்கட்டும். பல்லாண்டு சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் கருணைக்கு இறைஞ்சுகிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!! வாழிய பாரதம்.

சென்னை-600 005
22-11-1982

இரா.கு.நாகு.
பேராசிரியர் - மாநிலக் கல்லூரி.

நூல்முகம்

வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழும்
தவமுந் திறமுந் தனமும் கனமும்
முருகா! முருகா! முருகா![1]

—பாரதியார்

பாரதியாரின் கற்பனையாற்றல் சாதாரணமானதல்ல. இந்தக் கற்பனையில் உவமையும், உருவகமும், உருக்காட்சியும் (Imagery), குறியீடும் (Symbol) நிறைந்து அவர்தம் கவிதைகளைக் கவின் பெறச் செய்கின்றன. நீடித்த உருவகங்களைக் கொண்ட நூல்களும் அவர்தம் படைப்புகளாகும். இவற்றுள் 'ஞான ரதம்' உரைநடை நூலுக்கும், 'குயில் பாட்டு' கதைக் காவியத்துக்கும் எடுத்துக்காட்டுகளாகும். இவற்றுள் 'குயில் பாட்டு' கற்பனையில் கனிந்த அழகான உருக்கமான வெளிப்படையான பொருளைக் கொண்ட ஒரு குயில்பற்றிய கதை. இந்தக் கதை வேதாந்தமாக விரித்துரைக்கவும் இடந் தருகின்றது.

பாரதியாரின் முப்பெரும் இலக்கியப் படைப்புகளாகக் கருதப் பெறும் 'கண்ணன் பாட்டு', பாஞ்சாலி சபதம்',[2]

---

1. தோ. பா : முருகன் பாட்டு - (1)
2. 'கண்ணன் பாட்டுத்திறன்', 'பாஞ்சாலி சபதம் : ஒரு நோக்கு' என்ற இந்த ஆசிரியரின் இரண்டு நூல்களும் மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணை மூலம் (52/1, மேல வெளிவீதி, மதுரை-625 001) வெளி வந்துள்ளன.

'குயில் பாட்டு' ஆகிய இம்மூன்றனுள் இறுதியில் குறிப்பிட்ட குயிற்பாட்டே மிகச் சிறந்தது என்பது பலரது கொள்கை யாகும். ஒரு கவிதையைச் சுவைத்துக் கூறுகின்றவர்களின் கருத்துகளெல்லாம் அவரவர்களுடைய உணர்ச்சியையே சார்ந் திருக்கும் என்று கொண்டால் இந்தக் கூற்று வாதத்திற்கு இடந்தராது. பல்லாண்டுகளாக யான் இந்தக் கவிதையைச் சுவைக்கும்போது குமிழியிட்டெழுந்த என் கருத்துகள் 'பாரதியாரின் நூற்றாண்டில்' நூல் வடிவம் பெற்றுத் தமிழ் கூறு நல்லுலகில் நடையாடுகின்றன. பாரதியாரின் படைப்பு களில் ஈடுபாடு கொண்டவர்கள் என்னுடைய இந்தச் சிறிய நூலிலும் தம் கவனத்தைச் செலுத்துவார்கள் என்பது என் உறுதியான நம்பிக்கை. அத்தகைய பேற்றினை இந்நூல் பெறுமானால் அதனை என் பெறற்கரிய பேறாகக் கருது வேன்.

இந்த நூலை அழகுற அச்சிட்டும், நன்முறையில் கட் டமைத்தும் தந்த நாவல்'ஆர்ட் அச்சகத்தின் அதிபர், கவிஞர் திரு. நாரா நாச்சியப்பன் அவர்கட்கு என் நன்றி கலந்த அன்பினைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய டாக்டர் ஆர். கே. நாகு என் உடன் பிறவாச் சகோதரர் போன்றவர். நான் டாக்டர் பட்டம் பெறுவதற்குமுன் அப்பட்டத்தைப் பெற்றவர். டாக்டர் மு. வரதராசனின் பல நன்மாணாக்கர் களில் ஒருவர். தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களை பழுதற ஓதிப் பயன் பெற்றவர். அடக்கமான பண்புடையவர். எளிமையாக மாணாக்கர்களிடம் பழகினாலும் ஒழுங்குமுறை யையும் நன்னடக்கையையும் வற்புறுத்துபவர். இக்காலத் திலும் மாணவர்கட்குப் பொறுப்புடன் கற்பித்து அவர்கள் பாராட்டுதலைப் பெற்றவர்! இத்தகைய பண்புடைய நல்லாசான் இந்நூலுக்கு உவந்து அணிந்துரை வழங்கின மைக்கு என் அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ரசிகமணி டி.கே.சி. சிதம்பரநாத முதலியாரை (டி.கே.சி.) அறியாதவர்கள் அரியர். 1949 மார்ச்சு முதல் இவரை அறிவேன். இந்த ஆண்டு காரைக்குடிக் கம்பன் விழாவிலும்' அமராவதிப் புதூர் மகளிர் இல்ல ஆண்டு விழாவிலுமாக இரண்டு சொற்பொழிவுகளைக் கேட்டுச் சுவைத்தவன். இதற்கு முன்னர் இவரது பல நூல்களை, குறிப்பாக இவர் பதிப்பித்த இராமாயணத்தை, படித்துச் சுவைத் திருந்தேன் இரண்டு நாள் பழக்கந்தான்; கவிதைகளை நாடி படித்துப் பார்த்துச் சுவைக்கும் பழக்கத்தைப் பெற்றேன். சுவைக்கும் பழக்கம் வருவது முன்னைய பிறப்பில் புண்ணியம் செய்தவர் கட்குதான் கைவரப் பெறும் என்று பெரியோர்கள் பணிப்பர். இப்பழக்கம் கைவரப் பெறுவது அரிய முயற்சியால்தான் ஏற்படும் என்பதை இப்படிச் சொல்லி வைத்தனர் போலும். இத்தகைய பெரியாருக்கு இந்நூலை அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன். அமரராகிய இவர்தம் ஆசியால், இலக்கியங் களைச் சுவைக்கும் பழக்கம் மேன்மேலும் வளரும் என்பது என் திடமான நம்பிக்கை.

> எழுதுகோல் தெய்வம் இந்த
> எழுத்தும் தெய்வம்![3]

என்று தம் கொள்கையையே அடித்துக் கூறினவர் பாரதியார். எழுத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அனைவருக்கும் இக் கொள்கை மறை வாக்காகவே இருத்தல் வேண்டும். இத் தகைய கொள்கையில் வாழ்ந்த கவிஞருக்குத் 'தமிழ் கூறு நல் லுலகம்' எங்கணும் நூற்றாண்டு விழாக் கொண்டாடப் பெறுகின்றது. 'குருவிக்குத் தகுந்த இராமேச்சுரம்' என்ற பழமொழிக் கொப்ப இச்சிறியேனும் அக்கவிஞரேறுபற்றி நான்கு ஆய்வு நூல்கள் வெளியிட்டு அவர் நூற்றாண்டு

---

3. சுயசரிதை - பாரதி அறுபத்தாறு - 18.

விழாவினைக் கொண்டாடுகின்றேன். மூன்றினைப் பதிப்பகத்தார் வெளியிட்டனர். இதனை நானே என் பொறுப்பில் வெளியிட்டு மகிழ்கின்றேன்.

இச்சமயத்தில் பாரதியாரின்,

செய்யும் கவிதை பராசக்தி
யாலே செய்யப்படுங்காண்[4]

பாட்டினிலே சொல்லுவதும்
அவள்சொல் லாகும்[5]

என்ற வாக்குகளைச் சிந்திக்கின்றேன். பாரதியார் கருதுவது போல் இந்நூலை யான் எழுதி வெளியிட்டதற்கு என்னுள்ளே அந்தர்யாமி இருக்கும் திருவேங்கடமுடையானே காரணன ஆவான். அவனே எனக்கு நோயற்ற நிலையையும் எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப் படுத்தி வருபவன். அவனே பாரதியார் வழிபடும் முருகனாகவும் சக்தியாகவும் இருந்து வருகின்றான்; அவனை மனம் மொழி, மெய்களால் வழுத்தி இறைஞ்சி வணங்குகின்றேன்.

வேலைப் பணிந்தால் விடுதலையாம்; வேல் முருகன்
காலைப் பணிந்தால் கவலைபோம்—மேலறிவு
தன்னாலே தான்பெற்று சக்திசக்தி சக்தியென்று
சொன்னால் அதுவே சுகம்.[6]

சென்னை-600 040
நவம்பர் 30, 1982

ந. சுப்பு ரெட்டியார்

---

4. வி. நா. மா - 26
5. தோ. பா: பேதை நெஞ்சே - 5
6. ஷெ. விடுதலை வெண்பா - 4


பிழை – திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	1	யாநல்நன்	யாதல்
3	6	குகிகுக் கூல்	குக்குக்கூ
3	17	பாடிப் அனுபவிக் கலாம்	பாடிப் பாடி ....
5	2	மோகனபாட்டு	மோகனப்பாட்டு
5	11	எழுலகம்	ஏழுலகம்
6	12	கலகலனு	கலகலெனு
10	14	கூறலாம்	கூரலாம்
12	11	வறைந்து	மறைந்து
15	3	பொதிமலைச்	பொதியமலைச்
25	22	விழியாளைச்	விழியாளைத்
46	7	Kalaidoscope	Kaleidoscope
49	1	விந்தைத்	விந்தை
49	9	என்கவிதைப்	என்ற கவிதைப்
56	21	கோவிந்தம்	கோவிந்தன்
57	12	முனிபுங்கவர்கன்	முனிபுங்கவர்கள்
59	7	கதைமாந்தக்	கதைமாந்தர்
65	5	சதியாகும்	சக்தியாகும்
83	18	பாடல்களைப்	பாடல்களை
83	30	கேட்டு;	கேட்டுத்
84	8	ஒன்றுக்கொண்டு	ஒன்றுக்கொன்று
85	16	அற்புமாக	அற்புதமாக
85	23	அற்புதந்தைப்	அற்புதத்தைப்
86	18	(2-வது பத்தி) நிசப்பிறப்பு	நீசப்பிறப்பு
86	29	குக்கூவெக் சோதிகடலிலே	குக்கூவெனக் சோதிக் கடலிலே
88	9	காதலுணர்வு	காதலுணர்வும்

உள்ளுறை

தேடி சோறு நிதம் தின்று
பலசின்னஞ் சிறு கதைகள் பேசி
மனம்வாடி துன்பம் மிக உழன்று
பிறர்வாட பல செயல்கள் செய்து
நரைகூடி கிழப் பருவம் எய்தி -
கொடும்கூற்றுக்கு இரையென மாயும்
பலவேடிக்கை மனிதரை போலே
நான்வீழ்வேனென்று நினைத்தாயோ?

facebook.com/Bharathiyar



பா ர தீ ய ம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பாரதீயம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015-2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பாரதியார் கவிதைகளனைத்தையும்
திறனாய்வு மூலமாக அவற்றின் சாரத்தை பிழிந்து
தமிழ் கூறும் நல்லுலகிற்கு
வழங்கும் பெருநூலே பாரதீயம்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-2-5

eBOOK ~ மின் நூல்

பாரதீயம்


அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பாரதீயம்

முதற்பதிப்பு – 1983
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.275.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN: 978-81-938927-2-5

9 788193 892725 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அமரர்

ஜஸ்டிஸ் டாக்டர் எஸ். மகராஜன் அவர்கட்கு

அன்புப் படையல்

ஆங்கில அணங்கும் செந்தமிழ்த் தாயும்
    ஆடல்செய் கின்றநா வுடையார் ;
ஓங்கிய கம்பன் மாண்பினை மேற்கும்
    உணர்ந்திடப் புரிஎழுத் தாளர் ;
பாங்குறு புகழ்சால் ஷேக்ஸ்பியர் பொதியில்
    படர்தரச் செய்தவர் ; கலைச்சொல்
ஈங்களித் துயர்ந்தோர் எஸ்.மக ராசர்
    இசையுடம் பணிகஇந் நூலே.

அணிந்துரை

டாக்டர் ஔவை நடராசன்,
(இயக்குநர், மொழியாக்கத்துறை, தமிழ்நாடு அரசு)

**புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே !**

என்று பெருமிதத்துடன் - ஏன் எக்களிப்புடன் - கூறிக்கொண்ட பெருங்கவிஞர் பாரதியின் நூற்றாண்டு விழா மாநிலமெங்கும் கொண்டாடப்பெற்றது. தமிழக அரசே இதனைத் தன் பொறுப்பில் மேற்கொண்டது. கவியரசர் பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தையே நிறுவித் தன் புகழை நிலை நிறுத்திக்கொண்டது. பாரதியாருக்கு அறிவுலகம் சூட்டிய புகழ்மாலைகளின் நறுமணம் காற்றில் கலந்த கர்ப்பூரம் போலாகாமல், ஆற்றில் கரைத்த புளி போலாகாமல், அச்சு வடிவம் கொண்டு வெளி வந்துள்ளன. அவற்றுள் பாரதியாரை மிகுந்த ஆர்வத்தோடு பாராட்டி மகிழும் நூல்கள் பல ; ஆற்றலோடு ஆராய்ந்து போற்றும் நூல்கள் சில !....இரண்டாவது வகையைச் சார்ந்தது **பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்** அவர்களின் **பாரதீயம்.** பாரதியாரின் நூற்றாண்டில் அவர்தம் முப்பெரும் பாடல் களைப்பற்றித் தனித்தனியே மூன்று திறனாய்வு நூல்களைத் திறம் பட எழுதி வெளியிட்டுத் தம் போக்கில் கவிஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியவர் இப்பேராசிரியர். இவற்றிற்கும் மேலாக, பாரதியார் கவிதைகள் முழுவதையும் சாரமாகப் பிழிந்து வழங்கும் பெருநூலே **பாரதீயம்** என்னும் இந்நூல்.

'கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்' கொண்ட **பேராசிரியர் ரெட்டியார்** தமிழுலகம் நன்கறிந்த பேரறிஞர். துறையூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நிறுவிஅதன் தலைமையாசிரிய ராகத் தம் கல்விப் பணியைத் தொடங்கிப் பத்தாண்டுகள் அதனைப் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' வளர்த்துவிட்ட பிறகு, காரைக்குடி வள்ளல் அழகப்பர் நிறுவிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் தொடக்கம் முதல் பத்தாண்டுகள் தமிழ்த்துறைத் தலைவ ராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதன் பிறகு, திருப்பதி

சென்று, தம் விடாமுயற்சியால் பத்தாண்டுகள் தனி நின்று முயன்று, திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் (தமிழக அரசு மானியத்தைக் கொண்டு) தமிழ்த்துறையைப் புதிதாக நிறுவி, அதன் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதனைப் பேரும் புகழும் பரவ அதனை நன்கு வளர்த்து, ஆய்வுப் பணிகள், கருத்தரங்குகள் முதலிய பல நற்பணிகள் புரிந்து, பதினேழு ஆண்டுகள் தமிழை அப்பல்கலைக் கழகத்தில் ஆல்போல் விரிந்து அருகுபோல் வேரூன்றச் செய்துவிட்டு ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற பிறகும் ஒன்றரையாண்டுகள் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். உழைப்பின் உருவமாகத் திகழும் பேராசிரியர் ரெட்டியார் அறிவியலையும் அருளியலையும் இணைக்கும் பைந்தமிழ்ப் பாலமாக நிலவி இவர் படைத்துள்ள நூல்களின் எண்ணிக்கை இவர் வயதோடு ஐம்பத்தெட்டை எட்டிப் பிடித்துவிட்டது (இவர் வயது 66). தம் வாழ்வின் அநுபவங்களையும் தாம் பயின்ற நூல்களின் நுண்பொருள்களையும் இணைத்து ஆற்றொழுக்காக, படிப்போர் நெஞ்சைப் பிணிக்கும் வண்ணம், நேருக்கு நேர் நின்று பேசுவதைப் போல் எளிய இனிய தமிழில் விரிவாகவும், சுவையாகவும் எழுதுவது இவருக்குக் கைவந்த கலையாகும்.

'பாரதீயம்' என்ற இந்த நூலின் பெயர்க் காரணத்தை, எடுத்த எடுப்பிலேயே பொருத்தமுற எடுத்துரைக்கின்றார் இப்பெரும் பேராசிரியர்.

> "கொள்கை அல்லது கொள்கைகளைத் தமக்கே உரிய முறையில், பிறர் கூறாத வகையில் ஒருவர் கூறுவது அவர்தம் தனிச் சிறப்பாகும். மொழி, இலக்கியம்பற்றிய கொள்கைகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறினார் தொல்காப்பியர். அவர் கூறிய நூல் 'தொல்காப்பியம்' எனப் பெயர் பெற்றது. அந்நூலுக்குத் தமக்கே உரிய முறையில் உரை கண்டார் நச்சினார்க்கினியர்; அது 'நச்சினார்க்கினியம்' என்ற திருநாமம் பெற்றது. இங்ஙனமே சேனாவரையரின் அந்நூலுக்குரிய உரை 'சேனாவரையம்' என்ற பெயரால் வழங்குகின்றது. இத்தகைய மரபினைப் பின்பற்றிச் சில கொள்கைகளைப் பாரதியார் தமக்கே உரிய முறையில் கூறுவதைப் 'பாரதீயம்' என்று வழங்கலாமல்லவா?" (பக். 1).

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் **'திருவாய்மொழி'** குறித்து ஆய்ந்து ஆங்கிலத்தில் எழுதி டாக்டர் பட்டம் பெற்ற

பேராசிரியர் ரெட்டியார் ஒரு சிறந்த வைணவத் தமிழறிஞராக விளங்குகின்றார்; வைணவத்தில் பல்வேறு ஆன்மிக நூல்களை எழுதியுள்ளார். இவருடைய வைணவ ஈடுபாடு இவர் எழுதியுள்ள எல்லா நூல்களிலும் வெள்ளிடை மலையாகத் தோன்றும். இந்நூலிலும் பாரதியாரின் விடுதலை வேட்கைக்கு உவமை கூறும்போது "நாயன்மார்கட்கும் ஆழ்வார்கட்கும் பக்தி அவர்தம் மூச்சாக இருந்தது போலவே, இவருக்கு விடுதலையே மூச்சாக இருந்தது" (பக். 7) என்று நயம்பட உரைக்கின்றார்.

'சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து வியனுலகு அமைத்தாய்
அத்தனை யுலகமும் வண்ணக் களஞ்சிய
மாகப் பலப்பலநல் அழகுகள் சமைத்தாய்'

என்ற பாரதியாரின் பாடற்பகுதி விசிட்டாத்வைத தத்துவத்தை உள்ளடக்கி இருப்பதைப் பேராசிரியர் சுவைபட விளக்குகின்றார் (பக். 67).

இறைவனை அடைதற்கு'வைணவ' தத்துவத்தில் முடிந்த முடிபாக, எளிய வழியாக, மேற்கொள்ளப்பெறுவது **பிரபத்தி நெறி** (சரணாகதி மார்க்கம்). எனினும், சற்றுக் கடினமாகவுள்ள பக்தி நெறியும் அங்கு மேற்கொள்ளப்பெறுகின்றது' 'என்று கூறி அவற்றைப் பாரதியார் கைக்கொண்டதாக எடுத்துக்காட்டுகின்றார் (பக். 57). பேராசிரியர் ரெட்டியாரின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் பன்னூல் ஆராய்ச்சியும், பழுத்த அநுபவமும் பாரதியார் பாடல்களைப் பாங்குடன் விளக்கப் பல இடங்களில் பயன்படுகின்றன :

> "தன்னைக் கட்டுதல்' என்பது மனத்தைக் கட்டுதல். ஐம்பொறிகளை அடக்கி மனத்தைக் கட்டுதல் என்று ஞானியர் கூறும் பொருளில் அல்ல ஈண்டுக் குறிப்பிடப்பெறுவது. 'பாதரசமாய்ச் சஞ்சலப்பட்டுக்கொண்டே' (தாயுமானவர்) இருக்கும் மனத்தை, பல பொருள்களின்மீது சஞ்சலப்படுகின்ற மனத்தை அடக்கினால் போதும் என்பது பாரதியாரின் கருத்து" (பக். 83).

பாரதியாரின் கவிதைகளை விளக்கும்போது காலத்திற்கேற்ற கருத்துகளையும், குறிப்பாக அறிவியற்கருத்துகளையும் ஆங்காங்குப் (பக். 52—55; 191—92) பேராசிரியர் ரெட்டியார் விளக்கிச் செல்வது படிப்போரின் சுவையை மிகுவிக்கும் என்பதற்கு ஐயமில்லை.

"கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் கற்பித்தலைத் தொடங்கவேண்டும் என்று நினைப்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்கவேண்டும் என்று எண்ணு வது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்தும் சீர்படும். தார் சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை, மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை, மண்ணும் சிறிய சல்லிகளும் கலந்த சாலை என்றிப்படிப் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா ? இந்நிலையைத் தாய்மொழி பயிற்றுமொழியாக அமைவதிலும் சந்திக்க நேரிடும்" (பக்.160).

பாரதியாரின் 'வசன கவிதைகளை' ஆராயும் போக்கில் பேராசிரியர் ரெட்டியார் கூறுவார் :

"நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பக் காலம். தட்டச்சுப்பொறி, அச்சுப்பொறி, அச்சுப்பொறிகளிலும் பல்வேறு நுட்ப வகைகள்—இவை எழுதுவதற்குத் துணையாக அமைந்துவிட்டன... .... செவிப்புலன் ஆட்சியைவிடக் கட்புலன் ஆட்சி மிகுந்துவிட்டது. எவற்றையும் நினைவில் நிறுத்தித் 'தலைக்கனம்' செய்யவேண்டிய இன்றியமையாமை இல்லாது போய்விட்டது. கல்வி முறையிலும் நெட்டுருச்செய்து நினைவி லிருத்த வேண்டிய முறை தளர்ந்துவிட்டது ; தகர்ந்தே போய் விட்டது என்றுகூடச் சொல்லலாம். வாய்விட்டுப் படித்தல் குறைந்து வாய்க்குட் படித்தல் செல்வாக்கு அடைந்துவிட்டது. ஒரே அறையில் - பெரிய மண்டபத்தில் - பலர் இருக்கைகளில் அமர்ந்து 'கல்லாலின் புடை அமர்ந்துள்ள தென்முகக் கடவுள் போல்' நூல்களிலும் வார, பிறை, திங்கள் இதழ்களிலும் ஆழங்கால் பட்ட நிலையில் அமர்ந்திருக்கும் காட்சி கண்கொள் ளாக் காட்சியாக இருப்பதை நூலகங்களில் காணலாம். (பக். 116).

இந்நூலில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ள 'இலக்கிய ஆராய்ச் சிக்கு ஓர் அறிமுகம்' என்ற ஆங்கில நூலில் அட்சன் என்ற திறனாய்வுப் பேராசிரியர் கூறும் இலக்கியக் கொள்கைகள்பற்றிய மேற்கோள் 'பாரதீயம்' என்ற இந்நூலுக்கும் பொருந்தும் :

"கவிதையை ஆராயுங்கால், நம்முடைய முதற்கவனம் கவிஞன்பால் செல்லவேண்டும் ; அவன் ஆளுமையிலும் அவன் உலகைப்பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையிலும் செல்ல வேண்டும்; வாழ்க்கையை எவ்வாறு நோக்கி விளக்கந் தருகின்

றான் என்பதைக் கவனித்தல் வேண்டும். இது வெளிப்படையாகவும் இருக்கலாம்; குறிப்பாகவும் இதனைப் பெற வைக்கலாம். கலை, வடிவம், வரலாறு போன்ற செய்திகளில் நாம் எவ்வளவு ஆழ்ந்திருந்த போதிலும், மேற்கூறிய கவிதையின் முதனிலைக் கூறுகள் எவ்விதத்திலும் நம் பார்வையினின்று நழுவாமல் காக்கவேண்டும்" (பக். 150 - 151).

இந்த ஒளியின் அடிப்படையில் இந்த நூலை நோக்கவேண்டும். 'சமுதாயப் பார்வை' (கட்டுரை - 5) என்பதையாவது குறிப்பாக நோக்கவேண்டும். இலக்கியச் சுவைஞர்களும் இலக்கிய ஆய்வாளர்களும் **கட்டுரை - 9, கட்டுரை - 10** ஆகியவற்றைப் படித்துத் தம் சுவையையும் தம் ஆராய்ச்சி நோக்கையும் எடை போட்டுப் பார்த்துக் கொள்ளலாம்; இவற்றில் ஒருவிதப் புத்தொளி வீசுவதையும் காணலாம்.

'உலகை இன்பமயமாகக் கண்டு, உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள்' என்றால் அக்கவிதை தரும் இன்ப அநுபவங்களை எடுத்துரைக்கும் திறனாய்வாளருக்கும் அக்கவிஞர்களுக்கு இருக்கவேண்டிய உள்ளக்கனிவு கட்டாயம் இருக்கவேண்டும். அவ்வகையில் பாட்டரசர் பாரதியாரின் 'ந வ நீ த ம்' போன்ற கவிதைகளை நெய்யாக்கி உண்ணத் தந்துள்ளார் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் என்பதை இந்நூலைப் படித்து முடிக்கும் எவரும் ஒப்பி மகிழ்வர்.

'கவிதையின் உயிராற்றல் பகுதிகளை உரைநடையில்தான் வளமாகத் தருதல் இயலும்' என்ற வொர்ட்ஸ்வொர்த்தின் கருத்திற்கேற்ப, பல்வேறு உரைநடைச் செல்வங்களைப் படித்துத் தமிழுக்கு வளம் சேர்க்கும் தெய்வப் பணிபுரிபவர் பேராசிரியர் ரெட்டியார். இத்தனைக்கும் மேலாகப் 'புத்தம் புதிய நுட்பங்கள் கூறும்' அறிவியல் துறைகளில் பாடல் நூல்களின் பாணியில் 'அழுது வடியும் முறையில்' எழுதாது அழகான தமிழில் புதிய அறிவியல் பிடிப்புகளை ஆற்றலுடன் எழுத முடியும் என்று தமிழின் மொழியாண்மையைப் புலப்படுத்தும் பாங்கில் பதினான்கு நூல்களை எழுதித் தமிழன்னைக்கு அணிகளாகப் பூட்டி மகிழ்ந்த பேராசான். அறிவியலில் கல்லூரியில் பட்டப் படிப்புக்குப் படித்த மூன்று துறைகளைத் தவிர வேறு நான்கு துறைகளை அரிதின் முயன்று கற்று அவற்றில் ஆழ்ந்த புலமையை அடைந்தவர் என்பதற்கு இவர் தம் அறிவியல் படைப்புகளே சான்றுகளாக நின்று பேசும். உடல்

நலத்துடனும் மன வளத்துடனும் திகழும் இந்த 'நடமாடும் கலைக் களஞ்சியத்தை' - உழைப்பின் உருவத்தை - தமிழ்ப் பல்கலைக் கழகமோ, தமிழக அரசோ தக்க முறையில் பொறுப்பினை நல்கிப் பயன்படுத்திக்கொள்வது அவர்தம் தலையாய கடமை. இந்தப் பேராசிரியர் தம் பணியால் அளவிடுபவரேயன்றி, பெறும் பொருளால்- ஊதியத்தால் - அல்ல. இத்தகைய பெரும் பேராசிரியர் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழிக்கும் தமிழகத்திற்கும் நற்றொண்டாற்றிச் சிறக்க வாழ்த்துகின்றேன். வாழ்க நம் பேராசிரியர்! வளர்க இவர்தம் தமிழ்ப்பணி!!

நவம்பர் 2, 1983 ஔவை நடராசன்

நூல் முகம்

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை,
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம் கருமயோ கத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே ![1]

—பாரதியார்

நடைபெற்றுக்கொண்டிருப்பது இலக்கிய மறுமலர்ச்சி யுகம். அதில் நாம் பாரதி நூற்றாண்டில் வாழ்கின்றோம். தமிழ்கூறு நல்லுலகமெங்கும் பாரதி நூற்றாண்டு விழாச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பாரதியாரின் படைப்புகளில் மக்கள் ஆழங்கால் படுகின்றனர். பாரதியாரை ஆழ்ந்து கற்குங்கால் நாம் ஆய்ந்து கண்ட முடிவுகள் யாவை? தமிழ் மொழியில் கவிதையாயினும் உரைநடையாயினும் முதன் முதலாக எளிய நடையை அழகுற அமைத்த பெருமை பாரதியாரையே சாரும். பாரதியாரின் கவிதை வேர் பண்டைத் தமிழ் இலக்கியப் புலத்தில் ஆழமாய் ஓடியுள்ளதையும் அதில் பூத்த மலர்கள் புதியதொரு சோலையைக் கண்டிலங்குவதையும் காண முடிகின்றது. அவர் உள்ளம் கம்பனின் கங்கை வெள்ளக் கவிதையில் மூழ்கிக் களித்ததையும், வான்புகழ் கொண்ட வள்ளுவரின் நூலில் ஈடுபட்டிருந்ததையும் நோக்க முடிகின்றது; அவர்தம் நெஞ்சம், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் கரைந்ததையும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டத் திகழும் ஆழ்வார்களின் பாசுர ஊற்றுகளிலும் இராமலிங்கர், தாயுமான அடிகள் இவர்களின் தீஞ்சுவைக் கவிதை ஓடைகளிலும் நீராடி மகிழ்ந்ததையும் உணர முடிகின்றது.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்து தெளிந்த கவிமணியவர்கள் “பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!” என்று பட்டிக்காட்டான் ஒருவன் வாயில் வைத்துப் பேசுகின்றார். பட்டிக்காட்டான் தான் பெற்ற பாரதியின் பாட்டநுபவத்தை,

---

1. கவிதைகள் : சுயசரிதை - 49.

நாட்டு மொழியுமவன் பாட்டினிசையில்—மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமேயடா
ஏட்டிலிம் மந்திரந்தான் கண்டவருண்டோ—ஈதவ்
ஈசன் திருவருளென் றெண்ணுவாயடா.

உள்ளந் தெளியுமொரு பாட்டிலேயடா—மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலேயடா—ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலேயடா.[2]

என்று வடித்துக் காட்டுவர். மற்றும் கவிதைகளில் சொல்லுக்குச் சொல்லழகு ஏறுவதையும்; கவி துள்ளும் மறியைப்போல் துள்ளு வதையும், கல்லும் கனிந்து கனியாவதையும், பசுங்கன்றும் பால் உண்டிடாது கேட்பதையும்; கவிதைகளில் குயிலும் கிளியும் கூவு வதையும், மயில் குதித்துக் குதித்து நடமாடுவதையும், வெயிலும் மழையும் அதில் தோன்றுவதையும், மலர் விரிந்து விரிந்து மணம் வீசுவதையும்; பாடல்களில் விண்ணில் ஒளிரும் மீன்கள் மின்னுவதை யும், விண்ணில் திகழும் மதி நிலவு வீசுவதையும், கண்ணுக்கினிய சோலை தென்படுவதையும், அச்சோலையில் இளமான்கள் களித்து விளையாடுவதையும்; தேனும் தினை மாவும் பாவில் உண்ண முடி வதையும், மிகத் தித்திக்கும் முக்கனியை நுகர முடிவதையும், கானக் குழலினிசையையும் அதன் ஊடே களி வண்டு மிழற்றுவதையும் கேட்க முடிவதைப் பிரித்துப் பிரித்துக் காட்டுவர்.

பாரதீயம் என்ற இந்நூல் 'பாரதீயம்' என்ற கட்டுரையைத் தொடக்கமாகக் கொண்ட பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்தக் கட்டுரைகளில் யான் பாரதியாரின் கவிதைகளில் ஆழங்கால் பட்டதைக் காட்டியுள்ளேன். இவை பாரதியாரின் பாடல்களின் நயத்தைப் பருகிச்சிட்டுக் காட்டுவதுடன் பாரதியாரின் பல்வேறு கொள்கைகளைப் பாங்குற எடுத்துக்காட்டும் விருந்துமாகும். இவற்றில் பாரதியாரின் ஆளுமைக் கோலங்களை ஒரு பல்லுருவம் காட்டியில் (Kaledoscope) காணும் காட்சிகளைப்போல் கண்டு மகிழ லாம். என்றாலும்,

பாவின் நயமெல்லாம்— யானும்
பகர வல்லேனோ
ஆவின் பாற்சுவையை—நாழி
அளந்து காட்டிடுமோ ?[3]

என்ற கவிமணியின் அளவுகோலின் வரையறையை எண்ணிப் பார்த்தே யாகவேண்டும். அப்போதுதான் அந்த அளவுகோலின்

---

2. **கவிமணி: மலரும் மாலையும்**-பாரதியும் பட்டிக்காட்டானும்-7. 8.
3. ஷை - ஷை - 22.

எல்லையை உண்மையிலேயே உணர முடியும். கவிதைகளைச் சுவைத்துக் கூறுகின்றவர்களின் கருத்துகளெல்லாம் அவர்களுடைய உணர்ச்சியையே சார்ந்திருக்கும் என்று கொண்டால் இங்குக் காணப் பெறும் கூற்றுகள் வாதத்திற்கு இடம் தரா. பல்லாண்டுகளாக யான் பாரதியாரின் பாடல்களைச் சுவைக்கும்போது குமிழியிட்டெழுந்த என் கருத்துகள் 'பாரதியாரின் நூற்றாண்டில்' பாகுபடுத்தப்பெற்று நூல் வடிவம் கொண்டு தமிழ்கூறு நல்லுலகில் நடையாடுகின்றன. பாரதியாரின் படைப்புகளில் ஈடுபாடு கொண்ட அன்பர்கள், அறிஞர்கள் என்னுடைய இந்த நூலிலும் கவனத்தைச் செலுத்து வார்கள் என்பது என் உறுதியான நம்பிக்கை. அத்தகைய பேற்றினை இந்நூல் பெறுமானால் அதனை என் பெறற்கரிய பேறாகக் கருதுவேன்.

இந்த நூலின் கைப்படியை அன்புடன் ஏற்று வெளியிட்ட **பழநியப்பா சகோதரர்கட்கு** என் நன்றி கலந்த அன்பினைப் புலப்படுத்திக்கொள்ளுகின்றேன்.

இந்த நூலுக்கு அழகிய அணிந்துரை நல்கிய டாக்டர் ஒளவை நடராசன் என் உடன்பிறவாச் சகோதரர் போன்றவர். டாக்டர் மு. **வரதராசனின்** பல நன்மாணாக்கர்களுள் ஒருவர். தமிழ் இலக்கியங் களையும் இலக்கணங்களையும் பழுதற ஓதிப் பயன் பெற்றவர். அடக்கமான பண்புடையவர். எல்லோரிடமும் எளிமையாகப் பழகுபவர். தமது 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும்' பேச்சால் பல்லாயிரக்கணக்கான மக்களின் மனத்தைக் கவர்ந்து வருபவர். இத்தகைய கெழுதகை நண்பர் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கினமைக்கு என் அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஜஸ்டிஸ் டாக்டர் **எஸ். மகராசன்** அவர்களை அறியாத தமிழர்களே இரார். சட்ட நுணுக்கங்களை அறியும் திறன் ஒருபுறமிருக்க, ஆங்கிலம், ஃபிரெஞ்சு என்ற இரண்டு அயல் மொழிகளிலும் வல்லுநர். தமிழ் இலக்கியங்களில் மிகவும் ஆழங்கால் பட்டுச் சுவைக்கும் பேரன்பர். **ரசிகமணி டி. கே. சி.**-யின் முதல் சீடர். ரசிகமணி டி. கே. சி. யின் வாழ்நாள் காலம் முதல் தாம் மறைந்த காலம் வரை ரசிகமணியின் புகழ் பரப்பி வந்த பெருமகனார். ரசிகமணி கண்ட வட்டத்தொட்டியின் தலைவராக இருந்து பல இலக்கியக் கூட்டங்களை நடத்திப் பல்லாயிரக்கணக்கான தமிழன்பர்கட்கு இலக்கிய ரசனை யினைத் தொற்று போல் பரப்பினவர். கம்பனையும் வள்ளுவனையும் கரைத்துக் குடித்தவர். இவர்தம் அருந்தமிழ் நூல்கள் அனைத்தும் ரசனையின் வடிவங்கள். இவர்தம் இலக்கியங்களை மேனாட்டாரும் அறியும்படி அரிய ஆங்கில நூல்களை வெளியிட்டு உதவியவர்.

செகப்பிரியரின் ஆங்கில நாடகங்களை ரசனைப் பண்புடன் தமிழ் மக்கட்குத் தமிழில் வழங்கினவர். திருமூலரின் இதயத்தை நன்கு அறிந்த பெரியார். இத்தனைக்கும் மேலாகப் 'பண் புடையார் பட்டுண்டு உலகு' என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கிய மாகத் திகழ்பவர். இவர் தூத்துக்குடி மாவட்ட நீதிபதியாக இருந்த நாள் முதல் (1949) மறைந்த நாள் வரை (1982) இவரை நன்கு அறிவேன். காரைக்குடிக் கம்பன் அடிப்பொடியால் எனக்கு அறிமுகம் ஆனவர். நான் காரைக்குடியில் பணியாற்றியபோது ஆண்டுதோறும் இவரைச் சந்தித்து அன்புரையாடும் வாய்ப்பு இருந்து வந்தது. திருப்பதியில் பணியாற்றியபொழுது அப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கம்பராமாயணக் கருத்தரங்கை இவரைக்கொண்டு தொடங்கி வைத்தேன். இவருடைய ஆங்கிலப் பேருரையைக் கேட்ட பல நூற்றுக்கணக்கான தெலுங்கு அன்பர்கள் தம் மூக்கின்மேல் விரல்வைத்து மகிழ்ந்தனர். இத்தகைய பேரன்பர்க்கு இந்த நூலை அன்புப்படையலாக்கி மகிழ்கின்றேன். அமரத்துவம் பெற்ற இவர்தம் ஆசியால் இலக்கியங்களைச் சுவைக்கும் பழக்கம் என்னிடம் மேன்மேலும் வளரும் என்பது என் திடமான நம்பிக்கை.

இச்சமயத்தில் பாரதியாரின்,

செய்யும் கவிதை பராசக்தி
யாலே செயப்படுங்காண்.[4]

பாட்டினிலே சொல்லுவதும்
அவள்சொல் லாகும்.[5]

என்ற வாக்குகளைச் சிந்திக்கின்றேன். பாரதியார் கருதுவதுபோல் இந்நூலை, யான் எழுதி வெளியிட்டதற்கு என்னுளே அந்தர் யாமியாக இருக்கும் திருவேங்கடமுடையானே காரணன் ஆவான். அவனே எனக்கு நோயற்ற நிலையையும் எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப்படுத்தி வருபவன். அவனே பாரதியார் வழிபடும் கண்ணனாகவும், கோவிந்தனாகவும், இராமனாகவும் இருந்து வருகின்றான்; அவனை மனம், மொழி, மெய்களால் வழுத்தி இறைஞ்சி வணங்குகின்றேன்.

எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய், இறைவ னே !இவ்

---

4. வி. நா. மா—26

5. தோ. பா : பேதை நெஞ்சே-5.

வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான
வெளியிலே, கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டி லெல்லாம்
களியிலே, கோவிந்தா ! நினைக்கண்டு
நின்னொடுநான் கலப்ப தென்றோ ?[6]

சென்னை - 600 040
டிசம்பர் 20, 1983,

ந. சுப்பு ரெட்டியார்


6. தோ. மா : கோவிந்தன்பாட்டு - 2

உள்ளுறை

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்



தேடிச்சோறு நிதம் தின்று-பல
சின்னஞ்சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி- கொடுங்
கூற்றுக் கிரையானபின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் : ஒரு கண்ணோட்டம்



மகாகவி சுப்ரமணிய பாரதியார்

a blog by muthukkumaran



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication

புதுவை(மை)க்கவிஞர்

சுப்பிரமணிய பாரதியார்

ஒரு கண்ணோட்டம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

மகாகவி பாரதியை ஏழு கோணங்களில் – பாட்டுக்கு ஒரு
புலவர், நாடு மொழி பற்றாளர், கல்விச்
சிந்தனையாளர், வைணவச்செல்வர், சக்திதாசர்,
சமரச நோக்கர், புதுக்கவிதை நாயகர் –
திறனாய்வு செய்யும் ஓர் அரிய நூல்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications



ISBN: 978-81-939317-2-1

eBOOK ~ மின் நூல்

புதுவை (மை) க்கவிஞர்

சுப்பிரமணிய பாரதியார்:

ஒரு கண்ணோட்டம்

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்



கோயிலுக்குப் போனாலும் சரி, போகா விட்டாலும் சரி, தெய்வத்தை வணங்கி னாலும் சரி, வணங்காவிட்டாலும் சரி, தெய்வம் நமக்கு அருள்புரிய தடையே தும் இல்லை. பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினாலே போதும், தெய்வ அரு ளுக்குப் பாத்திரமாகி விடுவோம்.

-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

புதுவை (மை) க்கவிஞர்

சுப்பிரமணிய பாரதியார்:
ஒரு கண்ணோட்டம்

முதற்பதிப்பு – 1990
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.215.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939317-2-1

9 788193 931721

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

டாக்டர் ந. கடிகாசலம்
முதுநிலை ஆய்வாளர்
பன்மொழிக் கல்வித் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமர்; கனவிலும் பிறர்க்குத் திங்கு நினையாதவர். பயன் கருதாது தமிழ்த்தொண்டாற்றி வருபவர். எளிய தமிழில் அறிவியல் நூல்களைத் தருபவர். அன்னார் புதுவைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவே ''புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண்ணோட்டம்'' எனும் இந்நூலாக உருவெடுத்துள்ளது.

கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பற்றிய இந்நூலில், மாபெரும் தேசியக் கவிஞரை ஏழு நோக்கில் காண்கிறார் பேராசிரியர். இது, 'சர் ஐசக் நியூடன் சூரிய ஒளியில் காணும் ஏழு நிறமாலை (SPECTRUM) போல்' (ப. 3) என்று பேராசிரியரே குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் அவர்களின் நேர்மையை இங்குப் பாராட்டியாக வேண்டும். புதுவைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்ற அவர் ஒப்புக்கொண்டதற்கு ஒரு காரணம்: 'இத்தகைய அறக்கட்டளைகளால் பல்கலைக்கழகங்கள் கரும்பு தின்னக் கூலி கொடுக்கின்றன'. (ப. 1). 'அறிவியலை அநுபவித்துக் கொண்டிருந்த என்னைத் திசை திருப்பித் தமிழுக்கு வரச் செய்தவை இவர்தம் பாடல்களே. இதனால், வித்துவான், எம்.ஏ., பிஎச். டி., வரை படிக்கச் செய்து தமிழையே என் பிழைப்பிற்கு வழியாக அமையச் செய்தன' (ப. 3). நூலின் இறுதியில், 'என் மனத்திலுள்ள கருத்துகளை ஏதோ ஒரு வகையில் வடித்துக் காட்டினேன். காட்டாதவை ஏராளமாக உள்ளன' (ப. 102) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு உள்ளத்தில் உள்ளதை — உண்மையை — வெளிப்படையாகக் கூறிவிடுவதே பேராசிரியரின் சிறப்பான பண்பாகும்.

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்ற பேராசை கொண்ட பாரதியார் பாட்டுக்கு ஒரு புலவர் என்பதைப் பல்வேறு கோணங்களில் ஆணித்தரமாகப் பேராசிரியர் நிலைநிறுத்துகிறார். பாரதியின் தேசிய கீதங்கள், ஆங்கில மொழியிலுள்ள

தேசிய கீதங்களுக்குப் பொருட்சுவையிலும் இசைச்சுவையிலும் எள்ளளவேனும் தாழ்ந்தவை அல்ல' (ப. 6) என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட பேராசிரியர், பாரதியாரின் பாடல்களில் காணப்படும் ஆழ்வார் பாசுரங்களின் செல்வாக்கை ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கிறார். அத்துடன், புதுக் கவிதைகளையும் அவர் விட்டு வைக்கவில்லை. பாரதியாரின் பாடல்களைத் திறனாய்வு செய்யும் வேளையில், தம் வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை—பாரதியார் பாடல்கள் தொடர்பானவற்றை—வெளிப்படுத்தவும் (பக்.12, 13) மறந்துவிடவில்லை. இதை ஓர் உத்தியாகவே கைக்கொள்கிறாரோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

மொழியையும் இனத்தையும் நாட்டையும் இணைத்துப் பாடிய 'பாரதீயம்' பாரதியார் தம் இணையற்ற கொள்கை (ப.23) என்கின்றார் பேராசிரியர்,

கல்விச் சிந்தனையாளர் எனும் பகுதியில் பாரதியாரின் கல்விச் சிந்தனைகளை மிகத் தெளிவாகப் பேராசிரியர் அலசுகிறார். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய அநுபவம் நிறைந்த பேராசிரியர், தாய்மொழியில் கல்வி கற்பதையும், அறிவியல் கல்வியைத் தமிழ்மொழி மூலம் பெறுவதையும் (பக். 33, 35) பாரதியார் பாடல்கள் வழிநின்று உறுதிப்படுத்துகின்றார். 'கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் தொடங்க வேண்டும் என்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும்' (ப. 33) எனச் சாட்டையடி தருகின்றார். 'புதுமுறைக் கல்வியைப் பற்றி பாரதியார் சிந்தித்ததாக ஊகம் செய்யத் தூண்டுகிறது' (ப.42) என்று பேராசிரியர் தெரிவிக்கின்றார்.

பாரதியாரை வைணவச் செல்வராகப் பேராசிரியர் காண்கின்றார். வருணாசிரம தர்மத்தைப் பற்றிப் பாரதியின் கண்ணன் கூறுவதைப்('நாலு குலங்கள் அமைத்தான்') படிக்கும்போது தந்தை பெரியாரே கண்ணனாக நின்று பேசுவது போல் (ப. 59) பேராசிரியர்க்குத் தோன்றுகிறது. 'இயற்கை அன்னையை இயலும்போதெல்லாம் பாராட்டுவது—போற்றுவது—பாரதியார் தம் அழுத்தமான சக்தி வழிபாட்டுக் கொள்கையைச் சார்ந்ததாகும்' (ப. 54) என்று பேராசிரியர் தீர்மானிக்கிறார். கோள்களின் ஆய்வுகள்

பிற்காலத்தில் நடைபெறலாம் என்ற சாத்தியக் கூறுகளைப் பாரதியார் கனவு கண்டார் (ப. 55) என்றும் பேராசிரியர் கருதுகின்றார்.

''நிறந்தனிற் கருமை கொண்டான்—அவன்
நேயமுறக் களிப்பது பொன்னிறப் பெண்கள்''

எனும் பாரதியின் பாடல் வரிகளுக்குப் பேராசிரியர் தரும் விளக்கம்: 'இன்றைய கருமைநிறக் காளையர் பொன்னிற மேனி மங்கையரை விரும்புவதுபோல், கண்ணனும் அத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருந்தான் போலும்' (ப. 58). நடைமுறை உவமைகளை நகைச்சுவையாக உதிர்ப்பதில் (ப. 91) பேராசிரியருக்கு நிகர் பேராசிரியர்தான். 'உவமைச் சக்கரவர்த்தி' என்றால் அது பேராசிரியர் ஒருவராகத்தான் இருக்க முடியும். கற்றோர் கூட 'சங்கம்' அமைத்துக்கொண்டு 'கலாட்டா' செய்வதை (ப. 60) பேராசிரியர் எள்ளி நகையாடுகின்றார்.

வைணவதத்துவத்தைப் போலவே சைவ தத்துவத்தையும் கரைத்துக்குடித்தவர் பேராசிரியர் என்பது சக்திதாசர் எனும் பகுதியில் (ப. 71-74) வெளிப்படுகின்றது. சக்தி பற்றிய மேலும் சில செய்திகளையும் (ப. 82) தருகின்றார்.

வசனமும் கவிதையும் ஒன்றாகுமா என்ற வினாவுக்குப் பேராசிரியர் தரும் விளக்கம் (ப. 99) ஏற்புடையதே. பாரதியார் புதுக்கவிதையின் பிதாமகன் (பாட்டன்) ஆகின்றார் (ப. 102) என்பது பேராசிரியரின் முடிவு.

'பாரதி, புதிய தமிழுக்குப் போடப்பட்ட பிள்ளையார் சுழி' என்பதில் ஐயமில்லை என்பது பேராசிரியரின் கணிப்பாகும்.

எளிய நடை, ஆழமான அறிவியல் பூர்வமான திறனாய்வுப் போக்கு, சிக்கலான சமய தத்துவங்களையும் எளிமையாக வெளிப்படுத்தும் பாங்கு. நடைமுறை உவமைகளை வாரி வழங்கும் பான்மை ஆகியவற்றால் பாரதியாரை ஒரு மாமனிதனாகக் காணும் ''புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண்ணோட்டம்'' என்ற இந்நூல் தமிழன்னைக்குப் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் சூட்டியுள்ள புத்தம் புதிய ஆபரணமாகும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல.

வாழ்க பேராசிரியர்! வளர்க அவர்தம் தமிழ்தொண்டு!

சென்னை-113
நாள் : 18-7-1990

ந. கடிகாசலம்

நூல் முகம்

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி !
மனத்தில் சலனம் இல்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்,
கனக்கும் செல்வம் நூறுவய(து),
இவையுந் தரநீ கடவாயே[1]

— பாரதியார்

இளமை முதல் இன்றுவரை அடிக்கடி படித்து, சிந்தித்து, ஆழங்கால் பட்டு வரும் பாரதியாரின் படைப்புகளை மீட்டும் ஒருமுறை படிக்கவும் சிந்திக்கவும் வாய்ப்பளித்தது புதுச்சேரி பல்கலைக் கழகம். அந்த வாய்ப்பே திரு. **ஆனந்தரங்க, கிருட்டிணசாமி பிள்ளை - திருமதி அம்சம்மாள்** அறக்கட்டளைச் சொற்பொழிவாக வடிவெடுத்தது. அந்தச் சொற்பொழிவு வடிவமே இன்று அச்சு வடிவம் பெறுகின்றது. சொற்பொழிவு நிகழ்த்த வாய்ப்பும் வசதியும் அளித்த பல்கலைக் கழகத்திற்கு— குறிப்பாக அதன் துணைவேந்தர் (டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியம் அவர்கட்கு) என் மனமுவந்த நன்றியையும் வணக்கத்தையும் புலப்படுத்திக் கொள்வதுடன் இப்பொழிவை என் பொறுப்பில் அச்சிட்டுக் கொள்ள இசைவளித்தமைக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுகின்றேன்.

இளமைத்துடனும் தமிழ் உணர்வுடனும் நல்ல நூல்களை வெளியிட்டு வருபவர் தேன்மழைப் பதிப்பக உரிமையாளர் திரு. **வெள்ளையப்பன்** அவர்கள். இந்தச் சிறு நூலையும் மனமுவந்து ஏற்று வெளியிட்டமைக்கும், புதுவைப் பல்கலைக் கழகம் விரும்பியபடி **ஐம்பது படிகள்** அன்பளிப்பாகத் தருவதற்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டமைக்கும் என் சார்பாகவும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சார்பாகவும் என் இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

---

1. விநாயகர் நான்மணி மாலை - 7

இந்தச் சிறு நூலும் ஒருவரது அணிந்துரையுடன் வெளிவரவேண்டும் என்பது என் அவா. பெரும்பாலும் என் நூல்கள் நான் அறிந்த பெரியவர்கள், அறிஞர்கள், புலவர்கள், உடன் பணியாற்றியவர்கள், நண்பர்கள், என் மாணவர்கள் இவர்களின் அணிந்துரைகளைப் பெற்று வெளி வருதலை ஒரு மரபாகப் போற்றி வருகிறேன். அந்த முறையில் என் அருமை மாணவர் —இலக்கண மொழியில் சொன்னால் தலை மாணாக்கர் டாக்டர் **என். கடிகாசலத்தின்** அணிந்துரை பெற்று இந்நூல் வெளி வருகின்றது. திருப்பதியில் நான் பணியாற்றியது போது இவர் எம். ஏ. பயின்றபோது (1971-73) என் மாணவர்; கற்பதை அக் கறையுடன் கற்றதால், முதல் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று இரண்டு தங்கப் பதக்கங் களைப் பெற்றார். பின்னர்ப் பல்கலைக் கழக மானிய ஆணையத்தின் படிப்பூதியம் பெற்று மூன்று ஆண்டுகள் என்னை வழிகாட்டியாகக் கொண்டு ஆய்ந்து பிஎச்.டி. பட்டமும் பெற்றார். ஆய்வில் வியத்தகு அக்கறை காட்டி னார். அக் காலத்தில் அனைத்திந்திய நிலையில் பல மாநிலங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் நான் கலந்துகொண்டபோதெல்லாம் இவரை என்னுடன் இட்டுக் கொண்டு செல்வேன். அக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவும் செய்வேன். அற்புத மாகக் கட்டுரைகள் தயாரித்துக்கொண்டு வருவார்; அறிஞர்களின் பாராட்டுதல்களையும் பெறுவார். என் அபிமான புத்திரன்போல் வயது முதிர்ந்த எனக்கு நான் ஏவும் சில செயல்களைச் செய்து உதவுவார். அவர் பட்டம் பெறுவதற்குமுன் நான் ஓய்வு பெற்றுவிட்ட படியால் அவரை நான் என் கீழ் விரிவுரையாளராகச் சேர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இல்லையென்றால் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் பணி யாற்ற வேண்டியவர். எனக்குப் பின்னர் ஏற்பட்ட விரும்பத்தகாத சூழ்நிலையில் இவர் அங்குப் பணியாற்ற ஏழுமலையானே விரும்பவில்லை என்று நினைத்துக் கொண்டேன்.

இறையருளால் என் சிறு உதவியால் 1979 முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. தமிழ் உணர்வும் உழைப்பின் சின்னமாகவும் இருந்த முதல் இயக்குநர் திரு. **ச. வே. சுப்பிரமணியன்** இவருக்கு நல்ல

பயிற்சி அளித்தமையாலும் அவரோடு நன்கு ஒத்து உழைத்தமையாலும் சிறந்த அறிஞராகத் திகழ்கின்றார். இடையில் நிறுவனத்தின் இசைவும் பணி உரிமையும் பெற்று ஐந்து ஆண்டுகள் (1983-88) சீனநாட்டு வானொலியில் தமிழ் மொழி வல்லுநராகப் பணியாற்றி நற்பெயருடனும் புகழுடனும் திரும்பி மீண்டும் நிறுவனத்தில் சேர்ந்துள்ளார். இவருடைய நல்லொழுக்கம், உழைப்பு, நிர்வாகத்துடன் ஒத்துப்போகும் பண்பு, உடன் பணியாற்றுவோரிடம் அன்புடன் பழகும் நற்பண்பு ஆகியவை இவர் உயர்பதவிகள் பெறுவதற்குப் பெருந்துணையாக அமையும். இத்தகைய நல்லவர், வல்லவர் அணிந்துரை வழங்கினமைக்கு என் நன்றியும் ஆசியும் என்றும் உரியவை.

இந்த நூல் வெளிவரக் காரணமாக அமைந்தும் எனக்கு உடல் நலத்துடனும் மன வளத்துடனும் பணியாற்றுவதற்கு அருள் புரிந்தும் வரும் என் மனத்தில் எழுந்தருளியிருக்கும் ஏழு மலையான் திருவடிகளைச் சிந்திக்கின்றேன்.

'வேங்கடம்'
AD-13 (Plot-3354)
அண்ணா நகர்,
சென்னை-600 040
20-7-1990

ந. சுப்பு ரெட்டியார்

தொ.பே. : 62 11 583

★

உள்ளுறை